உதயன்
23
www.onlineuthayan.com
34 பக்கங்கள் சுடர் 28 கதிர் 009 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 20 புதன்கிழமை (05/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# உயிர்களை சாய்த்தாலும் எம் உணர்வுகள் சாகாது

## ஆர்ப்பாட்டத்தில் முழக்கம்; பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,டிசெம்பர்5

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், பல்கலைக்கழகத்திற்குள் அத்துமீறி நுழைந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் மாணவர்கள் மீது நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டித்தும் யாழ். பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ''உயிர்களைச் சாய்த்தாலும் உணர்வுகள் சாகாது'' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர், 'உடலைக் கைது செய்யலாம் உணர்வுகளைக் கைது செய்ய முடியாது', 'மாவீரர் தினத்தை அனுஷ்டிப்போம்', 'மாணவர்கள் மீது வன்முறை புரியாதே', 'தாக்காதே தாக்காதே எம் மக்களைத் தாக்காதே', 'பல்கலைக்கழகத்திற்குள் இராணுவமே! உனக்கு என்ன வேலை?', 'இராணுவமே வெளியேறு', 'ஸ்ரீ ரெலோவே உன் துரோகத்தனத்தை நிறுத்து', 'கைது செய்த மாணவர்களை உடன்விடுதலைசெய்','சர்வதேசமே இனியும் மௌனம்

பார்க்க பக்கம் 4




### விபசாரத்துக்கும் தனி அமைச்சு ஐ.தே.க. கிண்டல்

கொழும்பு, டிசெ.5

விபசாரத்தை அங்கீகரித்து அது தொடர்பில் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கும் அமைச்சரொருவரை நியமித்து, வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பற்றாக்குறையை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்

பார்க்க பக்கம் 4

## பிரதம நீதியரசர் விவகாரம்; மேலும் மேலும் சூடுபிடிப்பு

### ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, டிசெ.5

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது தடவையாகவும் நீதியரசரை விசாரணை செய்தது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் காலை 10.15 மணியளவில் தெரிவுக்குழு விசாரணை, அதன் தலைவர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவின் தலைமையில் நடைபெற்றது. அடுத்தகட்ட விசாரணைகள் நாளை 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அதேவேளை, பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் நேற்று புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டங்கள்

பார்க்க பக்கம் 4

## மருத்துவ மாணவன் மட்டுமே நேற்று விடுவிப்பு

### மூவர் தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு, டிசெ.5

கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் மருத்துவ பீட மாணவன் கணேஷமூர்த்தி சுதர்சன் மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

''வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவர் விடுவிக்கப்

பார்க்க பக்கம் 4

## நீதியரசர் விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் பேசத் தடை

### சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.5


''பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணையை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைத் தவிர எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இவ்விடயம் குறித்து சபையில் பேசுவதைத் தவிர்க்கவேண்டும். அதேபோல், ஊடகங்களும் பிரதம நீதியரசர் தொடர்பில் தார்மீகப் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்'' - என்று சபாநாயகர் சமல்

பார்க்க பக்கம் 4

## மன்னார் நகரில் நேற்று பட்டினிப் போராட்டம்

மன்னார், டிசெ.5

இந்திய வீட்டுத்திட்டம் மன்னார் மாவட்டத்தில் அநீதியான முறையில் பகிரப்பட்டமையைக் கண்டித்து மன்னார் பிரஜைகள் குழுவும், மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு மற்றும் காணியுரிமைக்கான மக்கள் இயக்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதப்போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் இடம்பெற்றது.



போரின் போது இடம் பெயர்ந்து பல இன்னல்களைக் கடந்து மீளக்குடியேறிய மக்களுக்காக இந்திய அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் பயனாளிகள் தேர்வில் இடம் பெற்ற அநீதியைச் சுட்டிக் காட்டியும்,நீதியான முறையில் பகிர்வுகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தியும், போரினால் இடம்பெயர்ந்து மீண்டும் மீள்குடியேறி தொழில் துறைகளை இழந்த மீனவர்களுக்கு [illegible] குகளையும்,உபகரணங்களை

பார்க்க பக்கம் 4

### மின்பொறி வாக்குப்பதிவு விரைவில்

கொழும்பு, டிசெ.5

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் மின்னியல் வாக்குப்பதிவு முறை நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு ஒன்று விரைவில் நாடாளுமன்றில் கொண்

பார்க்க பக்கம் 4

### பல்கலை சூழலில் படை, பொலிஸ் விலக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.பல்கலைக்கழக சூழலிலிருந்து படையினரும் பொலிஸாரும் உடனடியாக விலக்கிக்கொள்ளப்படுவர் என யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க நேற்று

பார்க்க பக்கம் 4

## புத்தர் சிலை நிறுவுவதால் நல்லிணக்கம் ஏற்படாது

### தமிழ்க் கூட்டமைப்பு சீற்றம்

கொழும்பு, டிசெ.5

''அழிக்கப்பட்டுள்ள இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களை மீளக் கட்டியெழுப்புவதை விடுத்து வடக்கு - கிழக்கில் புதிதாக பௌத்த விகாரைகளைக் கட்டுவதால் மட்டும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது. இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படவேண்டுமானால் அங்கு அனைத்து விடயங்களிலும் சம பங்கீடு அவசியம்'' - இவ்வாறு வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றத்தில்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் தாக்குதலைக் கண்டித்து ஐ.நாவுக்கு மனு!

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரியும் ஐ.நாவுக்கு மனு ஒன்று அனுப்பிவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சகல அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சிவில் சமூகம், சட்டத்தரணிகள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரின் கையொப்பங்களுடன் இந்த மனு ஐ.நாவுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் -

✱ தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான சூழலை ஏற்படுத்தி தமிழர்களது தேசிய நினைவேந்தலுக்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

✱ தமிழ் மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்கள் தமது அரசியல் செயற்பாட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

✱ இச்சூழலை ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியமான முதல் நடவடிக்கையாக தமிழரின் தேசத்தையும், தாயகத்தையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும் - என்று முக்கிய பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழ் அரசியல் மற்றும் குடியியல் சமூகத்தினராகிய நாம் அண்மைக் காலமாக யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவ சமூகத்துக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் தொடர்பில் ஐ.நாவின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்த மனுவை அனுப்பி வைக்கின்றோம்.

மே 2009 இற்குப் பின்னராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளின் சுருக்கப்பட்டியல் பின்வருமாறு:-

1. ஒக்ரோபர் 2011 இல் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அப்போதைய தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரால் பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து 500 மீற்றருக்குட்பட்ட சன நடமாட்டமுள்ள பிரதேசத்தில் கூரிய ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டார்.

2. 18 மே 2012 அன்று முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தொடர்பிலான வைபவம் ஒன்று பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதைக் குழப்புவதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பரமலிங்கம் தர்சானந் பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து 200 மீற்றருக்குட்பட்ட சன நடமாட்டமுள்ள பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டார்.

3. 27.11.2012 அன்று 75 இற்கும் மேற்பட்ட சீருடை அணிந்த இராணுவத்தினரும் 50 இற்கு மேற்பட்ட சீருடை அணியாத புலனாய்வுப் பிரிவினரும் யாழ். பல்கலைக்கழக ஆண், பெண் விடுதிகளுக்குள் புகுந்து -குறிப்பாகப் பெண்கள் விடுதியில் மிகவும் மூர்க்கத்தனமாக நுழைந்து- சொத்துகளுக்குச் சேதம் விளைவித்ததோடு மாணவிகளையும் மிக மோசமான முறையில் அச்சுறுத்தியிருக்கிறார்கள்.

4. கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் 28 ஆம் திகதி அமைதியான முறையில் பல்கலைக்கழக முன்றிலில் அமைதிப் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது ஆயுதம் தரித்த பொலிஸாரும் இராணுவத்தினரும் தாக்கினர்.

5. கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் ஒரு வாரத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட இராணுவ ஒட்டுக்குழுவான சிறிரெலோவின் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியமை என்ற பொய்க் குற்றச்சாட்டொன்றின் பேரில் பல்கலைக்கழக மாணவர்களான கனகசுந்தரசாமி ஜெனமேஜெயன், சண்முகம் சொலமன், கணேசமூர்த்தி சுதர்சன் மற்றும் பரமலிங்கம் தர்சானந்த் ஆகியோரை பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் கைதுசெய்து இம் மனு எழுதப்படும் வரை வவுனியாவில் தடுத்து வைத்துள்ளனர். மேலும் பல பல்கலைக்கழக மாணவர்களையும், கடந்த காலங்களில் மாணவர் ஒன்றியங்களில் உறுப்பினர்களாக இருந்து தமது பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ள பழைய மாணவர் பலரையும் கைது செய்வதற்காகப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

6. கடந்த 28 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தைச் சென்றடைவதற்கான பிரதான வீதியான இராமநாதன் வீதியின் இரு மருங்கிலும் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு 50 இற்கு மேற்பட்ட முகமூடி அணிந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் நிலை கொண்டுள்ளனர். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உட்படப் பல்கலைக்கழக சமூகத்தினர் பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்ட பின்னரே பல்கலைக்கழகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமானது தமிழ்த் தேசிய உரிமைப் போராட்டத்துக்கு அதன் ஆரம்ப காலப் பகுதியிலிருந்தே மிகக் காத்திரமான பங்களிப்பை நல்கிவந்திருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலை வழிப்படுத்துவதில் புலமைத்துவ பங்களிப்பையும், செயல்சார் பங்களிப்பையும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் மாணவ சமூகம் தொடர்ச்சியாக வழங்கிவந்துள்ளது.

இத்தகைய பங்களிப்பை இல்லாமல் செய்யும் நோக்கிலும் பல்கலைக்கழக சமூகத்தை மௌனிக்கச் செய்யும் நோக்கிலும் காலத்துக்குக் காலம் அரச இயந்திரம் முயற்சித்து வந்துள்ளது. அதன் அங்கமாகவே போருக்குப் பின்னரான சூழலில் தொடர்ச்சியாக இச் சமூகத்திற்கெதிராக தொடுக்கப்படும் வன்முறைகள் நோக்கப்பட வேண்டும்.

போருக்குப் பின்னரான சூழலில் தொடரும் ஜனநாயக மறுப்பாக இவ் வன்முறைகளும் அச்சுறுத்தல்களும் பார்க்கப்படுவதற்கப்பால் தமிழ்த் தேசிய இருப்பைத் தொடர்ச்சியாக அழிக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக அமைகின்றன.

இறந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை, பேச்சுரிமை, ஒன்று கூடுவதற்கான உரிமை போன்ற உரிமைகள் மறுக்கப்படுவதற்கு இச்சம்பங்கள் உதாரணமாக இருக்கின்றன என்பதோடு தமிழர்கள் தனித்துவமான அரசியலை - அவர்களது தேசம் என்ற அந்தஸ்திலான அரசியல் முன்னெடுப்பை - இல்லாமல் செய்யும் நோக்கிலேயே அரச இயந்திரம் போருக்கு முன்னரும் பின்னரும் செயற்பட்டு வருகின்றது என நாம் கருதுகிறோம். இதனை சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பாக இற்றைவரை சர்வதேச சமூகம் எடுத்துள்ள நிலைப்பாடானது தாயகத்தில் வாழும் மக்களுடைய வாழ்வில் எத்தகைய காத்திரமான பங்களிப்பையும் செய்யவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். போரின்போது தமிழர்கள் அழிக்கப்படுவதை பார்த்திருந்த சர்வதேச சமூகம் தற்போதும் எமது தேசத்திற்கெதிரான கொடுமைகளைப் பார்த்து வாளாவிருப்பது சர்வதேச சமூகத்தின் மீதான நம்பகத்தன்மையை மேலும் பாதிப்பதாக இருக்கின்றது.

**தமிழக, புலம்பெயர் தமிழ் இளையோர் சமூகத்திடம் கோரிக்கை**

தமிழ்நாட்டு இளையோர் சமூகம் மற்றும் சர்வதேசத்தில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மாணவர்கள் உட்படத் தாயகத்து மக்கள்படும் இன்னல்களை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகத் தொடர்ந்தேர்ச்சியாக முயற்சியெடுக்க வேண்டுமெனவும், தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் கோருகின்றோம்.

நாம் சர்வதேச சமூகத்தைக் கோருவதாவது:

1. தமிழர்களது தேசிய நினைவேந்தலுக்கான உரிமையை உறுதிப்படுத்தல்.

2. தமிழ் மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் குறிப்பாக அவர்கள் தமது அரசியல் செயற்பாட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கான சூழலை ஏதுப்படுத்தலும்.

3. தமிழ் பிரதேசங்களில் ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான சூழலை ஏதுப்படுத்தல்.

4. மேலே (1), (2), (3) இல் சொல்லப்பட்டுள்ள சூழலை ஏற்படுத்துவதற்கான அத்தியாவசியமான முதல் நடவடிக்கையான தமிழரின் தேசத்தையும், தாயகத்தையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்தல்.

- இப்படி அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ங-13-4-5-14-23)

## நேற்றைய போராட்டத்தின் பதிவுகள்...










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அல்லாரை மக்களின் காணிகளை இதுவரை விடுவிக்காத படையினர்

## உறுதியளித்த காலக்கெடுவும் முடிந்தது

யாழ்ப்பாணம், டிசெ.5

அல்லாரைப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளில் இருந்து கடந்த மாத இறுதிக்குள் வெளியேறுவதாக இராணுவம் தெரிவித்த போதும் இதுவரை குறித்த காணிகளில் இருந்து அவர்கள் வெளியேறுவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அல்லாரைப் பிரதேசத்தில் முன்னர் இராமாவில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அது மூடப்பட்ட பின்னர் அந்தக் காணிகளில் படையினர் தமது முகாம்களை நிரந்தரமாக அமைத்தனர்.

மக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமித்ததால் 60 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. இந்த 60 குடும்பங்களும் இந்திய வீட்டுத் திட்டம் உட்பட ஏனைய உதவித் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டும் காணிகள் இல்லாமையால் அவற்றைப் பெற முடியாத நிலையில் உள்ளன.

இதனால் தமது காணிகளைப் படையினரிடம் இருந்து பெற்றுத் தருமாறு கோரி இந்த மக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் ஜூலை மாதம் முறைப்பாடு செய்திருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை இது தொடர்பில் விளக்கம் கேட்டு, 52 ஆவது படைப்பிரிவு, பலாலி படைத்தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்குக் கடிதங்களை அனுப்பியிருந்தது.

இதனையடுத்துப் பொது மக்களின் காணிகளில் இருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறுவதாகப் பலாலி படைத் தலைமையகத்தில் இருந்து மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இன்றுவரை குறித்த காணிகளில் இருந்து படையினர் வெளியேறவில்லை. அதற்கான முயற்சிகளையும் அவர்கள் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜிடம் கேட்டபோது,

''நேற்று (நேற்றுமுன்தினம்) குறித்த காணிக்குச் சென்ற பொதுமக்களிடம் காணிக்குரிய ஆவணங்களைக் கொண்டுவருமாறு இராணுவத்தினர் கோரியதாக முறைப்பாட்டாளர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

ஆனால் இன்றுவரை குறித்த காணி இராணுவத்தினரிடம் இருந்து விடுவிக்கப்பட்டதாகவே அல்லது விடுவிக்கப்படவில்லை என்றோ எவரும் முறையிடவில்லை'' - என்றார். (த-5)

## வீரசிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 48ஆவது நினைவு தினம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரமத விருந்தினராகவும், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், வடமாகாண மதுவரித் திணைக்கள ஆணையாளர் பி.கிறிஸ்ரிஜோசெவ், யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம், யாழ்.மக்கள் வங்கி முகாமையாளர் அ.பிரான்சிஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (த-13-17)

## நயினாதீவுக்குப் புதிய பஸ்

நயினாதீவுப் பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிகளுக்காக புதிய பஸ் ஒன்று விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தற்போது அங்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் இ.போ.ச பஸ் அடிக்கடி பழுதடைகின்றது. இதனால் அந்தப் பகுதி மக்களின் உள்ளூர் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுவதுடன் பணிகளும் தடைப்படுகின்றன. இதனை அடுத்துப் புதிய பஸ் ஒன்றை விரைவில் நயினாதீவுக்கு அனுப்பி வைப்பதற்கு வடபிராந்திய போக்குவரத்து சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (த-17)

## தங்கநகை திருடியவருக்கு 6 மாத சிறைத் தண்டனை

வடமராட்சி, டிசெ.5

கரவெட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் தங்க நகைகளைத் திருடிய திருகோணமலை வாசிக்குப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கரவெட்டி கொடிகாமம் வீதியில் உள்ள வீடொன்றில் பட்டப்பகல் வேளை வீட்டை உடைத்து 51 இலட்சத்து 30 ஆயிரத்து 980 ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடியதாக திருகோணமலையைச் சேர்ந்த அ.நடராஜலிங்கம் என்பவர் மீது நெல்லியடிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு ஒன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரிக்கு குற்றப் பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

திருடப்பட்ட நகைகளில் 91 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருகோணமலையில் உள்ள நகைக் கடை ஒன்றில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிசாரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மிகுதி நகைகள் எங்கே என நீதிபதி எதிரியைக் கேட்ட போது அவ்வளவுதான் இருந்தது என எதிரி பதிலளித்தார்.

இதனையடுத்து வீடு உடைத்தமை, நகைகளைத் திருடியமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களுக்குமாக தலா 3 மாத சிறைத் தண்டனை வீதம் எதிரிக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-8)

## சாவகச்சேரி நகர் பகுதியில் மதுப்பிரியர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ.5

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வீதிகளில் மாலை வேளைகளில் மதுப்பிரியர்களின் அடாவடிச் செயற்பாடுகளால் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக முறையிடப்பட்டுள்ளது.

தினமும் மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை நகரை அண்டிய வீதிகளில் உள்ள வெற்றுக் காணிகளிலும் வீதியோரங்களிலும் காணப்படும் இளைஞர் கூட்டம் அவ்வழியே செல்லும் மாணவிகள், யுவதிகள், முதியோர்கள் போன்றவர்களைத் தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும், இதனைத் தட்டிக் கேட்க முனைபவர்களைக் கூட்டமாக நிற்கும் இளைஞர்கள் தாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள வீதியிலும், இரு குளங்களிலும் அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் அவ்வழியே சைக்கிளில் வந்த முதியோர்களைத் தாக்கித் தள்ளி வீழ்த்தியதில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர் கும்பலுடன் இணைந்துள்ள 21 வயதுக்கு மேற்பட்ட சிலர் பொது மக்களுக்கு இடைஞ்சல் தருவதாகவும், இது தொடர்பாக பொலிஸார் மாலை வேளைகளில் ரோந்து சேவையை ஆரம்பிக்குமாறும் குறிப்பாக வைத்தியசாலைக்கு அருகிலுள்ள காளி கோயில் வீதி, அருகில் உள்ள ஆலயக் குளம், மதுபான நிலையத்துக்கு பின்புறம் உள்ள ரயில்பாதை ஆகியவற்றில் அவசியம் மாலை 6 மணி வரை ரோந்து சேவையில் ஈடுபட வேண்டுமெனவும் முறையிட்டுள்ளனர்.(த)

## சாதாரண தர மாணவருக்கு அ.அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.5


ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வசதி கருதித் தபால் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணியில் யாழ்.பிரதம தபாலகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

தபால் அடையாள அட்டைக்குப் பாடசாலையில் இருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இவை உடனடியாகவே அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதே வேளை இந்தத் தபால் அட்டைகளைத் தபாலகம் கடந்த வருடங்களில் நடமாடும் சேவை மூலம் விநியோகித்து வந்தன.

தபால் அடையாள அட்டைக்குப் பாடசாலையில் இருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இவை உடனடியாகவே அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடமாடும் சேவை மூலம் மாணவர்கள் சிரமம் இன்றி அடையாள அட்டைகளைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)



யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கனேடிய தூதரகத்தின் ஜனநாயகத்துக்கான ஆலோசகர் ஜொனதன் போல்டர், முதன்மைச் செயலாளர் ஈஸ்தர் லான்ரிங்ஸ் ஆகியோர் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். (த-14)

## நிகழ்வுகள்

### ஒளி விழா

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய ஒளி விழா இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை-கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு திரு.எஸ்.டபிள்யூ தேவகுமார் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார். (த-8)

* * *

பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வருடாந்த ஒளிவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் அருட் சகோதரி மேரியூட் லுமினா ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும், பங்குத் தந்தையுமான அருட் திரு ஜோன் மவுலிஸ் அடிகளார் கலந்து சிறப்பிப்பார். (த-8)

### பரிசளிப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 133ஆவது குருபூசை தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-13)

### நாவலர் குருபூசை

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 133 ஆவது குருபூசைத் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலனசபை தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-13)

### நினைவு நிகழ்வு

கடலில் மரணித்த ஹாட்லிக் கல்லூரி மைந்தர்களின் நினைவு நிதியம் நடத்தும் நினைவு நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இரத்ததான நிகழ்வும் இடம்பெறும். இதில் பழைய மாணவர்களும் பங்குபற்றுவார்கள். (த-253)

### ஒன்றுகூடல்

அராலி சரஸ்வதி ம.வியின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு இன்று பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக வலி.மேற்கு அரசசேவை ஒப்பந்தக்காரர் இராசநாயகம் சிறிரங்கன் கலந்து கொண்டு ''சமுதாயத்துடன் கூடிய மாணவர் கழகம்'' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர் நி.பானுகோபன் கலந்துகொள்வார்.(த-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபசாரத்துக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கிண்டலடித்தார். எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''தென் மாகாணசபை அமைச்சரொருவர் விபசாரத்தை நாட்டில் அங்கீகரிக்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இதற்கமைய அடுத் தாண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்திலுள்ள 5 ஆயிரம் கோடி ரூபா பற்றாக்குறையை நிரப்புவதற்கு விபசாரத்தை அங்கீகரித்து அதனூடாக வரியை அறவிட்டு அரசு வருமானம் ஈட்டப்போகின்றதா?

''அமைச்சர், பிரதி அமைச்சர் எனப் பதவிகளை வழங்கியாகி விட்டதால் தற்போது அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு இனி ஒரு துறை இல்லை. எனவே, விபசாரத்தை அங்கீகரித்து அது தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு அமைச்சரொருவரை அரசு நியமிக்கலாம்'' - என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

## மருத்துவ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பட்டார்'' - என்றார் பேச்சாளர்.

பரமலிங்கம் தர்ஷானந், கனகசபாபதி ஜெனமே ஜெயன், சண்முகம் சொலமன் ஆகிய மூவரும் தொடர்ந்தும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் விடுவிக்கப்படுவார்கள் என்று யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் மற்றும் பீடாதிபதிகள் அடங்கிய குழுவினருடன் இணைந்து அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. ஏனைய மூன்று மாணவர்களும் தொடர்ந்தும் வவுனியாவிலுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸ் அலுவலகத்திலேயே தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (சி-5)

## நீதியரசர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

பிரதம நீதியரசர் தொடர்பாக ஊடகங்கள் கடுமையாக விமர்சனம் செய்வதாகவும் அவருக்கு எதிராக சேறு பூசுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபாநாயகரிடம் முறையிட்டதைத் தொடர்ந்தே அவர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியவை வருமாறு:-

இதுவரை இருந்த அனைத்துப் பிரதம நீதியரசர்கள் தொடர்பிலும் எமக்குப் பிரச்சினை கிடையாது. ஒரேயொரு பிரதம நீதியரசர் தொடர்பில் மாத்திரம்தான் இப்போது பிரச்சினை உள்ளது.

இந்தப் பிரதம நீதியரசர் தொடர்பில் ஊடகங்கள் கடுமையாக விமர்சனங்கள் செய்கின்றன; சேறு பூசுகின்றன. இதை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

நாடாளுமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்த விரும்பவில்லை. பிரதம நீதியரசர் பற்றி சில செய்திகள் உள்ளன. நான் நாடாளுமன்றத்துக்கு வந்துகொண்டிருந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் ''பிரதம நீதியரசர் வெட்கம், பிரதம நீதியரசர் வெட்கம்'' எனக் கத்திக் கொண்டிருந்தனர். இது நிறுத்தப்படவேண்டும். இவ்வாறு செய்யத் தேவையில்லை.

அரச ஊடகங்கள் முழுமையாக நீதிமன்றத்தைத் தாக்குகின்றன. இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் எப்படி செய்திகளை வெளியிடவேண்டும் என்று சபாநாயகரால் அறிவுறுத்தல் வழங்கமுடியும். பிரதம நீதியரசரின் கௌரவம் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார்.

அப்போது குறுக்கீடு செய்த அமைச்சர் மேர்வின் சில்வா தனது கணவரின் செயற்பாட்டுக்குத் துணைபோனதால்தான் பிரதம நீதியரசருக்கு இந்த நிலைமை என்று கூறினார்.

அப்போது ''பிரதம நீதியரசர் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைத் தவிர எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதம நீதியரசர் தொடர்பில் சபையில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அவர் தொடர்பில் செய்திகளை வெளியிடும்போது ஊடகங்கள் தார்மீகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்'' என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கூறினார்.

அத்தோடு ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறினார். (சி)


தெரிவுக்குழு முன் ஆஜராவதற்குப் புறப்பட்ட நீதியரசருக்கு மதத் தலைவர்கள் ஆசீர்வாதம் வழங்கிய போது...

## பிரதம நீதியரசர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நடைபெற்றன.

பிரதம நீதியரசருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னரே திடீரென அப்பகுதியில் அரச தரப்பின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

நீதித்துறையைச் சார்ந்தோர், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், மக்கள் என அனைத்துத் தரப்பும் திரண்டு நீதியரசருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியதுடன், நீதித்துறையின் சுயாதீனத்தை வலியுறுத்தியும் கோஷம் எழுப்பினர். 45 அமைப்புகளை அங்கத்தவர்களாகக் கொண்ட சுதந்திர நீதித்துறைக்கான கூட்டமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

நாடாளுமன்றத்துக்குச்செல்வதற்கு முன்னர் தமக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடைபெறும் புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குப் பிரதம நீதியரசர் வருகை தந்திருந்தார். இதன்போது அங்கு குழுமியிருந்தவர்கள் நீதியரசருக்கு ஆதரவாக உரத்துக் குரலெழுப்ப ஆரம்பித்தனர். நீதித்துறையினரும் நீதியரசருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

**மதத் தலைவர்களின் ஆசியுடன் புறப்பட்டார் ஷிராணி**

அதன் பின்னர் மதத் தலைவர்களின் ஆசியுடன் தெரிவுக்குழு விசாரணைக்கு புறப்பட்டார் நீதியரசர். அவர் காரில் ஏறும்போது அங்கு மீண்டும் சூழ்ந்தவர்கள் தமது அமோக ஆதரவை நீதியரசருக்கு உரத்த குரலில் தெரிவித்தனர்.

சட்டத்தரணிகள், மாவட்ட நீதிபதிகள், நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள், பௌத்த பிக்குமார்கள், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பெரும் கூட்டமொன்று புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்தது.

அதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கட்சியும் நீதியரசருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான ஆர்ப்பாட்டமொன்றை நேற்று நடத்தியது.

**வழக்கு விசாரணை முடக்கம்**

நேற்று புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். நீதித்துறை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் நேற்று நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகள் யாவும் முடங்கின. அவை பிறிதொரு திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**ஐ.தே.க. சபையில் கண்டனம்**

பிரதம நீதியரசருக்கு எதிராக இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் தனது கண்டனத்தைத் தெரிவித்தது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரித்துக்கொண்டிருக்கும்போது இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்து அவரை அவமதிக்கவேண்டிய தேவை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி சபையில் தெரிவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாதவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்ற வழியை மறைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தடுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க சபையில் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கும் தெரிவுக்குழு கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் தடவையாகக் கூடியது. அடுத்த அமர்விற்கு நீதியரசரை அழைப்பது என முடிவெடுக்கப்பட்டு இரண்டாம் கட்ட விசாரணை 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. நீதியரசருக்கு அறிவிப்பும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தெரிவுக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணை கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவின் தலைமையில் நடைபெற்றது.

தமது சட்டத்தரணிகள் சகிதம் இதன்போது தெரிவுக்குழுவில் முற்பட்டிருந்த நீதியரசரிடம் ஒரு மணித்தியாலம் 37 நிமிடங்கள் விசாரணை நடத்தப்பட்டது. அதன்பின்னர் தமது தரப்பு நியாயங்களை முன்வைக்க (பதிலை வழங்க) நீதியரசர் கால அவகாசம் கோரினார். அவருக்கு ஒரு வாரகால அவகாசம் 30ஆம் திகதிவரை வழங்கப்பட்டு விசாரணை நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. (சி)

## மன்னார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யும் வழங்குவதில் காட்டப்படும் பாரபட்ச செயற்பாடுகளைக் கண்டித்தும் இந்த உண்ணாவிரதம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களையும் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள்,உப தலைவர்கள்,உறுப்பினர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள்,அருட்தந்தையர்கள் என பலதரப்பட்டோரும் இதில் கலந்து கொண்டனர்.

மாலை 3 மணியளவில் மக்களின் கோரிக்கை அடங்கிய மனு மன்னார் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (த-12)

## புத்தர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வலியுறுத்தினார். தெரிவுக்குழு மட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்ட, பத்து மூத்த அமைச்சர்கள் மற்றும் 22 அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின் போதே செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

மன்னாரில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 256 வீடுகள் முஸ்லிம் குடும்பங்களுக்கும், 124 வீடுகள் தமிழ் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பட்டினிப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நிவாரணம் வழங்கும்போது அரசியல்வாதிகளினதும், அமைச்சர்களினதும் தலையீடுகள் தடுக்கப்படவேண்டும். அமைச்சரின் தலையாட்டிப் பொம்மையாக ஆளுநர் இருக்கின்றார். இதனால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி நிவாரணங்கள் சமமாகப் பங்கிடப்படவேண்டும்.

வன்னி மாவட்டத்தில் 20 கோயில்கள், 15 தேவாலயங்கள், பெருமளவிலான பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களே மீளக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று அரசு கருதுகின்றதா?

பாதிக்கப்பட்ட இந்த வழிபாடுகள் மீளக் கட்டாத அரசு அங்கே புதிதாக பௌத்த விகாரைகளைக் கட்டுகின்றது. இப்படியான நிலையில் எப்படி இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படும்?

இன்று இனப்பிரச்சினை போன்று மதப் பிரச்சினைகளும் பூதாகரமாக வெடித்துள்ளன. நாடு தீப்பற்றி எரியவேண்டும் என்றால் [illegible] தூண்டி மோதல்களை ஏற்படுத்திவிட்டால் போதும். அதனைத்தான் இன்று அரசு மேற்கொள்ளுகின்றது. - என்றார். (சி)

## மின்பொறி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டுவரப்படும் என ஆளுங்கட்சிக் கொரடா நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

* உலகின் பல நாடுகளில் மின்பொறி வாக்குப்பதிவுகள் நடத்தப்படுகின்றன. இதனை நம் நாட்டிலும் சாத்தியப்படுத்தலாமா?
* இந்தியாவில் இந்தமுறை இப்பொழுது நடைமுறையில் உள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி பெற்றுக்கொள்ள முடியுமா?
* இவ்வாறு செயற்படுவதன் மூலம் தேர்தல்களின்போது இடம்பெறும் ஊழல், மோசடிகளையும் தவிர்க்க முடியும்.
* வாக்காளர் பதிவுகள் கணினி மயப்படுத்தப்படும்போது வாக்காளர் இடாப்பை அரசியல் கட்சிகளுக்கும் வழங்க முடியுமா? என ரவி கருணாநாயக்க கேள்விகளை எழுப்பினார்.

பிரதமரிடம் எழுப்பப்பட்ட இந்தக் கேள்விகளுக்கு ஆளும்கட்சிக் கொரடாவான தினேஷ் குணவர்தன பதிலளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

இயந்திரம் மூலம் வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக இந்தியாவின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பரிசீலிக்கப்பட்டபோது ஏகமனதான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இயந்திரம் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு செயற்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

இயந்திரம் மூலம் வாக்குப்பதிவுகளை நடத்தும் வகையில் தற்போதுள்ள தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும்போது அவை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (சி)

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
உறுதியளித்தார். பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் ஆகியோரை படைத் தரப்பு சந்தித்து கலந்துரையாடியது. இதன்போதே மேற்படி உறுதி வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சுற்றாடலிலிருந்து உடனடியாக படையினரை விலக்கிக் கொள்ளவேண்டும் என பல்கலைக்கழக பிரதிநிதிகள் கேட்டதற்கிணங்க இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழக வளாகத்துக்கு அப்பால் பொலிஸார் மட்டும் கடமையில் ஈடுபட்டிருப்பர் எனவும் எனவும் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனிவரும் நாள்களில், அரசியல்வாதிகள், படையினர் போன்றோர் பல்கலைக்கழகத்துக்குள் அனுமதியின்றி நுழையகூடாதெனவும் படையதிகாரி உத்தரவிட்டுள்ளார். நேற்றையதினமே யாழ். பல்கலைக்கழக சூழலில் இராணுவக்கெடுபிடிகள் குறைக்கப்பட்டு படையினரும் அங்கிருந்து விலகியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (ஐ)

## உயிர்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
காக்காதே' போன்ற கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜக் கட்சிகளின் உறுப்பினர்கள் உட்பட அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், சட்டத்தரணிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கு எதிராக அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் குறித்து ஐ.நாவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள மனுவில் பொதுமக்களின் கையெழுத்துக்களும் அங்கு பெறப்பட்டன. வழக்கமாக இத்தகைய போராட்டங்களின் போது குவிக்கப்படும் பொலிஸார் நேற்று ஓரங்கட்டப்பட்டிருந்தனர். போக்குவரத்துப் பொலிஸார் மட்டும் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிட்ட வாகனங்கள் ஏலத்தில்; வன்னிப் பகுதி மக்கள் அதிர்ச்சி

கிளிநொச்சி,டிசெ.5

***இறுதிப் போரின் போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களை இராணுவத்தினர் ஏலத்தில் விற்பனை செய்வதாக வெளிவந்த செய்திகளால் தமது வாகனங்களைக் கைவிட்டு இப்போதும் அவைகளைத் தேடி அலையும் மக்கள் பலர் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.***

வன்னியிலே முள்ளிவாய்க்கால் வரை நடைபெற்ற போரின்போது ஏராளமான மக்கள் தமது வாகனங்களைக் கைவிட்டு செட்டிகுளம் முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

பின்னர் மீள்குடியமர்ந்த மக்கள் போர் நடைபெற்ற முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்று வாகனங்களைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. பின்னர் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு அனுமதித்த போதிலும், தமது வாகனங்கள் நிறுத்தப்பட்ட இடங்களில் காணப்படவில்லையென மக்கள் பலரும் தெரிவித்திருந்தனர்.

பல வாகனங்களின் முக்கிய பகுதிகள் கழற்றி எடுக்கப்பட்டு வெறும் கோதாகக் காட்சியளித்தமையையும் மக்கள் அவதானித்துள்ளனர்.

மேலும், முதல்நாள் பார்த்து அடையாளம் காட்டப்பட்ட வாகனங்கள் மறுநாள் சென்றபோது மாயமாக மறைந்திருந்ததையும் சில வாகனங்கள் இனம் காணமுடியாதவாறு எரியூட்டப்பட்டிருப்பதையும் மக்கள் கண்டு மனம் வருந்தினர்.

வன்னியில் வாழ்ந்த மக்கள் பலர் இப்போதும் தமது வாகனங்களைத் தேடி அலைவதைக் காண முடிகின்றது.

இந்த நிலையில் அண்மைக்காலமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாகங்கள் கழற்றப்பட்ட நிலையிலும், பழுதுபட்ட நிலையிலும் வெவ்வேறு பகுதிகளில் காணப்பட்ட வாகனங்கள் பாரம் தூக்கியின் துணையுடன் பெரிய வாகனங்களில் ஏற்றப்பட்டு இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு விசுவமடு, வள்ளிபுனம் ஆகிய பகுதிகளில் ஒன்றாகச் சேர்த்து அடுக்கி வைக்கப்பட்டதைப் பலரும் அவதானித்துள்ளனர்.

தற்போது இராணுவத்தினர் வாகனங்களை ஏல விற்பனை செய்கின்றார்கள் என்றும், அவை யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து தென் பகுதிக்கு ஏற்றப்படுகின்றன என்றும் செய்திகள் வெளிவந்துள்ளமையால் தமது வாகனங்களைத் தற்போதும் தேடி அலைந்து திரியும் வாகனச் சொந்தக்காரர்கள் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளதை அவதானிக்க முடிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-426)

### பண்டிகைக் காலத்தை முன்னிட்டு

## தென்பகுதி வியாபார நிலையங்கள் இம்முறை மன்னார் விளையாட்டரங்கில்

மன்னார், டிசெ.5

எதிர்வரும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு மன்னாரில் தென்பகுதி வியாபரிகளுக்கான வியாபார நிலையங்கள் அனைத்தும் பொது விளையாட்டரங்கில் அமைக்கப்படவுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மன்னார்.பஸார் பகுதியில் உள்ள பிரதான வீதியில் குறித்த பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டமையினால் மன்னார் வர்த்தகர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதோடு போக்குவரத்துக்கும் நெருக்கடி நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் இம்முறையும் குறித்த பிரச்சினைகள் இடம்பெறக் கூடாது என்ற தீர்மானத்துக்கு அமைவாக மன்னார்நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் அண்மையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதன் போது சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டு குறித்த வர்த்தக நிலையங்களை இம்முறை பொது விளையாட்டு மைதானப் பகுதியில் அமைப்பது குறித்த தீர்மானத்தை ஆதரித்தனர்.

இந்த நிலையில் குறித்த பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அனைத்தும் இந்த முறை மன்னார் பொது விளையாட்டு மைதான பகுதியில் அமைக்கப்படவுள்ளன என்று மன்னார் நகர உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.

(க-12)

### தேசிய அடையாள அட்டையைப் பெற

## கொழும்பு செல்ல வேண்டுமா? தடுமாறும் மன்னார் மாணவர்

மன்னார், டிசெ.5

இதுவரை தேசிய அடையாள அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் கொழும்பு சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதால் மாணவர்களும், பெற்றோரும் கவலையடைந்துள்ளனர்.

மன்னார் பாடசாலைகளினூடாக தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பலருக்கு இதுவரை அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை. இந்த நிலையில் இவ்வாறான மாணவரைக் கொழும்பு சென்று இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களால் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாணவர்களும், பெற்றோரும் கவலை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் வாரம் ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கடந்த பல மாதங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபர்களால் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஆள்பதிவு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக விண்ணப்பித்திருந்த மாணவர்களுக்கு பாடசாலைகளினூடாக அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பல மாணவர்களுக்கு அடையாள அட்டைகள் இன்னும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் அந்த மாணவர்களுக்கான அடையாள அட்டைகளைக் கொழும்பு சென்று ஆள்பதிவுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் கடிதங்களை வழங்கியுள்ளனர்.

இதனால் அந்த மாணவர்கள் தடுமாற்றம் அடைந்துள்ளனர். பாடசாலை அதிபர் அல்லது பொறுப்பாசிரியர்கள் முயற்சி செய்தால் அனைத்து மாணவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளையும் நேரடியாகச் சென்று பெற்று வந்திருக்க முடியும் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்முறை ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைப் பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## பாடசாலை ஒளி விழாக்கள்

அக்கராயன், டிசெ.5

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9.30 மணியளவில் ஒளிவிழா இடம்பெறும் என்று பாடசாலைச் சமூகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கும், அக்கராயன் இலங்கை அமெரிக்கன் திருச்சபையின் முன்பள்ளியில் பிற்பகல் 1.30 மணிக்கும் ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் ஒளி விழா இன்று புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் எஸ். சுப்பிரமணியேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் எம்.ராஜ்குமார் கலந்து கொள்வார்.

(க-400-18)

## மரண அறிவித்தல்

## முத்துவேலு சிவபாக்கியம்



**சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு சிவபாக்கியம் நேற்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற முத்துவேலுவின் அன்பு மனைவியும், ரஞ்சினிதேவி, ராகினிதேவி, சுந்தரகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், முருகதாஸ், தர்சிகா ஆகியோரின் மாமியும், காண்டீபன் (நீகன்), காயத்திரி, பிரசன்னா, நினேஸ், நஸ்மி, சுதிர், சௌமி, சமீர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஸ்மிதா, அக்ஷிதா ஆகியோரின் பூட்டியும், பரமாபதி - சிவபாக்கியத்தின் மைத்துனியும், நவரத்தினத்தின் (சந்திரன்) மாமியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**ஐயனார் வீதி, கல்வயல்,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## பஸ் சேவை நடத்த முன்வந்தால் வழித்தட அனுமதி வழங்கப்படும்

### துணுக்காய்ப் பிரதேச செயலர் அறிவிப்பு

அக்கராயன், டிசெ.5

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள கிராமங்களுக்கு இடையில் பஸ் சேவைகளை நடத்த முன்வருபவர்களுக்கு வழித்தட அனுமதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காயின் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், தென்னியங்குளம், உயிலங்குளம் உட்பட பல கிராமங்களில் வசிக்கும் மக்களும், பாடசாலை மாணவர்களும் கடந்த 3 ஆண்டுகளாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

மல்லாவி மத்திய கல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம் என்பவற்றுக்குச் செல்லும் மாணவர்களும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

மல்லாவி, அக்கராயன் மருத்துவமனைகளுக்கு நோயாளர்கள் செல்வதிலும் இடர்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் கிராமங்களுக்கு இடையே போக்குவரத்துப் பணியில் ஈடுபட விரும்பும் பஸ் உரிமையாளர்களுக்கு வழித்தட அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு துணுக்காய்ப் பிரதேச செயலர் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கண்டாவளையில் மைதானம் தேவை

கிளிநொச்சி கண்டாவளையிலுள்ள ரூபன் விளையாட்டுக் கழகத்திற்கென பொது விளையாட்டு மைதானம் இல்லாமையால் தாங்கள் போட்டிகளுக்கான பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அந்த விளையாட்டுக் கழக வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விளையாட்டுக் கழகம், கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பொதுக்காணி ஒன்றில் தமக்குரிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் இவ்வாறு ஒரு விளையாட்டு மைதானம் அமையும் போது தமது வீரர்களும் இந்தப் பிரதேச மாணவர்களும் பயிற்சி மேற்கொண்டு பல்வேறு சாதனைகளை ஈட்ட முடியும் எனவும் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரும், சமூக ஆர்வலர்களும் பிரதேச மக்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூரில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.5

மட்டக்களப்பில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மீட்டுள்ளனர்.

தளவாய்க் கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் மகேஸ்வரன் (வயது 31) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தளவாய் பொலிஸ் சாவடி பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை ஏறாவூர் மற்றும் தளவாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

(28371)(2-6)

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(முத்தா வீதியும் கச்சேரி–நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
12.07.1970

ஆண்டவன் மடியில்
28.11.2010

அமரர்
## நாகலிங்கம் பவதீஸ்வரி (வவா)
B.F.Acc(Hons)

எங்கள் அன்புக் கடைக்குட்டியே நீ மறைந்து
இரண்டு ஆண்டுகளம்மா
உம்மை பிரிந்து நாங்கள் ஆறாத் துயரில் வாடுகின்றோம்.
ஆண்டுகள் இரண்டென்ன நூறாகிலென்ன
எம் நினைவு மறந்திடுமோ.
நீ எங்கிருந்தாலும் பேரானந்த பெருவாழ்வு வாழும்மா.

மீசாலை கிழக்கு, ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
மீசாலை.
021 227 0415

\- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அருணாசலம் மகேஸ்வரி



வேலணை கிழக்கு, வேலணை 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் மகேஸ்வரி திங்கட்கிழமை 03.12. 2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கமுத்து தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகமுத்து தம்பதியரின் மருமகளும், மங்கையர்க்கரசி (மலேசியா), காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் ஜெயச்சந்திரன், ஆனந்த கௌரி (தொழில் வழிகாட்டல் அதிகாரி- தீவக வலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மார்க்கண்டு (மலேசியா) மற்றும் பத்மரஞ்சனி, குமாரதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவகுமார், சுமதி, சிந்துஜா, திலக்சன், திவாகர் ஆகியோரின் பாச மிகு பேர்த்தியும், பவித்திரா, யதுஷா, சிவானுஜன், அபிநயன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கணேசன், பத்மநாதன் மற்றும் சொக்கலிங்கம், நித்தியலெட்சுமி, தனலெட் சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நகுலேஸ்வரி மற்றும் செல்வத்துரை, அம்பலவாணர் ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2012) புதன் கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு. (28046)(5-6-7)

தகவல்:
ஜெயச்சந்திரன் (மகன்).

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி
**பொன்னையா தெய்வேந்திரன்**
அவர்கள் நீதி அமைச்சினால், அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சென்ற 23.11.2012 ஆம் திகதியன்று சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி செ.லெனின்குமார் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் முதலாம் வகுப்பைச் சேர்ந்த ஓய்வு நிலைத் தபாலதிபர் ஆவார். சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் தற்போது ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சாவகச்சேரி காரியாலயத்தின் ஆலோசகராகவுள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத்தின் உப செயலாளராகவும்,சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கப் பொதுச்சபை உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார். சிறந்த சமூக-சமய சேவையாளராக விளங்குகின்றார். இவர் மேலும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ, இவரது மக்கள் சேவை தொடர இறையாசி வேண்டிப் பிரார்த்திப்பதோடு மனதார வாழ்த்துகின்றோம்.

பரமநாதன்–ரூபி குடும்பம்(சாவகச்சேரி)
தவேந்திரன் குடும்பம்(ஜேர்மனி), தனலட்சுமி (சாவகச்சேரி).

(18087)(6.7.5)

பஜாஜ்

# இன்று - நாளை - என்றுமே

வசதியாக, இலாபமாக எவ்விதத்திலும் முன்னிலையில் இருக்கும்

## பஜாஜ் முச்சக்கர வண்டி

இக்காலத்தின் குடும்ப வாகனமாக உள்ள பஜாஜ் முச்சக்கர வண்டி இன்றும், நாளையும் உங்களுக்கு இலாபத்தை மற்றும் வசதியை பெற்றுத்தருவதோடு, வாகனங்களுக்குள் முன்னிலையில் திகழ்வதற்கான பல அம்சங்களையும் கொண்டுள்ளது.

## இன்று போல் நாளையும்....

- குறைந்த பணத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய புதிய வாகனம்
- குறைந்த செலவில் பராமரிக்க கூடிய வாகனம்
- ரயர், உதிரிப்பாகங்கள், காப்புறுதி, வருடாந்த அனுமதிப்பத்திர பணம் போன்றவற்றுக்கான செலவை மிக குறைவாக கொண்டுள்ள வாகனம்
- லீசிங் முறையில் வாங்கும் போது குறைந்த தவணைக் கட்டணத்தை செலுத்தக் கூடிய வாகனம்
- மேடு, சமாந்தர மற்றும் குறுகிய பாதைகளிலும் இலகுவாக ஓட்டிச்செல்லக் கூடிய வாகனம்
- தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு மேலும் வசதியை பெற்றுத்தரும் வாகனம்
- கூடிய பெறுமதிக்கு மீள் விற்பனை செய்யக் கூடிய வாகனம்



ரூ.460,880/-

## இக்காலத்தின் குடும்ப வாகனம் - பஜாஜ்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, கிட்ட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வேண்டாத வினை விளையாதிருக்க மனமொன்றி முனையுமா அரசு?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வளாகத்தில் வைத்தே மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டமை மற்றும் மாணவர்கள் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் யாழ். நகரில் நேற்றுப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் பொது அமைப்புகள் பலவும் பங்கேற்றன.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் என்று பல தரப்பினரும் பெரும் எண்ணிக்கையில் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு படையினரின் அடாவடித் தனத்துக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான படையினரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து ஏனைய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பேராதனை, றுகுணு, களனிப் பல்கலைக்கழகங்களிலும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பயிலும் மாணவர்கள் ஏற்கனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை மற்றும் கைது செய்யப்பட்டமை குறித்து அனைத்துலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் வலியுறுத்தியுள்ளது. கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த வியாழக்கிழமையே பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலையும் கைதுகளையும் கண்டித்து ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடாகி வருகிறது. பிரிட்டன் தமிழர் பேரவை தமது ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்வரும் திங்கட்கிழமையை (பத்தாம் திகதியை) நாள் குறித்துள்ளது.

எனினும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு கறுப்பு மை பூசி அதனைத் திசை திருப்பி, தனக்கு வாய்ப்பான அர்த்தங்களையும் அசைவுகளையும் சுயபுத்தியுள்ள எவராலும் வகுத்துப் பகுத்து இனங்காண இயலும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் - படையினர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டதால் நிலைமை பூதாகரமாகிவிட்டது. மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பகிஷ்கரிப்புகள், குடாநாடு முழுவதிலுமே பெரும்பதற்றத்தைத் தோற்றுவித்துவிட்டது.

மாவீரர் தின நாளில் ஆரம்பமான இந்தப் பிரச்சினை நூர்ந்து போவதற்கான- தீர்வுக்கான அறிகுறி எதுவும் இப் பத்தி எழுதப்படும் வரை தென்படவில்லை. அது பெரும் துரதிர்ஷ்டமே.

அமெரிக்கா கவலை தெரிவிக்கும் அளவுக்கு, போர் முடிவடைந்த பின்பு வடக்கில் இடம்பெற்ற மோசமான அரசியல் குழப்பம் என்று வெளிநாட்டு ஊடகம் ஒன்று கருத்து வெளியிடும் அளவுக்கு யாழ். பல்கலைக்கழகச் சம்பவத்தை சர்வதேசம் பெரிதாக அறிந்திருக்கவில்லை. அரசு தற்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது.

இப்பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டு வரும் இன்றைய நிலையிலாவது அரசு இது விடயத்தில் தலையிட்டு கைதான பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் விடுவிக்க வேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது மாணவர்கள் மீதான தாக்குதல் மட்டும் அல்ல. அது தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்கி வைப்பதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாகவும் கொள்ளத்தக்கது.

தமது உறவுகளை நினைவுகூர மாணவர்களுக்கு உரிமை உண்டு. தமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக்கேட்க மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அதேபோன்று செய்திகளை எந்தக் களத்திலும் சென்று திரட்ட ஊடகவியலாளர்களுக்கு உரிமை உண்டு.

யாழ். பல்கலைக்கழகச் சம்பவத்தின்போது இந்த மூன்று உரிமைகளும் படைத்தரப்பால் பறிக்கப்பட்டு விட்டன. இராணுவம், பொலிஸ், புலனாய்வுத்துறை மூன்றும் இணைந்து நடத்திய தாக்குதல் குடாநாட்டு மக்களை பல சந்தேகங்களை மனதில் கொள்ள வழிவகுத்து விட்டது.

ஒன்றுகூடும் உரிமைகளையும் ஊடக சுதந்திரத்தையும் இச்சம்பவம் கேலிக்கிடமாக்கி விட்டுள்ளது. அமைதியாக நடைபெற்ற நிகழ்வை அமளிதுமளியாக்கியமை தமிழ் மக்கள் மத்தியில் அரச படையினர் மீது அச்சத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

அமைதி வழியில் செயற்பட்ட மாணவர்கள் மீது அடிதடி நடத்தி அவர்களது ஆவேசத்தைப் படையினர் தூண்டிவிட்டுள்ளனர். யாழ். பல்கலைக்கழகம் எத்தனையோ விற்பன்னர்களை உருவாக்கி உள்ளது. அதன் செயற்பாடுகளைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளே தற்போது இடம்பெற்று வருகின்றனவா என்ற சந்தேகத்தை இன்னொரு பக்கத்தில் எழவைக்கிறது.

நாடுமுழுவதும் இராணுவ மயமாகி வருகிறது. நீதி செத்துக் கொண்டிருக்கின்றது. பிரதம நீதியரசர் மீது குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் அவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். மொத்தத்தில் நாட்டில் நீதியும், சுதந்திரமும் இல்லாத சூழ்நிலைதான் நிலவுகிறது.

1970இல் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைத்தபோது அரும்பியதுதான் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம். மீண்டும் அத்தகைய நிலைக்கு இட்டுச் செல்லாமல், பல்கலைக்கழக மாணவர் விவகாரங்களில் நீதியாகவும், நியாயமாகவும் நடந்துகொள்ள வேண் ணடும். கைதான நான்கு மாணவர்களையும் உடனடியாக விடுவிப்பதன் மூலமே தற்போது உருவாகிவரும் நெருக்கடியைத் தளர்த்த முடியும்.

தமிழ் மக்கள் மத்தியில் வேண்டாத வினைகளை தோற்றுவிப்புதைத் தவிர்க்க அரசு மனமொன்றி முனையுமா? அது எப்போது?

# தமிழ்ச் சங்க ஒழுங்கை விவகாரம்; கூட்டம் முடிவின்றி ஒத்திவைப்பு

## அமைச்சர் வாசு, முதலமைச்சர் இருவரும் வரவில்லை

கொழும்பு,டிசெ.5

கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கை விவகாரம் தொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டம் முடிவின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்வதாக உறுதியளித்திருந்த மேல்மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தமிழ் மொழி நடைமுறைப்படுத்தல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அதேபோல் கலந்துகொள்வதாக எதிர்பார்க்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரும் நேற்றைய கூட்டத்துக்கு வருகை தரவில்லை.

மேல்மாகாணசபை முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில், கொழும்பு மாநகரசபை மேயர் முசம்மில், மேல்மாகாணசபை உறுப்பினர்கள் நல்லையா குமரகுருபரன், எஸ். ராஜேந்திரன், மாநகரசபை உறுப்பினர்கள் வேலணை வேணியன், பிரியாணி குணரத்ன, மன்சில், ரோய் போகாவத்த ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மாநகர ஆணையாளர் மற்றும் மாகாணசபை, மாநகரசபை அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

வெள்ளவத்தை 5ஆம் ஒழுங்கையை தமிழ்ச் சங்க ஒழுங்கை எனப் பெயர் மாற்றம் செய்வதை ஆட்சேபிக்கும் பெரும்பான்மையினத்தவர் சிலரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களில் ஒரு சிலர் 5ஆம் ஒழுங்கையில் வசிப்பவர்கள் அல்லர் எனக் கூட்டத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், கொழும்பு தமிழ்ச் சங்கம் ஒரு வர்த்தக நிறுவனம் என்ற அவர்களின் ஆட்சேபனையும் நிராகரிக்கப்பட்டது. இந்த பெயர் மாற்றம் சட்டவிதிகளின்படி முறையாகச் செய்யப்பட்டுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இந்த நிலைப்பாட்டை கொழும்பு மாநகர மேயர் முசம்மிலும், ஆணையாளர் பத்ராணி ஜெயவர்த்தனவும் உறுதிப்படுத்தினார்கள். இந்நிலையில் இது பற்றிய தமது அறிக்கையை மேல் மாகாண முதலமைச்சரிடம் சமர்ப்பிப்பதாக, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உறுதியளித்தார். முதலமைச்சரின் இதுபற்றிய முடிவையடுத்து தமது நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என கொழும்பு மேயர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் இது பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

நேற்றைய கூட்டம் நமது கட்சியால் ஏற்பாடு செய்யப்படவில்லை. அது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மேல்மாகாண சபை முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சரால் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் முதலமைச்சர் பிரசன்ன குணவர்த்தனவும், மத்திய அரசின் மொழி நடைமுறைப்படுத்தல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்துகொள்வதாக உறுதியளித்தார்கள். ஆனால் மாகாணசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் இந்த இருவரும் கலந்துகொள்ளவில்லை- என்றார்.

(த)

# தேசிய சுகாதார வாரம் 10 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

வடமாகாணத்தில் தேசிய சுகாதார வாரம் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடமாகாண சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இரா.இரவீந்திரன் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

தேசிய சுகாதார வாரத்தை அனுஷ்டிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரையும் சுகாதார அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

மக்கள் பங்களிப்புடனான சுகாதார சேவை, சுகாதாரக் கல்வி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சுகாதார வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

முதல் நாள் பொதுமக்கள் தினமாகவும், இரண்டாம் நாள் துப்புரவு தினமாகவும், மூன்றாள் நாள் சுகாதார விழிப்புணர்வு தினமாகவும், நான்காம் நாள் சுகாதாரக் கண்காணிப்பு தினமாகவும், ஐந்தாம் நாள் தற்காப்பு தினமாகவும், ஆறாம் நாள் திட்ட அடைவு தினமாகவும், ஏழாம் நாள் ஆன்மிக தினமாகவும், எட்டாம் நாள் தனிப்பட்ட தினமாகவும் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

மேற்படி தினங்களில் வடமாகாண உள்ளூராட்சிச் சபைகள், பிரதேச செயலகங்கள், வைத்திய அத்தியட்சகர் பிரிவுகள், சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஆகியன உரிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரா.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (த-50)

# துண்டி மயானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலப் போரினால் பெரிதும் சேதப்பட்டு அழிவடைந்த நிலையில் உள்ள இந்த மயானத்தைப் புனரமைப்பதற்கு மயானப் பரிபாலன சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

போதிய அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படும் இந்த மயானத்துக்கு முதலில் பாதுகாப்பு மதில் அமைக்கப்படவுள்ளது.

இந்த மயானத்தைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் பல தடவைகள் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆயினும் அதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் யாழ்.மாநகரசபை மேற்கொள்ளவில்லை.

இதனை அடுத்து மயானப் பரிபாலன சபையினர் மக்களின் உதவியுடன் மயானத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர். (த-17)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, டிசெ.5

வரணிப் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் பணிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பரிவினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

குடியிருப்புகள் செறிவான பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து, வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் வரணி வடக்கு பகுதியில் ஆரம்பக்கப்பட்டுள்ள தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, இயற்றாலை, தாவளை, நாவற்காடு, குடமியன், மந்துவில் ஆகிய பகுதிகளில் இடம்பெறுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த-9)

# சாவகச்சேரி நகரசபையின் வாசிப்பு மாத நிகழ்வு

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை, சாவகச்சேரி, நுணாவில் ஆகிய பொதுநூலகங்களின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மு.ப 9மணிக்கு நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நகரசபை தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.ஜெயகரனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் சி.துரைராஜா, மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அலுவலக உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கிக்கிளை முகாமையாளர் என்.கருணைராஜ் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி ப.நே.கூ.சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், சாவகசேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை தவிசாளர் ப.நடராஜா, சாவகச்சேரி நகர்ப்பிரிவு கிராம அலுவலர் வி.சிவசரணநாதன் ஆகியோரும் கலந்து கொள்வார். (த-9)

# சாவச்சேரி ஆஸ்பத்திரிக்கு உள்ளக தொலைபேசி

தென்மராட்சி,டிசெ.5

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு உள்ளக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு பரிவர்த்தனை நிலையமும் செயற்படத் தொடங்கியுள்ளது.

வைத்தியசாலையில் 40 க்கும் மேற்பட்ட பிரிவுகளுக்கு உள்ளக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தொலைபேசி தொடர்புகளுக்காக 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடக்கூடிய வகையில் மூன்று தொலைபேசி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் வைத்தியசாலைக்கு 021 227 0661, 021 227 0662 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மீனவர்களுக்கு மட்டும் எரிபொருள் மானியம் இல்லை


## முல்லைத்தீவில் தான் இந்த பாரபட்சம்

முல்லைத்தீவு, டிசெ. 5
முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மீனவர்களுக்கான எரிபொருள் மானியம் வழங்கப்படுகின்ற போதும் மீள்குடியேறிய தமிழ் மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் தற்போது 110 வரையான பெரும்பான்மை இன மீனவக் குடும்பங்கள் குடியேறியுள்ளன. இதைவிட 250 இற்கும் மேற்பட்ட பெரும்பான்மையின மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மீனவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் மற்றும் மானிய எரிபொருள் விநியோகம் என்பன வழங்கப்பட்டு வருவதுடன் இலகு கடன் திட்டங்களும் கிடைத்து வருகின்றன.

ஆனால் இந்தப் பகுதிகளில் வாழ்ந்து கடந்த கால இடம்பெயர்வின்போது பெரும் சொத்தழிவுகளையும் உயிரிழப்புகளையும் சந்தித்து எதுவித வசதிகளும் இன்றி மீள்குடியமர்ந்த மிகவும் வறிய கடற்றொழிலாளர்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளோ அல்லது மானிய எரிபொருள் விநியோகமோ வழங்கப்படுவதில்லை எனவும் இந்தப் பகுதி கடற்றொழிலாளர்களும், பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கவலை தெரிவித்துள்ளனர். (த-6)



துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் மழை காரணமாகப் பிரதான வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர். மல்லாவி நகர் பகுதியில் வடிகால்கள் சீராக இன்மையால் பிரதான வீதிகளில் மழைநீர் தேங்கிக் காணப்படுகிறது. (ஐ-115)

### மாற்றுவலுவுடையோர் நிகழ்வு முல்லையில்

முல்லைத்தீவு, டிசெ. 5
முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் மாற்றுவலுவுடையோருக்கான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டிய மாற்றுவலுவுடையோர்தினநிகழ்வு கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் வரோட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் வரோட் நிறுவன இணைப்பாளர் அருட்தந்தை தேவராஜ், வள்ளிபுனம் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் மாற்றுவலுவுடையோர் சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகத்தினர் மாற்றுத் திறனாளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-6)

# வெள்ளம் ஏற்பட்டால் எதிர்கொள்ளத் தயார்

## வவுனியா இடர் முகாமைத்துவ பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5
இனிவரும் நாள்களில் மழை அதிகளவு பெய்யலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில் வெள்ளப் பெருக்கு அபாயம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள வவுனியா மாவட்ட இடர் சேவை முகாமைத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் ஜானக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இதுவரை வவுனியா நகரில் 40 இடர் முகாமைத்துவ சேவைக் குழுக்களும், செட்டிகுளம் பிரதேசத்தில் 20 இடர் முகாமைத்துவ சேவைக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள கிராம சேவகர் ஊடாக தெரிவு செய்யப்படுகின்றன.

இவர்களில் முன்னெச்சரிக்கைக் குழுவுக்கு 5 பேர், மீட்புக்குழுவுக்கு 5 பேர், நிவாரணக்குழுவுக்கு 5 பேர், வளங்களைப் பாதுகாக்கும் குழுவுக்கு 5 பேர், சுகாதாரக் குழு 5 பேர் என நியமிக்கப்படுகின்றனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் இந்த இடர் சேவை முகாமைத்துவக் குழு கிராம ரீதியில் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் முழுமைப்படுத்தப்படவில்லை.

இடர் முகாமைத்துவ அமைச்சு ஊடாக போதிய நிதி வந்தடையாமையால் கடந்த காலங்களில் சில நிவாரணப் பணிகளை முழுமையாகச் செய்யமுடியாமல் போய்விட்டது. கடும் வறட்சியின் போது குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய தண்ணீர் இறைக்கும் இயந்திரம், தண்ணீர்த் தாங்கி, கிணறு தோண்டும் பணி உட்பட பல்வேறு பணிகளை எமது அமைச்சு முன்னெடுத்தாலும் வறட்சிக்கான நிவாரணத்தைப் போதியளவு வழங்கமுடியாமல் போய்விட்டது.

அடுத்து வெள்ளம் ஏற்படின் அதற்கான முன்னேற்பாட்டுப் பயிற்சிகளை எமது இடர் முகாமைத்துவ சேவைக் குழுக்களுக்கு வழங்கி வருகின்றோம். வரும் இடர்களை எதிர்கொள்ளும் துணிச்சலும் மக்களுக்கு இருக்க வேண்டும். - என்றார். (ஐ-402)

# விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள்

## மடு வலயத்தில் விசேட ஏற்பாடு வெளிமாவட்ட ஆசிரியர் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5
மடு வலயப் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கு இந்த மாதம் பாடசாலை விடுமுறைக் காலத்தில் சுமார் 3 மணிநேரம் மேலதிக வகுப்புகளை நடத்துமாறு ஆசிரியர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதால் வெளிமாவட்ட ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மடுவலயப் பாடசாலைகளில் டிசெம்பர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் மூன்றாம் தவணை விடுமுறை நாள்கள் விடப்படவுள்ளன.

இந்த நிலையில் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் 3 மணிநேரம் தரம் - 5 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்த வேண்டும் என மடுவலய அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது.

இதனால் வவுனியா - யாழ்ப்பாணம் ஆகிய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது விடுமுறைக் காலத்தை சரியாகப் பயன்படுத்த முடியவில்லை என்கின்றனர். அத்துடன் தாம் விடுமுறைக் காலத்தில் மேலதிக கற்கை நெறிகளைக்கூடத் தொடரமுடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மன்னார் மடுவலய கல்விப் பணிப்பாளர் எ.ஜெ.குரூஸ் உடன் தொடர்புகொண்டு கேட்டபோது:-

மடுவலயம் கற்றலில் மிகவும் பின்தங்கிய நிலைக்குச் சென்றுகொண்டிருப்பதால் 2013 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை மேம்படுத்துவதற்காக வலய ஆசிரியர்களுடன் கலந்துரையாடி, விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கு தீர்மானித்தோம்.

3 மணிநேரம் மேலதிக வகுப்புகளை நடத்தவும், இதில் நெருக்கடி உள்ள ஆசிரியர்களுக்கு பதிலாக வேறு ஆசிரியர்களைக் கொண்டாவது நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதில் கட்டாயம் எதுவும் இல்லை. ஆசிரியர்களின் கடமையுணர்வே முக்கியமாகும் - என்றார். (ஐ-14)

# அடம்பனில் மாற்றுத் திறனாளியின் ‘முடியாத ஏக்கங்கள்’ நூல் வெளியீடு

## சனியன்று சிறப்பாக நடந்தது



மன்னார், டிசெ.5
மன்னார் அடம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியொருவரின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் அடம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி வே. சந்திரகலா (வெற்றிச் செல்வி) என்பவரின் ‘முடியாத ஏக்கங்கள்’ என்ற சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா கடந்த முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளியான செல்வி சந்திரகலாவின் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்பு அம்சம் என்னவெனில் அவர் மாற்றுத்திறனாளிகள் மீதான கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வை ஒழுங்கு செய்தமையாகும்.

போரில் ஒரு கண்ணும் கையும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் செல்வி சந்திரகலா தனது சிறுகதைகளிலும் மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகத்தின் பார்வை மாறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார். இந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு மன்னார் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பல மாற்றுத்திறனாளிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் ஒரு கையை இழந்த சிறுமி அன்பரசியின் நடன நிகழ்வு அனைவரையும் நெகிழ்ச்சிக்குள்ளாக்கியது. நூலுக்கான மதிப்பீட்டுரையை வழங்கிய அம்பிகைபாலனும் இரண்டு கால்களும் வழங்காத ஒரு மாற்றுத்திறனாளி ஆவார்.

இந்த நிகழ்வில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர் த. தனசீலன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் மா. சிறிஸ்கந்தகுமார், ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர். அடம்பன் பங்குத்தந்தை அருட்திரு. லக்கோன்ஸ் பிகிராடோ, மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்திரு இ.செபமாலை, அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் ம.கிறிஸ்ரியான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூல் நயப்புரையை மன்னார் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையின் தமிழ் ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிலுவேஸ்திரன் வழங்கினார். ஏற்புரையாற்றிய சந்திரகலா மாற்றுத்திறனாளிகள் நம்பிக்கையோடு வாழவேண்டும் எனவும், இவர்கள் மீது சமூகம் அக்கறையும், கரிசனையும் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தார். மன்னார் மாற்றுத் திறனாளிகள் அமைப்பான தேனீ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# கூட்டுறவுச் சங்கத்தின் காணி படையினர் வசம்

முல்லைத்தீவு, டிசெ. 5
ஒட்டுசுட்டான் மன்னாகண்டல் பகுதியில் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பொதுத் தேவைக்குரிய காணி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக பிரதேச பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சுமார் பத்து ஏக்கர் காணி.**

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மன்னாகண்டல் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் மற்றும் ஏனைய பொதுத் தேவைகளுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சுமார் பத்து ஏக்கர் காணி ஆகியன அந்தப் பகுதி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பகுதியில் பௌத்த விகாரை ஒன்றையும் படையினர் அமைத்து வருவதாக பிரதேச பொதுமக்களும் பொது அமைப்புப் பிரதிநிதிகளும் குற்றம் சாட்டியுள்ளனர்.

எதிர்காலத்தில் பொதுத் தேவைகளுக்கான கட்டுமானங்கள் மேற்கொள்வதில் காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படலாம் என்றும் இந்தப் பகுதியில் இருந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கட்டடம் உடைக்கப்பட்டு அந்தப் பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நகரப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கல் மார்ச்சில்

வடமராட்சி,டிசெ.5
பருத்தித்துறை நகரப் பகுதிக்கும் அதனை அண்டியுள்ள பகுதிகளுக்குமான குடிதண்ணீர் விநியோகம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்துக்கான கிணறுகள், தண்ணீர்த்தாங்கிகள் அமைத்தல், நிலத்தில் குழாய்கள் இணைத்தல் ஆகிய பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

வல்லிபுரக் கோவிலின் கிழக்குப் பகுதியில் உற்சவத்துக்குச் செல்லும் பாதை ஓரத்தில், குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கென நான்கு கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் ஒரு கிணறு அமைக்கும் பணி பூர்த்தி அடைந்து விட்டது.

இந்தக் கிணறுகளில் இருந்து பெறப்படும் தண்ணீர் பெரிய குழாய் மூலம் புலோலி அறுபது பாகைக் கிணற்றடியில் நிறுவப்பட்டுள்ள பெரிய தாங்கியில் சேமிக்கப்பட்டு அதிலிருந்து குறிப்பிட்ட இடங்களுக்கு குடிதண்ணீர் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும். 13 இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் தண்ணீர் சேமிக்கக்கூடிய இந்தத் தண்ணீர்த் தாங்கியின் கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் 694 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பெரிய தண்ணீர் விநியோகத்திட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நகரப் பகுதி மற்றும் அதனை அண்டியபகுதிகளுக்கும் முதற் கட்டமாகக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் எஞ்சிய கரை யோரப் பகுதி, மற்றைய பகுதிகளுக்கு அடுத்த கட்டமாக குடிதண்ணீர் விநியோகத்துக்கான பணிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புலோலி ஆனைவிழுந்தான் பகுதியில் பருத்தித்துறை நகரசபை, பிரதேச சபைகள் மற்றும் தனியாரினால் கொட்டப்பட்ட குப்பை கூளங்கள் யாவற்றையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சிரமங்களுக்கு மத்தியில் அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளது. வல்லிபுரக் கோயிலில் ஆனைவிழுந்தான் பகுதியில் உள்ள நல்ல தண்ணீர் வளம் குப்பை கூளங்களால் பாதிக்கப்படும் என்பதாலேயே இந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த குப்பை கூளங்கள் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்றும், எதிர்காலத்தில் ஆனைவிழுந்தான் பகுதியில் எவரும் குப்பை கூளங்களைக் கொட்டக் கூடாது என்றும், அவ்வாறு கொட்டுபவர்களைக் கண்டறிந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த ஜெயசீலன் தெரிவித்தார். (த-8)

## கட்டாக்காலி கால்நடைகளை பிரதேச சபை கட்டுப்படுத்தும்

யாழ்ப்பாணம், டிசெ.5
காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரதேச சபை மீண்டும் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக சபையின் உபதலைவர் க.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பணியில் விவசாய சம்மேளனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆயினும் அந்த நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை.

இதனால் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மீண்டும் பிரதேச சபை ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-17)

## மதகுகளின் புனரமைப்பை ஜனவரிக்குள் முடிவுறுத்துக

யாழ்ப்பாணம், டிசெ.5
அரியாலை செம்மணி வீதி மற்றும் கடற்கரை வீதி ஆகியவற்றில் உள்ள மதகுகளின் புனரமைப்புப் பணிகள் அடுத்த ஜனவரி மாதத்துக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மதகுகளின் புனரமைப்புப் பணிகளும் தற்போது மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

இந்த மதகுகளின் புனரமைப்புப் பணிகளால் இந்த வீதிகள் ஊடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மதகுகளை விரைவாகப் புனரமைப்புச் செய்யுமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கேட்டுள்ளது.

இவற்றின் புனரமைப்புப் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரிக்குள் முடிக்கப்பட வேண்டும் எனவும் அவர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

## ஓட்டோவில் ஆடுகளை கடத்தியவர்கள் சிக்கினர்

வடமராட்சி,டிசெ.5
ஓட்டோவில் மிருக வதைக்காக ஆடுகளை ஏற்றிச் சென்ற இருவருக்கு பருத் தித்துறை நீதிமன்றத்தில் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருந்து மிருகவதைக்காக ஆடுகளை ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி மற்றும் ஒருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நெல்லியடிப் பொலிஸார் வழக்கை நெறிப்படுத்தினர்.

விசாரணையின் போது எதிரிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக் கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம், இரு குற்றச்சாட்டுகளுக்கும் இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஆடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட ஓட்டோ உரிமையாளரை உரிம ஆவணங்களுடன் நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-8)



மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் வலி.தெற்குப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட 'சிறுவர் துஷ்பிரயோகம்' தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வில் ஒரு காட்சி. (த)

## வெளிமாவட்டங்களுக்கான பஸ்தரிப்பிடம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்.டிசெ.5
வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ் தரிப்பிடம் இன்று புதன்கிழமை முதல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில் உள்ள காணிக்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ் தரிப்பிடம் இயங்கி வரும் காணிக்கு அருகில் உள்ள வண்ணான் குளத்தை ஆழமாக்கும் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனால் தற்காலிகமாக பஸ் தரிப்பிடம் மாற்றப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே வெளிமாவட்டங்களுக்கான பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் இடமாற்றப்பட்டுள்ள யாழ்.பஸ் தரிப்பிடத்திலிருந்து பயணத்தை மேற்கொள்ளலாம் எனவும் அவர் கூறினார். (த-14)

## மணியம்தோட்டத்துக்கு கேபிள் தொலைபேசிகள்

யாழ்ப்பாணம்.டிசெ.5
கொழும்புத்துறை மணியந்தோட்டப் பகுதிக்கு விரைவில் ரெலிக்கொம் நிறுவனத்தின் கேபிள் தொலைபேசி இணைப்புவசதிகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது கொழும்புத்துறை துறைமுகச் சந்தி வரையான பகுதிக்கு கேபிள் தொலைபேசி இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துறைமுகச் சந்தியில் இருந்து மணியந்தோட்டப் பகுதிக்கும் விரைவில் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கென மணியந்தோட்டத்தில் புதிதாக 'இம்சான்' பரிவர்த்தனை அலகு ஒன்று விரைவில் நிறுவப்பட்டு இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. (த-17)

## அநாதரவான முதியவர் கைதடி இல்லத்தில்

யாழ்ப்பாணம்.டிசெ.5
கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முன்பாக அநாதரவாக விடப்பட்டிருந்த 80 வயது முதியவர் ஒருவரை இல்ல நிர்வாகம் மனிதாபிமான அடிப்படையில் தற்காலிகமாக உள்வாங்கியிருப்பதாக அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

புத்தூரைச் சேர்ந்த ஆறுமுகம் பிறைசூடி என்ற முதியவரே குடும்பத்தினரால் கைவிடப்பட்டு அநாதரவாக உள்ளார். கடந்த சில மாதங்களாக பிச்சை எடுத்துத் தனது வாழ்க்கையை ஓட்டி வந்த இவர் தற்போது கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முன்னால் அநாதரவாக காணப்பட்டார். அத்துடன் தன்னை இல்லத்தில் இணைத்துக் கொள்ளுமாறும் அவர் கோரியிருந்தார்.

இல்ல அத்தியட்சகர் சம்பந்தப்பட்ட முதியவரின் விவரங்களைப் பெற்று சமூக சேவைகள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தினார்.

வயோதிபரின் எதிர்காலம் மற்றும் மனிதாபிமானம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவர் தற்காலிகமாக இல்லத்தில் இணைத் துக் கொள்ளப்பட்டுள்ளார். (த-17)

## மாமரங்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

வடமராட்சி,டிசெ.5
மாங்கனிகளின் விளைச்சலை அதிகரித்து தரமான மாம்பழங்களைப் பெற்றுக் கொள்ள மாமரச் செய்கையாளர்களுக்கு உலக விவசாய ஸ்தாபனம் தேவையான ஆலோசனைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் உபகரணங்களை அந்தப் பகுதி விவசாய போதனாசிரியர்கள் ஊடாக வழங்கியுள்ளது.

இது தொடர்பாக உலக விவசாய ஸ்தாபனம் மாமரச் செய்கையாளர்களுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலில் :-

தரமான மாங்கனிகளை தொடர்ச்சியான அறுவடையில் பெற மாமரத்தின் எல்லாப் பகுதிக்கும் சூரிய ஒளி கிடைக்குமாறு மாமரங்களைத் தகுந்த பருவங்களில் கத்தரிப்பதன் மூலம் தொடர்ச்சியான அறுவடையைப் பெறலாம். தேவையேற்படும் போது மென்சுத் தரிப்பின் மூலம் மரத்தைப் பராமரித்துத் தரமான மாங்கனிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாமரங்களைக் கத்தரிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம். தாவரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சூரியஒளி கிடைக்கப் பெறும். பருவகாலங்களில் மட்டுமன்றி வருடம் முழுவதும் மாங்கனிகளைப் பெறலாம்.

நீர், உரவகைகளுக்குத் தாவரங்கள் காட்டும் விளைத்திறன் அதிகரிக்கும். தாவரப் பராமரிப்பு இலகுவாக்கப்படுவதுடன் தாவரத்தின் அழகுத் தன்மையும் பேணப்படும். மாமரங்களைக் கத்தரிப்பதற்கு விவசாயத் திணைக்களம் ஊக்குவிப்புக் கொடுப்பனவை, உபகரணங்களை வழங்கும்.

இவற்றைப் பெற்று தகுந்த பருவகாலங்களில் மாமரங்களைக் கத்தரித்து தரமான மாங்கனிகளை தொடர்ச்சியான அறுவடையில் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேலதிக விவரங்களை மாமரச் செய்கையாளர்கள் தத்தம் பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. (த-8)

## மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயம் புதிதாக கட்டியெழுப்ப ஏற்பாடு

### நாளை புனிதரின் திருச்சொரூப பவனி

மிருசுவில்.டிசெ.5
மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.குரு முதல்வர் அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறும் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப வீதிப் பவனி இடம்பெறும்.

தொடர்ந்து புதிய ஆலயத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா குரு முதல்வர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கும் மிருசுவில் மக்களின் உதவியுடன் சுமார் 5 கோடி ரூபா மதிப்பீட்டில் புதிய நீக்கிலார் ஆலயம் மிருசுவிலில் அமைக்கப்படவுள்ளது.

தற்போதுள்ள ஆலயக் கட்டடம் சுமார் 150 வருட கால பழமையானது. 1995 ஆம் ஆண்டு ... இடப்பெயர்வுகளின் போது இந்த ஆலயம் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அடைக்கலம் கொடுத்தமையும், 1995 இடப்பெயர்வின் போது யாழ்.ஆயரின் இல்லமாக இந்த ஆலயம் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

திருநாள் வேஸ்பர் ஆராதனைகள் இன்று புதன் மாலை 5 மணிக்கு இடம்பெறும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'டெசோ' தீர்மானங்கள் பிரிட்டன் துணைத்தூதரிடம்

### கையளித்தார் கருணாநிதி



பிரிட்டன் துணைத் தூதரிடம் 'டெசோ' தீர்மானத்தை கையளித்தார் கருணாநிதி.

அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரை பிரிட்டன் துணைத்தூதர் மைக நிதவ் ரியான் கிஸ் நேற்று முன்தினம் காலை அரை மணி நேரம் சந்தித்துப் பேசினார். தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், சட்டத்தரணி கே.எஸ். ராதா கிருஷ்ணன் உடன் இருந்தனர்.

சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் தூதர் தெரிவித்ததாவது:-

மரியாதை நிமித்தமாக கருணாநிதியைச் சந்தித்தேன். இலங்கை, காவிரி, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு, கடலூர், தர்மபுரி சம்பவங்கள் குறித்து பொதுவாகப் பேசினோம். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக டெசோ மாநாட்டு தீர்மானங்களை கருணாநிதி என்னிடம் கையளித்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து லண்டனில் நடந்த மாநாடு பற்றியும் பேசினோம்-என்றார். (வ)

# தாக்குதல் ஹெலிகளை கேட்கிறது ராணுவம்

# இந்திய விமானப்படை தளபதி எதிர்ப்பு

டில்லி, டிசெ.5

குண்டு வீசும் ஹெலிகொப்டர்களை விரைவில் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற தரைப் படையினரின் கோரிக்கைக்கு விமானப்படை கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இராணுவத்தில் தரைப் படை பயன்பாட்டுக்காக தனியாக விமானப்பிரிவு உள்ளது. இதில் 250 இலகு ரக சீத்தா சேத்தக் மற்றும் துருவ ரக ஹெலிகொப்டர்கள் உள்ளன. இந்த சிறிய ஹெலிகொப்டர்களை போக்குவரத்துக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

எல்லைப் பகுதியில் எதிரி படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக குண்டு வீசும் திறனுள்ள ஹெலிகொப்டர்களை தரைப்படைக்கு பிரத்தியேகமாக வழங்கவேண்டும் என்று தரைப்படை நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தது. அதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி கடந்த வாரம் அனுமதி அளித்தார்.



இது குறித்த தரைப்படை தலைமை தளபதி விக்ரம் சிங் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

தரைப்படையின் விமானப்பிரிவின் திறனை மேம்படுத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

விமானப்படை உபயோகத்துக்காக அமெரிக்காவிடமிருந்து 22 அபாச்சி ரக குண்டு வீசும் ஹெலிகொப்டர்கள் விரைவில் கொள்முதல் செய்யப்படவுள்ளன. இந்த ஹெலிகொப்டர்கள் அனைத்தும் தரைப்படைக்கு மாற்றப்படலாம் என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

விமானப்படையின் குண்டு வீசும் ஹெலிகொப்டர்களைத் தரைப்படைக்கு வழங்குவதற்கு விமானப்படைத் தளபதி ஏ.கே.பிரவுனி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட விமானப் படைகளை அமைக்க முடியாது என்றார். (வ)


## மதுவுக்கு அடிமையாகும் நகர்ப்புற பெண்கள்

டில்லி, டிசெ.5

இந்தியாவின் நகர்ப்புறங்களில் வசிக்கும் பெண்களில் பெரும்பாலோனோர் மதுவுக்கு அடிமையாகி இருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பணிச்சூழல், மன அழுத்தம், குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களே அவர்களை மதுவுக்கு அடிமையாக்கியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர் மதுவுக்கு அடிமையான பெண்களுக்கு ஆலோசனை கொடுக்கும் நிபுணர்கள்.

அளவுக்கு அதிமாக மது அருந்தும் பழக்கம் உள்ள பெண்கள் ஒருபோதும் அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் ஆண்களை விட பெண்களே அதிகளவில் மதுவுக்கு அடிமையாவதாக அண்மைய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. (வ)



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் 128 ஆவது பிறந்தநாள், நாடாளுமன்றத்தில் கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் சபாநாயகர் மீராகுமார், பிரதமர் மன்மோகன் சிங், லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நோர்வேயில் இந்திய பெற்றோர் பிரச்சினையில் தலையிட முடியாது

### மத்திய அரசு அறிவிப்பு

நோர்வேயில் மகனை கண்டித்தற்காக இந்திய பெற்றோர் கைது செய்யப்பட்ட பிரச்சினையில் தலையிட முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.


குறித்த விவகாரம் தனிப்பட்ட குடிமகனின் பிரச்சினை என்றும் அந்தநாட்டின் சட்டம் என்றும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரசேகர் மற்றும் அவரது மனைவி அனுபமா, அவர்களது ஏழு வயது மகன் ஸ்ரீராம் தெரிவித்த முறைப்பாட்டின் பேரில் கடந்த 26 ஆம் திகதி நோர் வேயில் கைது செய்யப்பட்டனர். குழந்தையை மிரட்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டின் சட்டப்படி தந்தைக்கு 18 மாதங்களும் தாய்க்கு, 15 மாதங்களும் சிறை தண்டனைத் விதிக்கப்படலாம் என்று தெரிகிறது. இந்த வழக்கில் ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்க உள்ளது.

இந்தநிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித், இந்த விவகாரத்தைக் கூர்ந்து கவனித்து வருவதாகத் தெரிவித்தார். (வ)

## நவீனமயமாகும் சீன கடற்படை இந்தியத் தளபதி கவலை



டில்லி, டிசெ.5

சீன கடற்படை துரிதமாக நவீனப்படுத்தப்பட்டு வருவது கவலையளிப்பதாக இந்திய கடற்படைத் தளபதி டி.கே.ஜோஷி தெரிவித்தார்.

சீனா தனது கடற்படையை நவீனப்படுத்தி வருகிறது. புதிதாக உரு வாக்கி வரும் விமானம் தாங்கி போர்க்கப்பலில், போர் விமானத்தை இறக்கி சீனா கடந்த வாரம் சோதித்துப் பார்த்தது.

இது குறித்து டில்லியில் நேற்று முன் தினம் பேட்டியளித்த கடற்படைத் தளபதி டி.கே.ஜோஷி தெரிவித்ததாவது:-

சீன கடற்படை துரிதமாக நவீனப்படுத்தப்பட்டு வருவது உண்மையிலேயே கவலையளிப்பதாக உள்ளது.

சீனக் கடற்படையின் செயற்பாடுகளைத் தொடர்ந்து மதிப்பிட்டு, அதற்கு தகுந்தபடி எமது யுக்திகளை செயற்படுத்தி வருகிறோம். தெற்கு சீன கடல் எல்லை தொடர்பாக இரு நாடுகள் இடையேயும் கடந்த ஆண்டு முரண்பாடு ஏற்பட்டது.

அங்கு சுதந்திரமாக கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ளவும், கடல் வளங்களைப் பாதுகாக்கவும் இந்தியா அக்கறை கொண்டுள்ளது.

ஓ.என்.ஜி.சி. விதேஷ் பெற்றோலிய நிறுவனம் அங்கு எண்ணெய் கிணறு அமைக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளது.

அதனால் இந்தப் பிரச்சினையை சர்வதேச கடல் எல்லை விதிமுறைப் படி இருநாடுகளும் பேசித் தீர்க்க வேண்டும்- என்றார். (வ)

## பீகாரில் இளம் பெண்கள் கைபேசி பயன்படுத்தத் தடை

### காதல் கலாட்டாக்களுக்கு இதுதான் காரண கருவி

பீகார் மாநிலம் கிஷன் கஞ்ச் மாவட்டத்தில் உள்ள சுந்தர்பாடி கிராமத்தில் இளம்பெண்கள் கைபேசிகளைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் ஒன்றான கிஷன்கஞ்ச் மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமானோர் வசிக்கின்றனர். அவர்களில் சுமார் 60 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்கள். இந்நிலையில் குறிப்பாக காதல் விவகாரங்கள் அதிகரித்து வீட்டை விட்டு ஓடும் செயல்களுக்கு கைபேசிகள் தான் காரணம். எனவே, பெண்கள் கைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## பள்ளத்தில் பாய்ந்தது பஸ் கோத்தகிரியில் 8 பேர் சாவு

குன்னூர், டிசெ.5

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே மலைப் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்தனர். 26 பேர் படுகாயமடைந்தனர்.

கோத்தகிரியிலிருந்து கொட்டகம்பை பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு தனியார் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. இதன் போது கொட்டகம்பை அருகே கட்டுப்பாட்டை இழந்த குறித்த பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் இருவர் மருத்துவமனையில் உயிரிழந்தனர். 26 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆபத்தான நிலையில் சிலர் கோவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். சம்பவ இடத்தை பொலிஸ் மற்றும் போக்குவரத்து அலுவலர்கள் பார்வையிட்டனர். (வ)

## சேது சமுத்திர கால்வாய் வழக்கு; பெப். 25 இல் இறுதி விசாரணை

சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை மாற்றுவழித்தடத்தில் செயற்படுத்துவது குறித்த வழக்கின் இறுதி விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

மேற்படி திட்டம் குறித்து பொருளாதார ரீதியாக சாத்தியம் இல்லை என்று சுற்றுச்சூழல் நிபுணர் ஆர்.கே.பச்சௌரி குழு அளித்த அறிக்கை மீது கருத்துத் தெரிவிக்க மேலும் அவகாசம் வழங்கும்படி உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கோரியுள்ளது.

இதற்கு அனுமதி அளித்த உச்ச நீதிமன்றம், இந்த வழக்கின் இறுதி விசாரணை அடுத்தவருடம் பெப்ரவரி 25ஆம் திகதி நடைபெறும் என்று கூறியது.



சேது சமுத்திரத் திட்டம் தேவையில்லை என்று தமிழக அரசு கடந்த ஒக்ரோபரில் நடைபெற்ற விசாரணையின்போது நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது. இந்தநிலையில் சேது கால்வாய்த் திட்டத்துக்கு எதிரான வழக்கு நீதிபதிகள் எச்.எல். தட்டூ, சந்திரமௌளிகுமார் பிரசாத் அடங்கிய அமர்வு முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதன்போது 'நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்க கூடுதல் அவகாசம் தேவை என்று மத்திய அரசு ஏற்கெனவே தாக்கல் செய்த மனுவை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர். பின்னர் 'இந்த வழக்கின் இறுதி விசாரணை பெப்ரவரி 25 ஆம் திகதி நடைபெறும் என்று கூறி வழக்கின் விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன ஆயுதப் பயன்பாடு கடும் விளைவை ஏற்படுத்தும்

## சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு பராக் ஒபாமா எச்சரிக்கை



இரசாயன ஆயுதங்களின் பயன்பாடு தொடர்பாக சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''சொந்த மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை பஷார் அல் அசாத் பயன்படுத்தும் பட்சத்தில் பின்விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும். சிரியாவில் நடைபெறுபவற்றை சர்வதேசம் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றமை ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று'' என்று ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், சிரியாவிலுள்ள அத்தியாவசிய மற்ற பணியாளர்களை வெளியேற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள்சபை தெரிவித்துள்ளது.

# பிலிப்பைன்ஸைத் தாக்கியது சூறாவளி

## மண் சரிவு அபாயத்தால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்



பிலிப்பைன்ஸின் தென் பிராந்தியத்தை சூறாவளி தாக்கியது. சூறாவளி மற்றும் கனமழையால் அங்கு பெரும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

சூறாவளி காரணமாக மின்சாரம் தடைப்பட்டுள்ளது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக மண்சரிவு ஆபத்துள்ள கிராமங்களில் இருந்து 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சேதவிவரங்கள் குறித்த விவரங்கள் திரட்டப்படுகின்றன என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அகீனோ தெரிவித்துள்ளார்.

# மருத்துவமனையில் கேட் மிடில்டன்




பிரிட்டனின் இளவரசி கேட் மிடில்டன் கர்ப்பமாக இருப்பதாக புனித ஜேம்ஸ் மாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து புனித ஜேம்ஸ் மாளிகையின் பேச்சாளர்,

''இளவரசி கேத் மிடில்டன் மூன்று மாதம் கர்ப்பம் தரித்துள்ளார். இதன் காரணமாக நேற்றுக் காலையில் லண்டன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்'' என்று தெரிவித்தார்.

இவருக்கு பிறக்கவுள்ள குழந்தை, எதிர்காலத்தில் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் இளவசர் வில்லியம் ஆகியோரை அடுத்து சிம்மாசனத்தில் அமரும் உரிமையுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலின் அதிரடி வீட்டுத்திட்டம்; ஐ.நா. சபை கடும் கண்டனம்



பலஸ்தீனத்திற்கு எதிராக புதிய குடியிருப்பு பகுதியை அமைக்கும் இஸ்ரேலின் திட் டத்துக்கு ஐ.நா. கடும் கண் டனம் தெரிவித்துள்ளது.

கிழக்கு ஜெருசலேம், மாலே அதுமிம் பகுதிகளில் 3,000 வீடுகள் கொண்ட யூதக் குடியிருப்பை ஏற்படுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. பல்வேறு சர்வதேச நாடுகள் இந்தத் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

தற்போது இஸ்ரேலின் இந்தத் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையும் கண்டனம் தெரிவித்துள்ளது.

''இஸ்ரேலின் இந்த முயற்சி அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும். இது உயிரிழப்பை ஏற்படுத்தும் மோதலுக்கு வழிவகுக்கும். இது சர்வதேச சட்டங்களுக்கு விரோதமானது'' என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமது தூதர்களை திரும்பப் பெற பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் முடிவு செய்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா கூட எதிர்ப்புத் தெரிவித் துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கண்டனங்களை நிராகரிக்கும் இஸ்ரேல்



பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மேலதிக குடியேற்றங்களை அமைப்பதற்கு தெரிவிக்கப்படும் சர்வதேச கண்டனங்களை இஸ்ரேல் பிரதமர் நிராகரித்துள்ளார்.

கிழக்கு ஜெருசலேம் மற்றும் இஸ்ரேலின் வரைபடத்திலுள்ள முக்கிய பகுதிகளில் குடியேற்றங்களை நிர்மாணிக்கும் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எனினும் இஸ்ரேலின் இந்தத் திட்டத்திற்கு அதன் நெருக்கிய நட்பு நாடான அமெரிக்க மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் கண்காணிப்பு நாடு என்ற அந்தஸ்தைப் பலஸ்தீனம் பெற்றுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நகர்வாக இது கருதப்படுகின்றது.


பலஸ்தீனத்தைக் கண்காணிப்பு நாடாக அங்கீகரிக்கும் வாக்கெடுப்பையும் நெதன்யாகுவின் அமைச்சரவை உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளது.

எனினும் தமது நாட்டிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் நிர்மாணிக்கும் குடியேற்றங்களை இஸ்ரேல் நிறுத்தாத வரை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்ப போவதில்லை என்று பலஸ்தீனம் அறிவித்துள்ளது.

# வடகொரிய ஏவுகணையை தாக்கி நிர்மூலமாக்குவோம்

## கடும் தொனியில் எச்சரிக்கிறது ஜப்பான்

சியோல், டிசெ.5



வட கொரியாவின் ஏவுகணையைத் தாக்கி வீழ்த்துவோம் என்று ஜப்பான் எச்சரித்துள்ளது.

அடுத்த வாரம் ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது. இந்தநிலையிலேயே ஜப்பான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தொலைத் தொடர்புக்கான செயற்கைகோளை காவிச் செல்லும் இந்த ஏவுகணை பிலிப்பைன்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் தென்பகுதி ஊடாகச் செல்லும் என வட கொரியா தெரிவிக்கிறது.

எனினும் இதுவொரு தடை செய்யப்பட்ட ஏவுகணைப் பரிசோதனை என்று அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கூறுகின்றன.

அணுகுண்டை தாங்கிச் செல்லக் கூடிய நீண்ட தூர ஏவுகணையை ஏவும் சிறந்த தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள வடகொரியா முயற்சிப்பதாக குறித்த நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

## ரஷ்யாவும் எதிர்க்கிறது

வடகொரியாவின் ஏவுகணைத் திட்டம் ஐ.நா விதிமுறைகளை மீறும் செயல் என்று அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் தற்போது ரஷ்யாவும் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ரஷ்ய வெளிவிவகாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வடகொரியா ஏவுகணை ஏவும் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதை கைவிடுவதே சரியானது''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு; பொலிஸார் இருவர் சாவு

பாகிஸ்தானின் கைபர்-பக்துன்கவா மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பொலிஸார் இருவர் உயிரிழந்தனர். பொலிஸாரைக் குறிவைத்து வீதியோரத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளது. இதில் இரண்டு பொலிஸார் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. எனினும் தலிபான் இயக்கம் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



அமெரிக்காவின் பிட்ஸ்பேர்க் நகரில் நடைபெற்ற 'மிஸ் பென்சில்வேனியா டீன் 2013' போட்டியின் வெற்றியாளர் எபோன் மேரி மற்றும் 'மிஸ் பென்சில்வேனியா 2013' போட்டியின் வெற்றியாளர் ஜெஸ்ஸிகா பில்லிங்ஸ்.

# பார்க் போராளிகள் மீது அரச படைகள் தாக்குதல்

## 20 போராளிகள் சாவு



ஈக்குவேடர் நாட்டு எல்லை பகுதியில் உள்ள நரினோ போராளிகளின் முகாம்கள் மீது அரசுப் படைகள் தீவிர தாக்குதல் நடத்தினர். இதில் 20 போராளிகள் கொல்லப்பட்டனர்.

கொலம்பியாவில் பார்க் போராளி அமைப்பினர் அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர். பார்க் அமைப்பு ஜனவரி 20ஆம் தேதி வரை போர் நிறுத்தத்திற்கு அறிவித்திருந்தது. ஆனால் இந்த கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி சாண்டோஸ், ''போராளிகள் ஆயுதங்களை கைவிட்டு ஓர் அரசியல் கட்சியாக வரவேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

அரசுக்கும், பார்க் அமைப்புக்கும் இடையே 50 வருடங்களாக நடந்துவரும் சண்டையில் இதுவரை 6 லட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் நிலநடுக்கம்; குலுங்கின கட்டடங்கள்

அமெரிக்காவில் அலாஸ்கா கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் மாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் அலாஸ்கா மற்றும் அதை ஒட்டியுள்ள ஏஞ்சார்ஜ் நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் அதிர்ந்தன. அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

ஆரம்பத்தில் 5.7 ரிச்டரிலும், பின்னர் 5.8 ரிச்டரிலும் நிலநடுக்கம் பதிவானதாக அலாஸ்கா சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது. ஏஞ்சார்ஜ் நகர பகுதியில் பூமிக்கு அடியில் 33.1 மைல் ஆழத்தில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 10 பேர் சாவு

### நைஜீரியாவில் சம்பவம்



நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் போகோ என்ற தீவிரவாத இயக்கத்தினர் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். நாட்டின் வடகிழக்கே அமைந்துள்ள போர்னோ மாநிலத்திலுள்ள ஷிபோக் கிராமத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் வீடுகளுக்கும் தீ வைத்தனர்.

இந்த தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். இது பற்றி நைஜீரிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கையில்,

''ஏராளமான வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதுவரை 10 உடல்களை மீட்டு இருக்கிறோம். சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம்'' என்று தெரிவித்தார்.

## அமெரிக்க ஆளில்லா 'டிரோனை' கைப்பற்றியதாக ஈரான் அறிவிப்பு

### மறுக்கிறது அமெரிக்க கடற்படை

அமெரிக்காவின் மற்றொரு ஆளில்லா வேவு விமானமான 'டிரோன்' ஒன்றைக் கைப்பற்றியுள்ளதாக ஈரான் அரச தொலைக்காட்சி நேற்றுத் தெரிவித்துள்ளது.

பாரசீக வளைகுடா ஊடாக ஈரான் வான் எல்லைக்குள் நுழைந்த 'டிரான்' ஆளில்லா விமானமே கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''டிரோன் விமானம் கடந்த சிலநாள்களாக பாரசீக வளைகுடா ஊடாக ஈரானிய வான் எல்லைக்குள் நுழைந்து தகவல்களைச் சேகரித்து வந்துள்ளது. இந்த நிலையிலேயே ஈரானிய கடற்படை விமான பாதுகாப்புப் பிரிவு இந்த டிரோனைக் கைப்பற்றியுள்ளது'' என்று ஈரானிய அரச தொலைக்காட்சி மேலும் தெரிவித்துள்ளது.



ஆனால் இதை மறுத்துள்ள அமெரிக்க கடற்படை செய்தித் தொடர்பாளர் ஒருவர்,

''அமெரிக்க டிரோன் விமானம் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஈரான் கூறுவது உண்மைக்குப் புறம்பானது. இந்தப் பிராந்தியத்தின் அனைத்து விமானங்களும் பாதுகாப்பாக இருக்கின்றன. அமெரிக்க விமானங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட வான் எல்லைக்குள்ளேயே பறப்பை மேற்கொள்கின்றன''- என்று தெரிவித்துள்ளார்.

## டுவீட்டரில் இணைந்தார் பரிசுத்த பாப்பரசர்

கத்தோலிக்கத் திருச்சபையின் செய்திகளைப் பரப்பும் நோக்குடன் பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர், சமூக வலைத் தளங்களில் ஒன்றான டுவிட் டரில் இணைந்துள்ளார்.



''பாப்பரசரிடம் கேட்கப்பட்டிருக்கின்ற கேள்விகளுக்கான பதில்களை அவரே டிசெம்பர் 12 ஆம் திகதி முதல் 'டுவிட்' தகவல்களாக வெளியிடத் தொடங்குவார். தன்னிடம் கேட்க்படும் கேள்விகளுக்கு ஆங்கிலத்திலும் அரபு உள்ளிட்ட ஏனைய 7 மொழிகளிலும் பாப்பரசர் பதில்களை அளிப்பார்'' என்று வத்திக்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபை ஏற்கனவே சமூக வலைத்தளங்களைப் பயன். படுத்தத் தொடங்கிவிட்டது.

உலகளாவிய ரீதியில் றோமன் கத்தோலிக்கத் தலங்களை இணைக்கின்ற இணைய பக்கமொன்றை வத்திக்கான் அண்மையில் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### 530 கோடி ரூபா செலவில்

## மின் உற்பத்தி நிலையங்களை ஈராக்கில் அமைக்கிறது ஈரான்

ஈராக்கில் உள்ள இஸ்லாமியத் தலங்களுக்கு மின்சாரம் வழங்கும் வகையில் மின் உற்பத்தி நிலையங்களை ஈரான் அமைக்க உள்ளது. இதுகுறித்து ஈரான் மின்துறை உயரதிகாரி இப்ராகிம் ரகமி தெரிவிக்கையில்,

''ஈராக் நாட்டில் கர்பாலா உட்பட பல நகரங்களில் ஷியா பிரிவைச் சேர்ந்த வழிபாட்டு தலங்கள் ஏராளமாக உள்ளன. அங்கு சிறப்பு பிரார்த்தனைகள் நடத்த ஈரான் உட்பட உலகம் முழுவதும் இருந்து முஸ்லிம்கள் செல்கின்றனர்.

ஈராக் வழிபாட்டு தலங்களுக்குத் தங்குதடையின்றி மின்சாரம் வழங்கும் வகையில் அந்த நாட்டில் மின் உற்பத்தி நிலையங்களை ஈரான் அரசு ரூ.530 கோடியில் அமைக்க உள்ளது. இதன்மூலம் 163 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். வழிபாட்டு தலங்களுக்கு வழங்கியதுபோக மீதி இருக்கும் மின்சாரத்தை ஈரான் அரசு கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும். மின்நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்'' என்றார்.

ஈராக்கில் உள்ள வழிபாட்டு தலங்களுக்கு ஈரான் முஸ்லிம்கள் 2003ஆம் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 103 குழந்தைகளை கடத்திய வழக்கு பாரிஸ் நீதிமன்றில்

அநாதை குழந்தைகளை தத்து கொடுப்பதாக கூறி, சட்டவிரோதமாக கடத்திய வழக்கில் ஆறு பேர் மீது வழக்கு விசாரணை தொடங்கியது.

2007ஆம் ஆண்டு தெற்கு சூடானின் டார்பரில் இருந்து 103 குழந்தைகளை பிரான்ஸுக்கு அழைத்து வந்து தத்து கொடுத்தனர்.

இந்த நிலையில் அழைத்து வரப்பட்ட குழந்தைகள் அநாதைகள் அல்ல என்று தெரியவந்ததையடுத்து இவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை பாரிஸ் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

வழக்கின்போது முக்கிய குற்றவாளிகளான குழந்தைகளை அழைத்து வந்த அமைப்பின் தலைவர் எரிக் பிரிட்யூவும், அவரது மனைவியும் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

இவர்கள் தற்போது தென்னபிரிக்காவில் வசித்து வருகின்றனர். இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 10 ஆண்டு சிறைத் தண்டனையும் 750,000 யூரோ அபராதமும் விதிக்கப்படும்.


# யாழ். மண்ணில் முதன் முறையாக

# Cochlear Implant Surgery

## (செவியின் சுருள் வளையில் கேட்கும்சாதனத்தை உட்பதித்தல்)


**நீங்கள் இந்த உலகத்தில் இருந்து அமைதியாக ஒதுங்கியிருக்கின்றீர்களா**


**உங்களுடைய கேட்டல் சாதனங்களுடன் கேட்பது கஸ்ரமாக உள்ளதா**

**உங்களிடம் இதைத் தவிர வேறு ஒரு குறைபாடும் இல்லை**

**அப்படியானால் கவலைப்படாதீர்கள்.**

விக்கிரமாராட்சி - Insititute of Speech and Hearing நிறுவனத்தினால் நடத்தப்படும் கேட்டல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்வதன் மூலம் உங்கள் ஒவ்வொருவரினதும் கேட்டல் திறனை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.




திகதி :- 06.12.2012

நேரம் :- 2.00 pm

இடம் :-யாழ்.போதனா வைத்தியசாலை கேட்போர் கூடம்

முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் 07.12.2012அன்று விக்கிரமாராட்சி நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்படும் Cochlear Implant (செவியின் சுருள் வளை உட் பதித்தல் )சத்திர சிகிச்சையானது கண், காது, மூக்கு சத்திரசிகிச்சை நிபுணர்கள் Dr. Yasawardana, Lady Ridge-way hospital, Colombo. Dr. Thirumaran, Jaffna Hospital ஆகியோரால் மேற் கொள்ளப்படவுள்ளதுஎன்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(26039)(2.6.7)

J.M. Wickramarachchi & CO. No. 229, 231 Power House Rd.,Jaffna.

தொடர்பு: Tel :021 2219288, 0777511260, 021 72 12061


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(44)

ஒருவனை அவன் விருப்பத்துக்கு மாறாக அவன் பேசியது தவறு என்று நாம் அடித்துப்பேசி ஒப்புக்கொள்ளச் செய்தாலும், அவன் அதை உதட்டளவில்தான் ஒப்புக் கொள்வான். உள்ளத்தில் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்றுதான் எண்ணுவான்.

ஒரு நிறுவனத்தின் முதலாளி நீண்ட நேரம் வருமானவரி அதிகாரிகளிடம் வாதாடிப் பார்த்தார். வியாபாரத்தில் வசூலாக வேண்டிய பணத்தில் சுமார் இருபதாயிரம் கண்டிப்பாக வசூலாகாது என்பது அவர் வாதம். ஆகையால், இந்த இருபதாயிரத்துக்கு வரி போடக்கூடாது என்று வாதாடிப் பார்த்தார்.

வருமான வரி அதிகாரி விடுவதாக இல்லை. சட்டப்படி அதற்கு வரி போட்டாக வேண்டும் என்றார். வருமான வரிச் சட்டத்தின் கீழ் அதற்கு வரி விலக்கு இல்லை என்பது அவர் கருத்து. கொஞ்சம் கோபத்துடன் பேசத்தொடங்கிவிட்டார்.

முதலாளி பார்த்தார். அதிகாரியை வழிக்குக் கொண்டுவர ஒரே வழிதான் என்று முடிவு செய்தார். 'நான் விவாதம் செய்தது தவறாக இருக்கலாம். உங்கள் வேலை பொறுப்புள்ளது. ஒருவேளை உங்கள் இடத்தில் நான் இருந்தால் புரிந்துகொள்வேனோ, என்னமோ? நீங்கள் முடிவு செய்வது சரியாகத்தான் இருக்கும்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்!

வருமான வரி அதிகாரி மறுநாள் முதலாளிக்கு தொலைபேசி அழைப்புச் செய்தார். வருமான வரி சட்டப் புத்தகங்களை அலசிப் பார்த்தேன். உறுதியாகப் பணம் திரும்பி வராது என்றால் வரி விலக்கு அளிக்கலாம் என்று ஓர் இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே உங்களுக்கு இருபதாயிரத்துக்கு வரி விலக்கு அளிக்கிறேன்' என்றார்.

மிக்க நன்றி என்றார் முதலாளி. அவர் விட்டுக் கொடுத்துப் பேசியது நன்றாக வேலை செய்தது. மேலும், வருமான வரி அதிகாரியின் வேலை மிகவும் சங்கடமானது, கஷ்டமானது என்று அவர் புரிந்து கொண்டதைப்போல் பேசியது அவர் மனத்தை நெகிழவைத்தது. ஆகையால் அவர் விட்டுக் கொடுத்து சலுகையை அளித்தார். நாம் வளைய வேண்டிய இடத்தில் வளைந்து கொடுத்தால் வெற்றி நிச்சயம்.

விவாதித்துக்கொண்டே இருப்பவர்களைப் பிறர் விரும்புவதில்லை. வீண் விவாதங்களைத் தவிர்க்க, இதோ சில அருமையான யோசனைகள்;

1. நாம் கோபத்தை அடக்க வேண்டும். ஒருவருக்கு எதனால் கோபம் வருகிறது என்று கண்டுபிடித்து விட்டால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று புரிந்து விடும். அவருக்கு ஏற்றபடி நாம் நடந்துகொள்ள உதவியாக இருக்கும்.

2. ஒருவர் பேசும்போது நாம் தெளிவாக, அமைதியாகக் கேட்க வேண்டும். ஆத்திரப்பட்டு அல்லது, எதிர்த்துப்பேசி அவரைப் பேசவிடாமல் செய்யக்கூடாது. நாம் எதிர்த்துப் பேசினால் வீண் மனஸ்தாபங்கள் தான் ஏற்படும். நாம் நினைக்கும் அளவுக்கு நண்பர்களைப் பெறமுடியாது.

3.மற்றவர்கள் பேசி முடித்ததும், முதலில் அவர்கள் சொன்னவற்றில் நாம் எதையெல்லாம் ஒப்புக் கொள்ள முடியுமோ, அவைகளை மட்டும் ஒப்புக்கொள்ள வேண்டும்.


4. நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நாம் செய்த தவறுகளை நாம் ஒப்புக் கொள்ளலாம். அதற்காக மன்னிப்புக்கூடக் கேட்கலாம். நாம் நம் தவறுகளை ஒப்புக் கொள்ளும்போது, எதிரிகூடப் பேசமுடியாமல் தவிப்பான். தோல்வி மற்றவர்களுக்கே!

5. மற்றவர்கள் நம்மைப் பற்றிக் குறை சொன்னால், அவைகளைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்கள் சொன்னதைப் பற்றிச் சிந்திப்பதாகச் சொல்லுங்கள். அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

6. காரசாரமான விவாதங்களுக்கு இடம் தராதீர்கள். இக்கட்டான நிலையைத் தவிர்க்க, மீண்டும் சந்தித்துப் பேசலாம் என்று சொல்லுங்கள். எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டு மீண்டும்பேச வேண்டும்.

மேலே சொன்ன விதிகள் வாழ்க்கையில் உயர, மற்றவர்களின் நட்பை நிரந்தரமாகப் பெற வழி செய்யும்.

குடும்ப வாழ்க்கையில் எப்போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்த ஒரு பெரியவர் சொன்னார். 'நானும் என் மனைவியும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். ஒற்றுமையாக இருக்கிறோம். காரணம் என்ன தெரியுமா?



நானும் என் மனைவியும் மணமானதும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம். அதன்படி நான் கோபமாகக் கத்தினால், அவள் சும்மாயிருக்க வேண்டும். அவள் கோபமாகக் கூச்சல் போட்டால் நான் சும்மாயிருக்க வேண்டும்!'

இந்த ஒரு தத்துவத்தை நினைவில் வைத்துக் கொண்டால் போதுமே! சுருக்கமாகச் சொன்னால் வீண் விவாதத்தை நாம் தவிர்க்க வேண்டும்.

-தமிழ்வாணன்- (தொடரும்)

# கல்வித் துறைசார் செயற்பாடுகள் சிறந்த படைப்பாளிகளை உருவாக்கும்

## சிறுவர் பரிசளிப்பு விழாவில் உரை

தென்மராட்சி,டிசெ.5

கல்வித் துறைசார் செயற்பாடுகள் சிறந்த படைப்பாளிகளை எதிர்காலத்தில் உருவாக்கும். கல்வியுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் சிறந்த மாணவர்களை உருவாக்குவதுடன் எதிர்காலத்தில் கல்விசார் செயற்பாடுகள் நிறைந்த சமூகத்தையும் உருவாக்க முடியும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வித் திணைக்கள ஆரம்பப் பிரிவினால் சிறுவர் பரிசளிப்பு விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பப் பிரிவு மாணவர்களால் உருவாக்கப்பட்ட சித்திரங்களில் சிறந்ததைத் தெரிவு செய்வதில் தேர்வுக் குழுவினர் எவ்வளவு சிரமங்களை எதிர்நோக்கியிருப்பர் என்பதை உணர முடிகிறது. இள வயதில் மிகத் துல்லியமாக உருவாக்கப்பட்ட படைப்புகள் ஒவ்வொன்றும் மாணவரின் கலைத்திறனை வெளிக்கொணர வைத்துள்ளன.

விழாவில் மேடையேற்றப்பட்ட ஒவ்வொரு நிகழ்வுகளும் எமக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியனவாக இருந்தன. சகல மாணவரும் தாம் பங்குபற்றிய பாத்திரங்களைப் பொறுப்புணர்ந்து அதற்கேற்ற வகையில் செய்து முடித்துள்ளனர். சிறிய வயதில் பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து, அதன் பிரகாரம் சிறிதும் பிறழ்வு ஏற்படாது நடித்துக் காண்பித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தற்போதைய காலத்தில் கணினியின் செயற்பாடுகள் அனைவராலும் விரும்பப்பட்டு வருகின்றன. கணினியில் உள்ள பல பிரிவுகள் சிறுவர்கள் மத்தியில் விரும்பப்படுகின்றன. பெற்றோர் ஆசிரியர்களுக்குத் தெரியாத பல விடயங்களைச் சிறுவர்கள் வெளிக்கொணர்வதைக் காணமுடிகிறது.

இள வயதினரின் திறமைகளை இனங்கண்டு அவற்றை அவர்களிடம் வளர்க்க அனைவரும் பாடுபட வேண்டும். குழந்தைகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது நாட்டுக்குச் செய்யும் பெரிய சமூகத் தொண்டாகும் - என்றார். (எ-9)



நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவு முதியோர் சங்கம் நடத்திய முதியோர் கௌரவிப்பு விழாவில் 80 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அன்பளிப்புப் பொருள்களுடன் கௌரவிக்கப்பட்ட முதியவர்களும் விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்களும் காணப்படுகின்றனர். (11)

# வரணி பொது நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தென்மராட்சி,டிசெ.5

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் வாசகர்களின் விவரம் வருமாறு:-

கட்டுரை, பிரிவு -1

1 ஆம் இடம் - த.சங்கீதன், 2 ஆம் இடம் -ர. டனுஸ்ரன், 3 ஆம் இடம் - வ.நிறோஜன் - வரணி வடக்கு அ.த.க.பா., பி.நிதுர்சிகா - மந்துவில் றோ.க.த.க.பா.

பிரிவு -2

1 ஆம் இடம் - கு. கார்த்திகா, 2 ஆம் இடம் - பா.கார்த்திகா, 3 ஆம் இடம் - ஜீ.சப்தாமுகி - வரணி ம.வி., ந.பவித்ரா - மந்துவில் றோ.க.த.க.பா.

பிரிவு -3

1 ஆம் இடம் - வே.கோகுலன் - வரணி ம.வி., 2 ஆம் இடம்- ந.தர்மிகா - கரம்பைக்குறிச்சி அ.த.க.பா., 3 ஆம் இடம் - கி.கிஷோயினி - வரணி ம.வி.

பிரிவு -4

1 ஆம் இடம் - சி.தனுசன் - வரணி ம.வி., 2 ஆம் இடம்- நா.சவுந்தர்யா - இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி., 3 ஆம் இடம் - த.தனுஷன் - வரணி ம.வி.

பிரிவு -5

1 ஆம் இடம் - வி.வினோஜா, 2 ஆம் இடம் - அ.கார்த்திகா, 3 ஆம் இடம் - வ.விதுஷா- மூவரும் வரணி ம.வி.

[illegible], பிரிவு -4

1 ஆம் இடம் - [illegible] - வரணி ம.வி., 2 ஆம் இடம் - சி.கோபிகா - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி., 3 ஆம் இடம் - க.தாட்சாயினி - வரணி ம.வி.

பிரிவு -5

1 ஆம் இடம் - வி.வினோஜா, 2 ஆம் இடம் - அ.கார்த்திகா, 3 ஆம் இடம் - ஜெ. கிதர்சி - மூவரும் வரணி ம.வி.

பொது அறிவு, பிரிவு -4

1 ஆம் இடம்- சி.தனுசன், 2 ஆம் இடம் - மா.சுபாஷ், 3 ஆம் இடம் - சி.சுஜீவன் - மூவரும் வரணி ம.வி.

பிரிவு - 5

1 ஆம் இடம் - அ.கார்த்திகா, 2 ஆம் இடம் - க.சுதாஸ்கரன், 3 ஆம் இடம் - ர.விஷ்ணுகாந்- மூவரும் வரணி ம.வி.

வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டி

1 ஆம் இடம் - செ.உதயமோகன் - கரம்பைக்குறிச்சி மேற்கு, 2 ஆம் இடம் - சி.தர்சினி - வரணி இயற்றாலை, 3 ஆம் இடம் - ப.ஜீவானந்தன் - பாவற்காடு வரணி.


முன்பள்ளிகளுக்கான போட்டிகள், அபிநயம்

1 ஆம் இடம் - சி.டினுஷா -ரட்ணா முன்பள்ளி, 2 ஆம் இடம்- உ. இசைப்பிரியா - வாணி முன்பள்ளி, 3 ஆம் இடம் - சி.லதியா - கரம்பைக்குறிச்சி முன்பள்ளி, ச.யாணுவி- கலைவாணி முன்பள்ளி.

பேச்சு

1 ஆம் இடம்- வி.கஜீபா - விநாயகர் முன்பள்ளி, 2 ஆம் இடம் - அ.அன்புமாறன் - கௌரிபாலன் முன்பள்ளி, 3 ஆம் இடம் - ஜெ.மோடிலாஸ்- மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம், ந.தளிரினி - ரட்ணா முன்பள்ளி. (வ-9)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



திருமதி தனலட்சுமி வில்வநாதன் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால்தீவுமுழுவதுக்குமான சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிவான் அ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவியான இவர் தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய கல்வி டிப்ளோமா சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ்.பிராந்திய இணைப்பாளரும் ஆவார். (எ)

## அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

அளவெட்டி,டிசெ.5

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் எம்.உமாசங்கர் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தலைவர் வைத்திய அத்தியட்சகர் எம்.உமாசங்கர், செயலாளர் நா.நவரத்தினராசா, உபதலைவர் பொ.கமலநாதன், உபசெயலாளர் எஸ்.செல்வரட்ணம், பொருளாளர் எஸ்.றொபின்சன் மற்றும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-36)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி சந்தி)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அம்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹானா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எமக்காக நாம் எப்போது குரல் கொடுக்கப்போகிறோம்?

"எங்களுக்கு கவலை வந்தால் நாங்கள்தான் அழுகிறோம். சந்தோசம் வந்தால் சிரிக்கிறோம். இப்படி எல்லா உணர்வுகளையும் நாமே வெளிப்படுத்துகிறோம். ஆனால் எங்களுக்கு கோபம் வந்து விட்டால் மட்டும் அதை வேறொருவர் எங்களுக்காக வெளிக்காட்ட வேண்டும் என்று நினைக்கிறோம்." இது வேலாயுதம் படத்தின் கடைசி வரிகள். இந்த வரிகள் எங்கள் இனத்துக்கும் நன்றாகவே பொருந்துகிறது.

வரலாற்று தொன்மைமிக்க சமூகமாகவும் கலை, கலாசார பண்பாட்டு ஒழுக்க நெறிகளில் மேன்மையான இனமாகவும் மானமுள்ள தமிழினமாக எம்மைச் சித்திரித்துக்கொள்கிறோம். இந்த விழுமியங்களின் வெளிப்பாடாகவே எங்களது உரிமைகள் எமக்கு வேண்டும் என்பதற்காக பல்வேறு வழிகளில் போராட்டம் நடத்தி இன்று அடக்குமுறைக்குள் தத்தளிக்கக் கூடிய இனமாக மாற்றப்பட்டிருக்கிறோம்.

உண்மையில் இந்த மாற்றம் எவராலும் ஏற்படுத்தப்படவில்லை. எமக்கான உரிமைகளை நாங்கள் சரியான தருணங்களில் தட்டிக்கேட்கும்போது எவராலும் எம்மை அடக்கிவிட முடியாது.

போராட்ட வரலாறுகளின் அடிப்படையில் இந்த உண்மைகளை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வியட்னாமிய விடுதலைப் போராட்டம் மக்களோடு இருந்து மக்களால் வெல்லப்பட்டது. எந்தத் துன்பம் ஏற்படுத்தப்படினும் அதை அவர்களே எதிர்கொண்டார்கள். இதனாலேயே இன்றளவுக்கு அந்த விடுதலைப் போராட்டங்கள் பேசப்படுகின்றன.

இன்று நாம் அகிம்சை வழியில் போராட வேண்டிய சூழலுக்குள் இருக்கின்றோம். கோபாவேசமாக அதனை வெளிப்படுத்தமுடியாவிட்டாலும் அமைதியான முறையில் எமது உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய சூழ்நிலை இப்போது இருக்கிறது. சர்வதேச சமூகத்தின் கரிசனையும் கண்காணிப்பும் இதற்கு உறுதுணையாக இருக்கும். இவ்வாறான சூழ்நிலையில் எமக்காக, எமது உரிமைகளுக்காக, எமது தேவைகளுக்காக யாரோ ஒருவர் குரல் கொடுக்கட்டும் அதில் நாங்கள் குளிர் காய்ந்துவிடுவோம் என்று இருப்பது மேலும் எமக்கு ஆபத்துக்களையே விளைவிக்கும்.

தமிழினத்துக்கு ஏற்படுத்தப்படும் நெருக்கடிகள் தொடர்பில் கூடிநின்று குரல் கொடுக்க இன்று நாம் தயாராக இல்லை என்பது வேதனை தரும் விடயம். 'யார் குற்றியாவது அரிசியாகட்டும்' என்று இருந்து சுய இலாபங்களுக்காக செயற்படும் போக்கை மக்கள் அமைப்புகள் இன்றளவும் கொண்டிருக்கின்றன என்பதே இன்று எமது ஒற்றுமையின் கேள்விக்குறி? பல்கலை மாணவர்கள் மீதான உரிமை மீறல்களுக்கு குரல் கொடுக்கும் வகையில் நகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு கணிசமான அமைப்புகள் ஆதரவு வழங்கியிருந்தன. ஆனாலும் ஒரு எதிர்கால சமூகத்தை சீரழிக்கும் வகையிலான பல்கலை மாணவர் மீதான அடக்கு முறைக்கெதிராக ஏன் நாம் அனைவருமே குரல் கொடுக்கக் கூடாது. குழுமி ஆர்ப்பரிக்கக்கூடாது. எங்கள் உரிமைகளை நாங்களே கேட்டுப்பெறக்கூடாது.

இரண்டு மனங்களைக்கொண்டு நாம் ஆதரவு செய்கிறோம். ஆனால் அங்கே வரமாட்டோம். நாம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்கிறோம். எதுவுமே பேச மாட்டோம். நாம் நம்மை நாமே தக்கவைத்துக்கொள்வதால் என்ன இலாபம் இருக்கிறது.

நாம் ஜனநாயக வழியிலேயே போராட்டத்தை முன்னெடுக்கிறோம். அதில் இடையூறு செய்ய எவருக்கும் அதிகாரம் இல்லை என்ற உண்மையும், நாம் சேர்ந்து குரல் கொடுப்பது எமது இனத்தின் ஜனநாயக பலத்தின் வெளிப்பாடு எவ்வளவு ஒன்றியிருக்கிறது என்ற உறுதியும் வெளிப்படும். அதற்காகவே நாம் வேறுபாடு அற்ற எம்மீதான அடக்குமுறைகளை தட்டிக்கேட்கக்கூடிய ஜீவன்களாக மாறவேண்டியிருக்கிறது. இனியும் சுயலாபம் பற்றியும் மாற்றுக்கருத்துப்பற்றியும் பேசிக்கொண்டு காலத்தை இழுத்தடித்து எம்மை முட்டாள்களாக மாற்றுவது பொருத்தமற்றது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளமுடியும். ஜனநாயக வழியில் நாம் அனைவரும் ஒன்றித்திருக்கையில் ஒரு சிலர் விலகி இருக்க வேண்டும் என்பதை எண்ணவே கூடாது. பதிலாக அடக்கு முறைகள் அனைத்தும் தமிழ் இனத்தின் மீதானவை. அதை தட்டிக்கேட்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எம்மிடமே உள்ளது என்பதை அனைவரும் கருத்தில்கொள்ள வேண்டும். வேலையற்றவன் செய்யும் வேலையல்ல ஜனநாயகப் போராட்டங்கள்.

# வாழும் "மௌனமும்", வீழும் "வசந்தமும்"...

■ செந்தூரி

பிரிட்டிஷ் பொருண்மிய மேதையான "ஹெரால்ட் லாஸ்கி" கூட்டங்களில், ஜேர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருந்த சர்வாதிகார ஆட்சியைக் கடுமையாக விமர்சித்துப் பேசினார். அப்போது, மத போதகரான வண.லாவோஸ் "நீங்கள் சொல்கின்ற கொடுமைகள் ஜேர்மனியில் தானே நடக்கின்றன. அங்கே போய் பேசாமல் ஏன் லண்டனில் நின்று வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று எள்ளினார், கிண்டல் கலந்து. ஹெரால்ட் லாஸ்கியோ நிதானமாகப் போதகரை நோக்கி, "தாங்கள் கூட மக்களை நரகத்தில் இருந்து காப்பாற்றத் தானே பாடுபடுகின்றீர்கள்? பின்னர் ஏன், அங்கே போகாமல் இங்கே இருந்து கொண்டு வாய் வலிக்க உழைக்க வேண்டும்?" என்று வாரினாராம்.

"பாவமிந்த, கம்பஸ் பொடியள்! செத்துப் போனவங்களைக் கிண்டி யெடுக்க வெளிக்கிட்டு, வருஷம் வருஷம் அடி வாங்கிச் சாகுதுகள்" என்று அங்கதத் திருவாய் மலர்ந்தருளியுள்ள எமதருமை "பாண்டிமிகு"வுக்கு மேற்படி சர்வாம்சாணம். கழுவாமல் விடப்படுகின்ற குதிகால் பாகத்தை கண்டுபிடித்து ஒட்டிக்கொள்கின்ற சனீஸ்வர பகவானைப் போல, "இனிமேல் இந்தப் பீடையைப் பற்றி பேசுவதேயில்லை" என்று முடிவெடுத்துப் பின் தோற்றுப் போன பலரை, தன் பெரிய அரசியல் கூர்மையினால் மீள மீள கவனிக்கத் தூண்டுபவர் அவர். சமீபத்திய வார இதழ் ஒன்றுக்கான நீள-ஆழப் பேட்டியிலிருந்து வெட்டியெடுத்த பிசிறு ஒன்று இன்னுமொரு புலமையுதாரணம். "வடக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னம், விகாரைகள் அமைத்தல், சிங்கள குடியேற்றங்கள் போன்றவற்றை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?" என்ற கேள்விக்கான பதில். "பிறகெதற்கு வெள்ளவத்தையில் இவ்வளவு கோயில்கள்...".

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில், முன்னெப்போதும் இல்லாதவாறு, முதன்முறையாக- "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்கின்ற ஈழத்தமிழ் உயர் கல்விப்பீடத்தின் "நிறைவேற்றதிகார-நிர்வாகக் குழுமத்தை" முற்று முழுதாக, விலைக்கு வாங்கி விட்ட 'கொழுப்பு' ஏறிவிட்ட நாக்குகளின் ஆரம்பமே இது! "தமிழ்த் தேசிய எதிர்க்காழ்ப்புணர்வாளர்களால் நிரப்பப்பட்டுள்ள நிர்வாகம்", "மாணவர்கள் எனும் போர்வையில் உட்புகுந்துள்ள கூலிகள்", "தாராளமாக பெண்கள் விடுதிவரை சென்று வருகின்ற 'சகலமயமாக்கம்' பெற்ற புலனாய்வாளர்கள்" என்று தமக்கிடையிலான பலவீனங்களைக் காத்திருக்க வைத்துக்கொண்டு, ஆயுதம் தாங்கிய படையினருடன் முரண்பட்டு, உடல் ஊறுகளைச் சந்தித்துக் கலங்கி நிற்கின்ற எம் பிள்ளைகளைப் பார்த்துப் பரிதாபப்பட மாத்திரமே முடிகின்றது எம்மால்! "கழக வளாகத்தினுள் சீருடை தரித்தவர்கள், ஆயுதங்களுடன் நுழைய முடியாது" என்கின்ற விதியை மொத்தக் குத்தகைக்கு விட்ட மெத்தப் படித்தவர்கள் யாவர்?

1990 களின் ஆரம்பத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவிருந்த அந்தப் பெருமகன் தசாப்தங்களுக்கு மேலாகப் பேராசிரியராக இருந்த பெருமைக்குரியவர். வடமராட்சியிலிருந்து-திருநெல்வேலி வரைக்குமான சுமார் 25 மைல் தொலைவினை மிதிவண்டியால் மிதித்துக் கடப்பவராம். பல்கலைக்கழகத்தில் ஒரு முறையேனும் சந்தித்த மாணவனைக்கூட, மறுமுறை வீதியில் காணநேரிட்டால், தன் வாகனத்திலிருந்து குதித்திறங்கி, விசாரிக்காமல் கடந்ததில்லை என்கிறது அப்பகிர்வு. கடும்மழை, உடல் ஊதும் குளிர், எரிக்கும் கோடை காலம் கூடவே கொல்லும் புற்றுநோய் என காலநிலை, தன் உடல்நிலையாகிய கடும் தடங்கல்களையும் கடந்து, மிதிவண்டியைத் தனது வாகனமாகப் பயன்படுத்தும், "அறிவொடுக்கம்" தான் அவரை பல்கலைக் கழகமொன்றின் துணைவேந்தர் என்ற அரியாசனத்துக்கு இருமுறை [illegible] அடிக்கடி நினைவுகூரப்படுகின்ற இம்மாமனிதர் பேராசிரியர் **அ.துரைராஜா** அவர்கள்.

ஆனால் காலத்தின் கோரம், இப்படியான மனிதப் பண்புள்ள, கல்விக் குன்றுகளால் கட்டியெழுப்பப்பட்ட கலாசாலையை, தகவிலார் கைகளில் தாங்கக் கொடுத்துள்ளமையே. எண்ணற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று வருகை விரிவுரையாளராகப் பணியாற்றி இலட்சங்களில் சம்பாதிக்கும் வாய்ப்பு இருந்தும், தனக்கென ஒதுக்கப்பட்ட வாகனத்துக்கு நெருக்கடியான பொருளாதாரத் தனை நேரத்திலும் எரிபொருள் ஒதுக்கிப் பாவிக்கும் வாய்ப்பிருந்தும், பல்கலைக் கழகத்துள்ளேயே வசதி செய்யப்பட்ட தங்குமிடத்தினை உதாசீனப்படுத்தி உடுப்பிட்டியிலிருந்து, திருநெல்வேலிக்கு கழுத்தில் சுற்றப்பட்ட சால்வையுடன் சைக்கிள் மிதித்த 'மனிதரொருவரால் அலங்கரிக்கப்பட்டது தான் இந்த ஆசனம் என்று, எந்தக் கோயிலில் சூடம் அணைத்து நம்பச் செய்யப் போகின்றீர்கள் இன்றைய பல்கலைக்கழக மாணவர்களை!

"மக்களோடு மக்களாக வாழத் தெரிந்த மகாத்மாக்கள்", "இந்த மண்ணினை இந்த மக்களைத் தம் உயிரினும் மேலாக மதித்த போராளிகளையும், இயக்கத்தையும் அன்போடு அரவணைத்த கல்விமான்கள்", "தமிழரின் தேச விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பப்புள்ளி- ஆளுமினத்தினால் ஏவிவிடப்பட்ட கல்விசார் இன ஒடுக்கல்களே என்பதைப் புரிந்துணர்ந்து உத்வேகம் கொடுத்த நல்லவுள்ளங்களின்" தொடர்ச்சியாக வந்தவர்களான இன்றைய நிர்வாகமும், இன்றைய தலைமைத்துவ குழுவும் சாட்டாகச் சொல்லுகின்ற "அது அந்தக் காலம்!" என்ற மூன்று வார்த்தைகள் போதுமானவையாக எல்லாப் புனைவுகளையும் பொத்தி வைக்க?

நண்பர்களைவிட, எதிரிகளைத் தெரிவு செய்வதில் எப்போதுமே மிகைக் கவனம் வேண்டும் தோழர்களே! தெரிவு செய்யப்படுகின்ற எதிரியுடன் நாம் போராட வேண்டும்! எதிரியின் பலம், பலவீனம் யாவும் அட்சரம் பிசகாமல் தெரிந்திருத்தல் வேண்டும். தோற்றுப் போன ஈழத்தமிழினம் போல, இறுதி வரை முன்னே நின்ற சிங்களமே எம் எதிரியென்று கண்ணிமைக்காது, ஈர்த்து நின்ற நேரம், சூழ்ச்சிகளால் பின் நின்று வீழ்த்திய பல்லுலக தேசங்களில் பலவற்றை எம் எதிரிகளென்று கனவிலும் எண்ணியிருக்காத நிலைமை, இன்றைக்கு தம்முரிமைகளுக்காகப் போராடுகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வந்துவிடக் கூடாது! தெளிந்து சொல்வதாயின், இம்மாணவர்களால் தெரிவு செய்யப்பட்ட பகைவர்களான, ஆயுதமேந்திய படையினரும், பொலிஸாரும் இவர்களின் உண்மையான எதிரிகளே அல்ல! இவர்களின் உணர்வுகளை அடக்கி ஒடுக்குவதற்கும், இவர்களின் உரிமைக் குரல்களை இறுக்கி அனுப்புவதற்கும் ஏவிவிடப்படுகின்ற வெற்றுக் கருவிகளை, எதிரிகளாக எண்ணிப்பதில் எவ்வித தீர்வும் கிடைத்து விடப் போவதில்லை. பற்றன் பொல்லுகளுக்கும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளுக்கும் மாற்றாகச் சுலோக அட்டைகளும், குறிப்புப் புத்தகங்களும் ஏந்திய மாணவர்களின் உடல்பாகங்களில் உட்காயங்களை ஏற்படுத்துவதாக மட்டுமே முடியும் இச் செயல்வலி!

மாறாக, மாணவர்களுக்கெதிராக அரச இயந்திரத்தினால் ஏவி விடப்படுகின்ற அவலச் சம்பவங்கள் எதிர்காலத்திலும் நிகழாமல் தடுப்பதற்கான உண்மை வழி இன்னொன்று தான் என்பது பொய்யே அல்ல! சிங்கள இனவாதிகளுக்கு நெருக்கமான பேராசிரியர் ஒருவர், கொழும்பில் இருந்து கொண்டே யாழ்.பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தரான போது எம் கண்களில் திரண்டு நின்ற கடுஞ்சினம், ஏன் ஒட்டுக்குழுக்களுக்கு நெருக்கமானவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற போது போர்த்து மூடிக் கொண்டு படுத்துக் கிடந்தது? 'முறிந்த பனை' பற்றி, ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கேள்விக்குள்ளாக்கி எழுதியிருந்த பேராசிரியர் "ரட்ணஜீவன் ஹூல்" தமிழராகவே இருந்த போதிலும் ஆளுங்கட்சிக்கும்-சிங்கள பேரின வாதத்துக்கும் நெருக்கமானவர் என்கின்ற காரணத்தினால் பொங்கியெழுந்து நியமனத்தை எதிர்க்க முடிந்த எமக்கு, தமிழ்த் தேசிய விரோதிகளின் ஆசீர்வாதத்தோடு நிர்வாகக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்த முண்டியடித்தவர்களின் நியமனங்களுக்காக எதிர்ப்புக்குரல் எழுப்ப திராணியற்றுப் போனதில், வியப்பேதுமில்லையா? பல்கலைக்கழக சமூகத்தினதும், பல்கலைக்கழக மாணவர்களினதும் ஆழ்மனம், சிங்களப் பேரினவாதிகளுக்கும், தமிழ் இணக்க அரசியல் வாதிகளுக்கும் மத்தியில் எடைபோட்டு, தமக்கு சார்பு நிலைப்பாட்டை எடுக்கக் கூடும் என்ற ஊகத்தில், தெரிவுகளின் போது காத்த 'மௌனமே', எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் சரி, இன்றைக்கு அனுபவிக்கின்ற அவலங்களுக்கும் சரி, காரணமாகிப் போனது. சுற்றில், கட்சி வேறுபாடில்லாமல், கொடி நிறத்தில் வேறுபாடில்லாமல், பிறப்பினத்தில் வேறுபாடில்லாமல்-தமிழரின் உரிமைக் குரலை எப்போதும் நசுக்கி வைத்திருக்கவே விரும்புபவர்கள், இரு தரப்பினருமே என்ற உண்மையை இன்னொரு முறை உரத்து உணர்த்திப் போனது கடந்த வாரம்.

'மகாபொல' மற்றும் உதவித் தொகைகளால் சமாளித்துவிட முடியாமல், நீர்வேலியிலிருந்து-திருநெல்வேலிக்கு சைக்கிளில் ஐந்தாறு வாழைக்குலைகளைக் கட்டி வந்து, பார்த்த 'காசு' தான் பெரும்பான்மையான யாழ்ப்பாண பிள்ளைகளின் கல்விச் செலவினைப் பார்த்துக் கொள்கின்றது என்பதை நாமனைவரும் அறிவோம். இராமநாதன் வீதியில் வீறு நடைபோடுகின்ற எம்மினத்தின் குருத்துக்கள் ஒவ்வொன்றின் பின்னாலும், 'அலையோடும், உப்புக் காற்றோடும் போராடும் ஒரு ஜீவனோ', 'அப்பளம்-ஊறுகாய் எடுத்து கடை கடையாக ஏறி இறங்கும் ஒரு ஜீவனோ', 'வெங்காயம் முடித்த காசில் வங்கிக்கடன் நிலுவையை செலுத்த முடியாதொரு ஜீவனோ' நிச்சயம் தன் வாழ்நாள் உழைப்பையே தியாகம் செய்து கொண்டிருக்கும். அவர்களின் ஏக்கம் எப்போதும் வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்டு நியாயமானது மட்டுமே! ஒடுக்கப்பட்ட கல்வியாதாரங்களுக்காகப் போராடத் தொடங்கிய விடுதலை இயக்கத்துக்கு சற்றும் சளைக்காமல் தம் குடும்பத்தினளவில், கல்வி விடியலுக்காகப் போராடு கின்ற ஒவ்வொரு தாய்-தந்தையரும் தனித்தனி புரட்சி இயக்கங்களே! வறட்சி நிரம்பிய வாழ்வுக்குள்ளும் தம் குழந்தைகளின் கல்விக்கான ஊற்றுக்களை வற்றி விடாமல், வியர்வையால் பலமேற்றுகின்ற எந்தவொரு மனிதனும், பல்கலைக்கழகத்தினுள்ளும், முன்றிலிலும் நடைபெற்ற சம்பவத்தை, படங்களை, காணொலிகளை சந்திக்கின்ற போது தனக்குள் உருவாக்குகின்ற விம்பங்களையும், மனவோட்டங்களையும் அவ்வளவு சுலபத்தில் எழுத்தில் கொண்டு வந்து விடுதல் முடியாது. "நமக்கேன் வீண் பிரச்சினை" என்ற வார்த்தைகளாகவே அவர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான உரையாடல் ஆரம்பிக்கும் என்பது திண்ணம்!

ஆனால், சச்சரவுகளுக்கு காரணமானவர்களின் ஏக நோக்கமும் கூட இதுதான் என்பதை, இன்றைய மாணவர் ஒன்றியங்களும், மூத்த மாணவர்களும் நெஞ்சார்ந்து புரிந்து கொள்ளல் வேண்டும். தமது பிள்ளைகளுக்கும் இதே நிலைமை வந்துவிடக்கூடாது என்று எதிர்பார்க்கின்ற பெற்றோர்களுக்கு நெருக்குதல்களை கொடுப்பதன் மூலம், வருங்காலத்து மாணவர்களை "வடைக்குள் வண்டு கிடந்தாலும்" எடுத்து எறிந்து விட்டு, சத்தமில்லாமல் சாப்பிட்டு எழும்பிப் போகின்றவர்களாக-எதற்கும் எதிர்த்து குரலெழுப்பாதவர்களாக ஆக்கி விடுவதே அரச அடிவருடிகளின் ஆகக் குறைந்த ஆதாயம் நோக்கிய தேடல்.

மரணத்தின் பின்னும், வார்த்தைகளால் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒருவரான 'மார்ட்டின் லூதர் கிங்', உயிரோடு பிணமான பலரைப் பார்த்து இப்படிச் சொல்லியிருக்கின்றார் "மனித குலத்தின் அவலங்கள் என்பவை, வெகு சிலரின் காட்டுமிராண்டித்தனம் அல்ல, மிகப் பலரின் மௌனம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அரும்பணியாற்றிய நாவலர் பெருமான்

(இன்று 05.12.2012, நாவலர் பெருமானின் குருபூசை தினம்.)

முதறிஞர் புலவர்மணி. வை.க.சிற்றம்பலம்

"நாவலரைப் போல் நமக்கு வேறு ஆளில்லை'' என விதந்துரைத்தவர் அளவெட்டி மௌனமுனி கைலாசபதியாவார். அவருக்கு முன்பே, சரவணமுத்துப்பிள்ளை என்பார்,


**தேனோ கனியோ வெனவே**
**சுவைக்குஞ் செழுந்தமிழின்**
**தானே தனக்கிணையாகி**
**யுதித்துயர் சற்குருவாய்**
**வானோர் புகழ்நல்லை**
**வந்தருநாவலன்**
**வன்புகழை நானோ**
**சொலவல்லன் சேடனும்**
**கூறிட நாடுவனே.**

என்று பாடிப் புகழ்ந்துள்ளார். 1822 ஆம் ஆண்டு அவதரித்த நாவலர் பெருமான் மும்மொழிகள் கற்று சைவ சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றிய சேவைகளோ அளப்பில.

நமது செம்மொழியாகிய தமிழும், அனாதியாகிய சைவ சமயமும் அழிந்துவிடாது எதிர்காலத்தில் பிரகாசிக்க வேண்டுமென்று கருதி அவர் செய்த அருந் தொண்டை நாம் மறக்கலாகாது.

57 ஆண்டுகள் வாழ்ந்த அவர், சைவசமயம் அந்நியரால் அழிக்கப்பட்டு விடுமோ என்று எண்ணித் துடித்தார். மக்கள் மதம் மாறாதிருக்க அவர் செய்த காரியங்கள் பலப்பல. இலங்கையில் மாத்திரமன்றி, தமிழ் நாட்டிலும் பிறசமய தாக்கம் ஏற்பட்டு வருவது கண்டு, அவற்றைத் தடுக்க ஆவன செய்தார்.

தமிழ் நாட்டில் சைவத்தை வளர்க்க பல ஆதனங்கள் இருந்தும், அவை சுயநலப் போக்கில் செயற்பட்டமையால் பொதுசனங்களுக்கு அவை பிரயோசனப் படவில்லையே என்று வருந்தினார். பல புலவர்கள் அறிஞர்கள் இருந்தும் அவர்களது அறிவுத்திறன் பொது சனங்களுக்குப் பயன்படவில்லையே என வருந்திய நாவலர் பெருமான் சைவத்தையும், தமிழையும் வளர்க்கப் பல தொண்டுகளைச் செய்யத் தொடங்கினார்.



போக்குவரத்து வசதி சிரமமான அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி சிதம்பரம் வரை சென்று, அதனைத் தனது தளமாகக் கொண்டு செயற்பட்டார்.

நிர்வாகத் திறன் கொண்ட நாவலர் பிரான் சைவ வினா விடைகளை எழுதி பதிப்பித்து தமிழ் நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் சைவர்கள் மத்தியில் விநியோகித்து சமய அறிவை வளர்த்தார்.

கோயில் வழிபாட்டில் மக்கள் ஈடுபாடுகாட்ட ஊக்குவித்தார். வழிபடும் முறைகளையும் போதித்தார்.

திருமுறைகளை ஓதச் செய்தார். புராணங்களை அச்சிட்டு பரப்பினார். கோயில்களில் புராணபடன வாசிப்பை ஏற்படுத்தினார்.

அத்துடன்மொழியறிவை விருத்தி செய்யும் நோக்கில், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நூல்களை அச்சிட்டு, அவற்றுக்குப் பொருளையும் எழுதி சைவர்களுக்கு குறைந்த விலையில் வழங்கினார். திருவாதவூரடிகள் புராணம், திருத்தொண்டர் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் என்பவற்றையும் அச்சிட்டு வழங்கினார். திருக்குறளை அச்சேற்றினார். பாடல்களால் ஆக்கப்பட்ட புராணங்களின் பொருளை விளங்க வைக்க வசனங்களை எழுதி, அச்சிட்டு வழங்கினார்.

சென்னையில் வித்தியானுபாலன அச்சகத்தை நிறுவியது போல் யாழ்ப்பாணத்திலும் ஒரு அச்சகத்தை நிறுவினார்.

கிராமங்கள் தோறும் திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாக அரசாங்க உதவி பெறும் பல பாடசாலைகளை ஆரம்பித்துவைத்தார். யாழ்.நகரிலே வண்ணார்பண்ணையில் தாமே ஒரு காவிய பாடசாலையை நிறுவி நடத்தினார்.

சங்க இலக்கியங்களைப் பலமாணவருக்குக் கற்பித்து, அவர்களையும் புலவர்களாக்கி வைத்தார். அவர்கள் சைவ சித்தாந்தமும் கற்று மேதாவிகளாகத் திகழ்ந்தனர். அத்துடன் வடமொழியையுங் கற்று வல்லுநராகத் திகழ்ந்தனர்.

நூல்வழியாகவும் திருமுறை ஓதிடும் வழக்கத்தை ஊக்குவித்தும், சைவசமயத்தைப் பரப்பிய நாவலர் பிரான், சமய உண்மைகளை ஆலயங்களிலும், மடாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் தமது சொற்பொழிவுகள் வாயிலாகவும் நாடெல்லாம் அறியச் செய்து சைவத்தை விருத்தி செய்தார்.

இலக்கணத்தை இலகுவாகக் கற்பதற்காக, நன்னூல் காண்டிகையை வெளியிட்டு அதற்கு முன்னோடியாக இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை என்பவற்றையும் வெளியிட்டதோடல்லாமல், தமது காவிய பாடசாலையில் சங்க இலக்கியங்களுடன், குறிப்பிட்ட இலக்கண நூல்களையும் கற்பிக்கச் செய்தார்.

நாவலர் அந்தக் காலத்தில் செய்த பணிகளால் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டு ஆதீனங்களிலும் அவருக்கு பெருமதிப்பு ஏற்பட்டது. அவரை வரவழைத்து திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது. அது குறித்து மகிழ்ந்த சுவாமி விபுலானந்த அடிகளார்

**பாவலர் போற்றும் ஞான தேசிகரை**
**பரிந்தவ ராணையின் வண்ணம்**
**பூவலர் கொன்றை புனைந்தவர் புகழை**
**புலமிகு மறிஞர்கூட்டுண்ண**
**காவலர் வியப்ப உரைத்திடக் கேட்டு**
**கருணைகூர் தேசிகர் இவர்க்கு**
**நாவலர் எனும்பேர் தகுமென அளித்தார்**
**ஞாலத்தார் தகுந்தகு மென்றார்**

எனத் தமது கவிதை மூலம் ஏற்றிப் போற்றியுள்ளார். இப் படியான பெருமைக்குரிய நாவலர் பிரானைத் தமிழ் மக்கள் நினைவு கூரக் கடமைப்பட்டவர்களாவர். ★

# ஈழத் தமிழினத்தைச் சூழ்ந்துள்ள கருந்திரை அகலல்

சி.நித்திலன்

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் இராணுவக் கெடுபிடி எமக்கு சுமார் 30 வருடத்துக்கு முன்னைய சூழலை மீளவும் காட்சிப்படுத்துகிறது. இந்தநிலையில் நீதிக்காகக் குரல் கொடுக்கும் மாணவர்களின் துடிப்பு பாராட்டுக்கு உரியது.

ஆனால் பல்கலைக்கழக பேராசிரியர்கள், பதில் துணைவேந்தர் உட்பட தமது பதவிக்காக அரசின் செயற்பாடுகளுக்குத் துணை போவது வெட்கக்கேடானது. இவர்கள் 2009 ஆண்டில் மௌன ஜடங்களாக இருந்தனர். பேதாக்குறைக்கு இன நல்லிணக்கம் என்ற தலைப்பில் இரண்டு சர்வதேச ஆய்வு மாநாட்டை நடத்தினர். ஆனால் வன்னியில் 2009 ஆண்டு நிகழ்ந்த இனப்படுகொலை பற்றி வாய்திறக்கவில்லை. உண்மையில் இவர்கள் இலங்கை அரசு புரிந்த மனித உரிமை மீறல்களைச் சர்வதேசத்துக்கு இருட்டடிப்புச் செய்தனர். ஊடகவியலாளர்கள் எதுவுமே அறியாத பல்கலைக்கழக மாணவர்களின் கைது பற்றிக் கேட்ட போது அரசியல் கதைக்க வேண்டாம் என்று தொடர்பை துண்டிக்கிறார்கள். ஆனால் இவர்களது அரசியல் விளையாட்டு தமிழினத்துக்கு சாபக்கேடானது.

இத்தகைய மனித உரிமைகளை மதிக்காத யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சர்வதேச மதிப்பை தரம் தாழ்த்த வேண்டியது மனித உரிமை பேணுபவர்களது கடமையாகும். அதாவது மனித உரிமை பற்றித்தெரியாத கல்வி, முழுமையான கல்வி அல்ல. மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத கல்வியியலாளர்கள் சர்வதேச ரீதியில் புறக்கணிக்கப்படல் வேண்டும்.

மேலும் வடபகுதியில் உள்ள நிர்வாக அதிகாரிகள், சட்டத்தரணிகள், நீதிபதிகள், மருத்துவர்கள் போன்றோரும் 2009 ஆண்டு நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள், கொலைகள் குறித்து தமது புலமைசார் தொழில் ரீதியில் கண்டனமோ கவலையோ தெரிவிக்கவில்லை.

இத்தகைய செயல் எமது சமூகத்தை மூடியுள்ள கருந்திரைகளே. இவை அகல வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்குறைகள் எமது சமூகத்தில் அடிமைத்தனத்துக்கு அடிமையானவர்களைச் சிந்திக்க வைக்கும் என நம்புகிறோம். ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு உள்ளக அறிக்கையில் வெட்ட வெளிச்சமாகி உள்ள எமது சமூக அழிவினை சமகாலத் தமிழ் புத்திஜீவிகள் தமது புலமைசார் அறிவுக்குள் அடக்கி கதைத்து மிகவும் வேதனைக்குரியது. ★

# உன்னை நீ எடுத்துக் காட்டாக எடுத்துக் கொள்

பா.அனோஜா
எம்.ஆர்.ரி.சி
யாழ்.பல்கலைக்கழகம்.

நாம் பல சமய கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு சென்றிருக்கிறோம். அங்கே ஒவ்வொரு பேச்சாளரதும் உரையைக் கேட்கின்றோம். ஆனால் அவர்கள் கூறும் அறிவுரையின் எவ்வளவு பகுதியை ஏற்றுக்கொள்கின்றோம் என்பதுதான் இங்கு முக்கியம் வகிக்கின்றது.

ஒவ்வொரு பேச்சாளனும் பேசும் போது "காந்தி அப்படி வாழ்ந்தார், இயேசு இப்படி வாழ்ந்தார், புத்தபிரான் எவ்வாறு தர்மத்தை போதித்தார்'' என்று சில எடுத்துக்காட்டுக்களைக் கூறுவார்கள். ஆனால் அந்த எடுத்துக்காட்டுகளுக்கும் அந்த பேச்சை பேசும் நபருக்கும் எவ்வளவுதான் தொடர்பு இருக்கின்றது என்பதைத்தான் நாம் அறிய முற்படுவோம்.

எனவே உண்மையான ஒரு பேச்சாளர் பேசும் போது "நான் எப்படி வாழ்ந்தேன், கடின உழைப்பின் மூலம் எப்படி முன்னுக்கு வந்தேன், எனது ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் இப்படி வருகின்றன'' என்பதைத்தான் எடுத்துக்காட்டாகக் கூற வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பேசும்போது "நான் எவ்வளவு தகுதியுள்ளவனாக இருக்கின்றேன்'' என்பதைக் கருத்தில் கொண்டே பேச வேண்டும். எமது தகுதிக்கு மீறி நாம் கருத்துக்களை முன்வைக்க முயலக் கூடாது. அப்பொழுது தான் எம்முடைய உரைக்கு ஒரு பூரணத்தன்மை உருவாகும்.

உதாரணமாக, பாடசாலையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர் சாதி, மதம் பார்க்கக் கூடாது, ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு பார்க்கக்கூடாது என்று அறிவுரை கூறுவார்.

ஆனால் அந்தக் கூற்றுகளுக்கும் ஆசிரியருக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கின்றது என்பதைத்தான் மாணவர்கள் பார்க்க வேண்டும். (ஆசிரியர்கள் மன்னித்து கொள்வார்கள்). ஆசிரியர் கூறும் கருத்துக்களும், அவருடைய நடத்தைகளும் பிழையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஆசிரியரின் கூற்றுகளுக்கு எதிராகவே மாணவர்கள் செயற்பட முற்படுவார்கள்.

இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது "தத்துவம், அறிவுரை கூறுவதற்கு எடுத்துக் காட்டாக மற்றவர்களை எடுத்துக் கொள்ளாமல், உன்னையே நீ எடுத்துக்காட்டாகக் கொள்''

அப்பொழுதுதான் அந்தச் சொற்பொழிவுக்கு ஒரு பூரணத் தன்மை கிடைக்கும். இல்லா விட்டால் எல்லோரும் கூறுவது போல் செல்லாக் காசாகி விடும். இதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சித் தலைவர்

முன்னொரு காலத்தில் அரேபிய நாடு ஒன்றில் ஆட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்பு, ஒரு நாள், வீதியிலே நடந்து சென்றுகொண்டிருந்தார். அவர் தோளிலே ஒரு பெரிய துணி மூட்டை. அதைச் சுமந்து கொண்டு கடைத் தெருவை நோக்கி அவர் சென்றுகொண்டிருந்தார். வழியிலே அவரைச் சந்தித்த உமர்

"கலிபா அவர்களே! எங்கே செல்கிறீர்கள்" என்று கேட்டார்.

கலீபா என்றால் ஆட்சித் தலைவர் என்று கருத்து.

இதற்கு அவர் கூறினார்: "நான் துணி வணிகம் செய்கின்றவன், அதனாலே துணி வியாபாரம் செய்வதற்காகச் சென்றுகொண்டிருக்கின்றேன்!" என்று கூறினார்.

"நீங்கள் இப்போது இந்த நாட்டுக்கு ஆட்சித் தலைவர்...

ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றீர்கள்! நீங்கள் வியாபாரம் செய்யச் சென்றால்.. அரசுப் பணிகளைச் செய்வது யார் என்று கேட்டார் அவர். "நான் அரச பணிகளை மட்டும் செய்து கொண்டிருந்தால் என் குடும்பத்தைக் காப்பாற்றுவது யார்? என்று கேட்டார்.

இப்படிக் கேட்டவர் யார் தெரியுமா?

அவர் தான் அபூபக்கர். இறைதூதர் முகம்மத் அவர்களுக்குப் பின்னர் கலீபாவாகத் தேரந்தெடுக்கப்பட்டவர். அப்போதெல்லாம் ஆட்சித் தலைவருக்கு சம்பளம் எதுவும் கிடையாது.

இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று யோசனை செய்தார் உமர். அபூஉபைதாவிடம் அழைத்துக் கொண்டு சென்றார்.

அவர் யார் என்றால்.. அவர்தான் பொதுநிதிக் கருவூலத்தின் பொறுப்பாளர். அவரிடம் பிரச்சினையைக் கூறினார்.

"ஆட்சித் தலைவருக்குப் பொது நிதியிலிருந்து ஊதியம் அளிக்க முடியுமா" என்று கேட்டார்.

"பொதுநிதி விதிகளின்படி அதற்குச் சாத்தியம் இல்லை என்று கூறினார் அவர்.

"சரி.. வேறு ஏதாவது வழி இருக்கிறதா?" என்று கேட்டார் உமர்.

அபூஉபைதா சிறிது யோசனை செய்து பார்த்தார். பின்னர் கூறினார். "மக்காவிலேயிருந்து மதினாவுக்கு குடிபெயர்ந்து வந்த அகதிகளுக்கு நிதி உதவி அளிக்க விதிகளில் இடம் இருக்கு... அப்படிப் பார்த்தால் அபூபக்கரும் அகதிதானே! அதனால் எல்லா அகதிகளுக்கும் கொடுப்பது மாதிரியே இவருக்கும் ஒரு தொகை அளிக்கலாம் என்றார். கலீபா அபூக்கருக்கு இந்த அகதி உதவித் தொகையைத்தான் கொடுத்து வந்தார்கள். இருந்தாலும் கலீபா என்றதுக்காக ஏனைய அகதிகளை விட அதிகமான தொகையைப் பெற அவர் விரும்ப வில்லை.

மார்ப்புப் பக்கம் கிழிந்திருந்த ஒரு மேலாடையைத்தான் அணிந்திருந்தாள். அவருடைய மனைவி அஸ்மா.

அவள் ஒரு நாள் "தேன் பருக ஆசையாக இருக்கிறது" என்றாள்.

"எமக்குக் கிடைக்கும் ஊதியம் குடும்பச் செலவுக்கே போதாது. அந்த நிலையிலே தேன் வாங்க பணத்துக்கு நான் எங்கே போவேன்!" என்றார் அவர். சிலநாள் கழித்து அவர் மனைவி ஒரு தொகையைக் கணவனிடம் கொடுத்து தேன் வாங்கி வரச் சொன்னார். உனக்கு இந்தப் பணம் எவ்வாறு கிடைத்தது? என்றார்.

"நீங்கள் தினமும் குடும்பச் செலவுக்காகக் கொடுத்து வந்த பணத்தை சிறிது சிறிதாக மீதப்படுத்தி வைத்தேன்" என்றாள். இவருக்கு ஆச்சரியம்!

அபூபக்கர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நேராக பொதுநிதிக் கருவூலப் பொறுப்பாளரிடம் சென்றார்.

"இந்தப் பணத்தை பொது நிதியிலே சேருங்கள். இது அதிகமாக எனக்குத் தரப்பட்டு வந்த ஊதியம். அடுத்த மாதத்தில் இருந்து இந்தத் தொகையைக் குறைத்து விடுங்கள்" என்றார்.

"பசியைத் தணிக்க தேவையான அளவு உணவு, ஒரு சோடி உடை... இதைத்தவிர கூடுதலாக மக்கள் பொதுநிதியிலிருந்து பெற என் குடும்பத்தாருக்கு உரிமை இல்லை. " என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.அவர் வாங்கிக் கொண்டு வந்த குறைந்த ஊதியம் கூட அவர் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது.

இறுதி நேரம்..

அவர் தம் மகள் ஆயிஷாவை அழைத்தார்.

"மகளே! இதுவரை பொதுநிதியிலிருந்து நான் பெற்று வந்த தொகை என் இதயத்தில் பாரமாக இருக்கின்றது. என் தோட்டத்தை விற்று அதில் வரும் பணத்தில் இருந்து நான் இதுவரை பெற்று வந்த ஊதியத் தொகையைக் கணக்கிட்டு பொது நிதியிலே சேர்த்துவிடு!" என்றார்.

பதவி ஏற்பதற்கு முன்னால் தன்னிடம் இருந்ததை விட இப்பொழுது கூடுதலாக என்ன சொத்து இருக்கின்றது என்று பார்த்தார். "ஓர் ஒட்டகம் ஒன்று ,ஒரு கோப்பை, ஒரு பணியாள் இவற்றையும் அடுத்த கலீபாவாக வருகிறவரிடம் ஒப்படைத்து விடுங்கள் என்றார். அதேபோல அடுத்து வந்த உமரிடம் ஒப்படைத்தார்கள். அப்பொழுது உமர் கூறினார்.

"அபூபக்கரே! இந்த முன்மாதிரியால் உங்களுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறவர்களை மிகுந்த நெருக்கடிக்கு ஆளாக்கி விட்டீர்கள்!" என்று சொல்லி கண்கலங்கினார்.


இறுதியாக அபூபக்கர் தம் குடும்பத்துக்கு விட்டுச் சென்ற சொத்து: ஒரு படுக்கை விரிப்பு..... ஒரு போர்வை.... என்பவை தான்! ஆட்சிப் பொறுப்புக்கு வருபவர்கள் சிந்திக்க வேண்டிய ஒரு தகவல் இது.

ஓர் ஊரிலே ஒரு மன்னர் இருந்தாராம். அமைச்சர் வந்து அவரிடம் கூறினார்.

"மன்னா! எங்கள் இராஜ்யத்திலே இனிமேல் லஞ்ச ஊழல் இருக்காது" என்றார். "ஆஹா! அப்படி என்றால், ஊழல் பேர்வழிகளையெல்லாம் நாடு கடத்திவிட்டார்களா? என்று கேட்டார் மன்னர்.


இதற்கு அவர்.

"அப்படி இல்லை... இனிமேல் கொடுப்பதற்கு மக்களிடம் பணம் இல்லை என்றார்!



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மக்களின் அறிவுத் தேடலை தீர்க்கும் புற்றளை சனசமூக நிலையம்



**கர்ணன்**

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்குகிறது. அதற்காகத்தான் ஊர்கள் தோறும் சனசமூக நிலையம் என்ற பெயரில் வாசிகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வாசிகசாலைகள் மனிதனின் அறிவு தேடும் அமைவிடங்களாக மட்டுமன்றி எதிர்கால சமுதாயத்தில் ஓர் அறிவுள்ள தெளிவான சிந்தனைப் போக்குடைய சந்ததியை உருவாக்க ஓர் உந்து சக்தியாகத் தொழிற்படும் நிலையங்களாகவும் அமைகின்றன.

யாழ்ப்பாணம் வடமராட்சியில் புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவ்வாறான ஒரு பகுதியே புலோலி எனப் பெயர் பெற்ற ஒரு பெருங்கிராமமாகும். புலோலி எனப் பெயர்பெற்ற பெருங்கிராமத்தில் புற்றளை என்னும் ஊரில் 1944 ஆம் ஆண்டு புலோலி தமிழ் இளைஞர் கழகம் என்னும் அமைப்பு கற்றோரால் உருவாக்கப்பட்டது.

ஊர் மக்கள் மத்தியில் தமிழ்மொழியையும், அசைவத்தையும் வளர்ப்பதோடு நின்றுவிடாமல் அவர்களைப் புதிய வழிகளில் சிந்திக்க வைக்கின்றது. அத்துடன் அவர்களை அனைத்துத் துறைகளிலும் முன்னேற உற்சாகம் அளிக்கும் வகையில் செயற்படவெனத் தோன்றியது. இந்தக்கழகம் தமிழ்மொழியுடன் அதனைச்சார்ந்த தமிழ் இலக்கியம், மற்றும் கல்வி யையும் வளர்க்க உழைத்து வந்தது.

குறித்த தமிழ் இளைஞர் கழகம் அக்காலத்தில் புற்றளையில் நூல்நிலையம் ஒன்றை உருவாக்கியது. கழகத்தின் பெயரில் உருவாக்கப்பட்ட மேற்படி நூல் நிலையம் அமைக்கப்பட்ட இடம் பல விசேட அம்சங்களைக் கொண்டுள்ளது. இதனால் இது பெருமை மிக்கதாக உயர்ந்து நிற்கக் காரணமாக அமைந்தது எனலாம்.

இந்த நூல் நிலையத்தின் முன்புறம் பலகல்விமான்களையும், திறமைசாலிகளையும் உருவாக்கிய அந்த நாளில் புற்றளை சாரதாபீட வித்தியாசாலை என்னும் பெயர் கொண்டமைந்து இந்த நாளில் புற்றளை மகா வித்தியாலயமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த நிலையில் சிறப்புமிகு பாடசாலை ஒருபுறத்திலும், புற்றில் உதித்து புதுமைப் பிள்ளையார் எனப் பலராலும் பூஜிக்கப்பட்டு வரும் புற்றளைப் பிள்ளையார் ஆலயம் அதனுடன் இணைந்த தீர்த்தக் கேணியும் மறுபுறத்திலும் அமைந்துள்ளது.

கழகத்தின் ஐந்தாவது ஆண்டில் அரசின் உதவியினை எதிர்பார்த்து புற்றளை வாசிகசாலை புற்றளை சனசமூக நிலையமாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே கழகத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில் ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. நூல்நிலையம் ஒன்று அமைய தேவையான சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்ட சூழலில் அந்தக் காலப் பெரியோர்களால் அமைக்கப்பட்ட நூல்நிலையம் இன்று புற்றளைச் சனசமூக நிலையமாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது.

1940 களுக்கு முன்பிருந்து புற்றளையையும் அதனை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த மக்களுக்கு சைவத்தமிழ் அறிவுடன் கூடிய கல்வியைப் போதித்து வந்த புற்றளை வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய கார்த்திகேசு வாத்தியார் எனப் பலராலும் அறியப்பட்ட கல்விமான் உட்பட கலைவாணர்கள் ஒன்றிணைந்து பனையோலையால் வேயப்பட்ட சிறுகொட்டிலில் வாசிகசாலை ஒன்றை உருவாக்கினார்கள். ஆரம்பத்தில் ஒரு பத்திரிகை, நலன்விரும்பிகளின் அனுசரணையில் இடப்பட்டு ஊர் மக்களின் அறிவுமேம்பாட்டிற்கும், வாசிப்புப் பழக்கத்துக்கும் அத்திபாரமிடப்பட்டது.

வாசிகசாலை ஆரம்பித்த காலம் தொட்டு நன்றாக இயங்கி வந்த புலோலி தமிழ் இளைஞர் கழகம், தொடர்ந்தும் தொழிற்படுவதில் சில சிரமங்களை எதிர்நோக்கியதால் இந்த நிலை நீடிக்கக்கூடாது என எண்ணம் கொண்ட ஊர் மக்கள் புலோலி தமிழ் இளைஞர் கழகத்தின் பொதுக்கூட்டத்தை மீண்டும் கூட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். 1959 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 17 ஆம் திகதி நடைபெற்ற புலோலி தமிழ் இளைஞர் கழக பொதுக் கூட்டத்தில் வி.எஸ்.சி.சோமர் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட ஆசிரியர் வே.சோமசுந்தரம் தனது நீண்ட உரையில்; இதுவரைகாலமும் புற்றளை சாரதா பீட வித்தியாசாலைச் சங்கமும், புலோலி தமிழ் இளைஞர் கழகமும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வந்துள்ளன.

கழகத்தின் ஐந்தாவது ஆண்டில் அரசின் உதவியினை எதிர்பார்த்து புற்றளை வாசிகசாலை புற்றளை சனசமூக நிலையமாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே கழகத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். அதற்கமைய புலோலி தமிழ் இளைஞர் கழகம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

புனரமைப்புச் செய்யப்பட்ட புலோலி தமிழ் இளைஞர் கழகத்தின் தலைவராக புற்றளை சாரதாபீட வித்தியாசாலையின் ஆங்கில ஆசிரியராக விளங்கிய க.வைரமுத்து தலைவராகவும், உபதலைவர்களாக நில அளவையாளராகவும், புலோலி கிராமசபையின் தலைவராகவும் இருந்த த.சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை ஆகியோரும், காரியதரிசியாக க.விநாசித்தம்பியும், தனாதிகாரியாக ச.செல்லத்துரையும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி நிர்வாக சபையைக் கொண்ட தமிழ் இளைஞர் கழகமே பிற்காலத்தில் வாசிகசாலையாக இருந்த புற்றளை சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்து வந்துள்ளது. இந்தச் சபையின் முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் புற்றளை சனசமூக நிலையம் முதலாம் தரத்துக்கு உயர்த்தப்பட்டதுடன் அரசநன்கொடை பெறும் தகுதியையும் பெற்றுக் கொண்டது. சனசமூக நிலையங்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் முதல் இடத்தையும், இயல் இசைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது. 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற கழகத்தின் பொதுக் கூட்டத்தில் வைத்து வே.சோமசுந்தரம், நா.க.ஆறுமுகம், ச.செல்லத்துரை ஆகியோர் முறையே தலைவர், காரியதரிசி, தனாதிகாரி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு, நிர்வாகக் கழகத்தையும், சனசமூக நிலையத்தையும் பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்த நிர்வாக சபை தனது செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்தது.

1963 ஆம் ஆண்டு நடைபெற்ற புலோலி தமிழ் இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் வே.சோமசுந்தரம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். காரியதரிசியாக பண்டிதர் கு.க.வைரவப் பிள்ளையும், தனாதிகாரியாக சி.வைரமுத்துவும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த நிர்வாகக் குழுவினர் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி அந்தபகுதி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும் என்ற கருத்தினையும் வலியுறுத்தியதுடன், அதன் ஒரு செயற்பாடாக தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு சனசமூகநிலையத்தின் அனுசரணையில் பல பெண்கள் தையல் பயிற்சிகளில் ஈடுபட்டனர். இந்தப் பயிற்சியைப் பெற்ற பெண்கள் சுயபொருளாதாரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தூக்க வேண்டுமா? எதிர்ப்போரே தீர்மானிக்கட்டும்

## இளைஞர்களின் சக்தி பலம்மிக்கது என்கிறார் ஜெனார்த்தனன்



திருகோணமலை,டிசெ.5
நாம் ஆயுதம் தூக்க வேண்டுமா என்பதை எங்களை எதிர்ப்பவர்களே அதனைத் தீர்மானிக்க வேண்டும். அமைதி வழியில் போனவர்களைச் செல்லவிடாது அடிதடிகளைப் பிரயோகித்து மாணவர்களின் ஆவேசத்தைத் தூண்டி இருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைத் தீவில் சிறுபான்மையினத்தின் மீதான அடக்குமுறை காட்டப்படுவதை மீண்டுமொருமுறை சர்வதேசத்துக்கு அரசானது மெய்ப்பித்துக்காட்டியுள்ளது.

இளைஞர்களின் சக்தியென்பது பலம்மிக்கது. அதனை அழிக்க நினைப்பது அல்லது ஒடுக்க நினைப்பது பொல்லைக் கொடுத்து அடி வாங்குவதுக்கு ஒத்தது.


இலங்கை வரலாற்றைப் புரட்டிப்போட்ட போர் வெடிக்க பல்கலைக்கழகங்களுக்கான தமிழ் மாணவர் களின் அனுமதி தொடர்பான பிரச்சினையே சிறு தீப்பொறியாக இருந்ததென்பதை மறந்து விடவேண்டாம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் - சிங்கள மாணவர்கள் இணைந்து கல்வி பயில்கின்றனர். இதனால் அவர்களுக்கடையில் மனக்கசப்புகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்பவேண்டிய அரசே அவர்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கக் களம் அமைக்கிறது.

மாணவர்களிடையே ஏற்படும் சிறு பிரச்சினைகளைக் கூட இன ரீதியான வன்முறைகளாக உருமாற்றுவதற்கு சில உள்ளார்ந்த சக்திகள் முயற்சிக்கின்றன.

அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட சிறிய பிரச்சினையை இன ரீதியான முறுகல் நிலையாக அடையாளம் காட்டியிருப்பதும் மாணவர்களிடையே காணப்படும் ஒற்றுமையை குலைப்பதற்கான ஒரு முயற்சியாகவே நாங்கள் கருதுகின்றோம்.

இத்தகைய அடக்குமுறைகள்தொடருமானால் மாணவர்களின் பலம் பற்றி அரசுக்கு தெரிய வரும் காலம் தொலைவில் இல்லை.- என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச-40)



திருகோணமலையில் இக்ராட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பயிற்சி நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் காணப்படுகிறார்.

## செருப்பைக் கொண்டு திருடரை தேடிப் பிடித்தது மோப்பநாய்!

பதுளை,டிசெ.5
பொலிஸ் மோப்ப நாயொன்று செருப்பை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கௌவிச் சென்று திருடர்களை கண்டு பிடித்துக் கொடுத்த சம்பவம் பதுளையில் இடம் பெற்றுள்ளது.

பதுளையில் வீடொன்றிலிருந்து மிளகு திருடிய திருடர்கள் நால்வரையே இவ்வாறு பொலிஸ் மோப்பநாய் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கண்டுபிடித்துக் கொடுத்துள்ளது.

பதுளை, மீஹாவத்தையிலுள்ள வீடொன்றில் இருந்து மிளகு மூடைகள் காணாமற் போயுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

திருடர்களை பொலிஸ் மோப்பநாய் கொண்டு கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்தனர்.

மிளகு திருடப்பட்டதாக கூறப்படும் வீட்டுக்கு அருகில் காணப்பட்ட செருப்பை கௌவிய மோப்பநாய் சுமார் ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் சென்று வீடொன்றுக்கு முன்பாக நின்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வீட்டை சோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் அந்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிளகு மூடைகளை மீட்டதுடன், சந்தேகத்தின் பேரில் நால்வரை கைது செய்துள்ளனர். (ச)

## எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை காலமானார்



திருகோணமலை,டிசெ.5
திருகோணமலை - மட்டக்களப்பு கத்தோலிக்க மறைமாவட்ட முன்னாள் ஆயர் லியோ ராஜேந்திரம் அன்ரனி ஆண்டகை நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை திருகோணமலையில் காலமானார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, கரம்பொன் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆயர் 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராகப் பணிபுரிந்து, 1983ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

மறைந்த ஆயரின் பூதவுடல் திருகோணமலை, உவர்மலையில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் இன்று புதன்கிழமைவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று மாலை திருகோணமலை புனித் மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஆலயத்தில் வைக்கப்படும். விசேட நல்லடக்கத் திருப்பலியை அடுத்து பூதவுடல் மரியாள் பேராலயத்தின் திருப்பலிப் பீடத்தில் அடக்கம் செய்யப்படும். (ச)

## தொல்பொருள்கள் தொடர்பில் விளக்கம்

அம்பாறை,டிசெ.5
சட்டவிரோதமாக தொல்பொருள்கள் அகழ்வில் ஈடுபடுதல், அதற்கான தண்டனை, தொல்பொருள்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம், தொல்பொருள்களினால் நாட்டுக் கிடைக்கும் நன்மை போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து திருக்கோவில் பிரதேச சிவில் பாதுகாப்பு கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாகாம கிராமத்தில் சட்டவிரோதமாக தொல்பொருள் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டசிலர் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த சட்டவிரோத அகழ்வு நடவடிக்கை குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## மட்டு. மாநகரசபையின் பொதுநூலக கொடிதினம்



மட்டக்களப்பு,டிசெ.5
மட்டக்களப்பு மாநகர சபையின் பொதுநூலக கொடி தினம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப் பட்டது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்தக் கொடி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் ஆகியோருக்கு கொடி அணிவிக்கப்பட்டது. (ச)

## துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி பாண் வியாபாரியிடம் கொள்ளை

### பணமும் கைபேசியும் அபகரிப்பு

அம்பாறை,டிசெ.5
பாண் வியாபாரி ஒருவரை வழிமறித்து அவரை ஆயுதமுனையில் அச்சுறுத்தி பணமும், கையடக்கத் தொலைபேசியும் கொள்ளையிட்ட சம்பவம் அம்பாறையில் இடம் பெற்றுள்ளது.

ஓட்டோவில் பாண் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் இந்த நபரை ஆயுதமுனையில் வழிமறித்த இருவர், அவரிடமிருந்த பணத்தையும் கையடக்கத் தொலைபேசியையும் கொள்ளையிட்டுள்ளனர்.

பனங்காடு, கண்ணகிபுரம் பிரதேசங்களில் இந்த நபர் ஓட்டோவில் பாண் வியாபாரம் செய்துவிட்டு திரும்புகையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 8,500 ரூபா பணத்தையும் ஒரு கையடக்கத் தொலைபேசியையும் பல வந்தமாகப் பறித்தனர் என்று பாண் வியாபாரி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கறுப்பு நிற ரீசேர்ட் அணிந்திருந்த இந்தக் கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்தவாறு துப்பாக்கிகளுடன் இருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பாகிஸ்தானைப் போன்று இலங்கையிலும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி

### வீரவன்ச கண்டுபிடிப்பு



அம்பாறை,டிசெ.5
பாகிஸ்தானைப் போன்று இலங்கையிலும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அம்பாறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் சூழ்ச்சித் திட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் எவ்வாறு நீதிமன்றத்துக்கும் அரசுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டனவோ அதேவிதமான மோதல்களை இலங்கையிலும் ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் நீதிமன்றத்துக்கும் அரசுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த மேற்குலக நாடுகள் சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தன. மேற்குலக நாடுகளின் இத்தகைய திட்டங்கள் தொடர்பில் அரசு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.- என்றார். (ச)

## அம்பாறையில் மீண்டும் நில அதிர்வு

### தகவல் திரட்ட நடமாடும் நிலையங்கள் அமைக்கப்படும்

அம்பாறை,டிசெ.5
அம்பாறை, வடினாகல பிரதேசத்தில் மீண்டும் சிறு அளவிலான நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மூன்று நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த நில அதிர்வுகள் தமது நில அதிர்வு கண்காணிப்பு மையங்களில் பதிவாகவில்லை என்று புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும் குறித்த பிரதேசங்களில் உணரப்பட்ட நில அதிர்வுகள் குறித்து தகவல்களைத் திரட்டும் பொருட்டு அம்பாறை மாவட்டத்தில் மூன்று நடமாடும் நில அதிர்வு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் அவ்வப்போது சிறியளவிலான நில அதிர்வுகள் அண்மைக்காலமாக உணரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** உறவினர்களின் அன்புத்தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிட்டும். நவீன மின் சாதனங்கள் வாங்குவீர்கள். வெளி வட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கடகம்:** வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். வழக்கில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் கோபத்தைக் காட்டாதீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். சகோதர வகையில் பிணக்குகள் ஏற்படும். உடல்நலத்தில் கவனம் தேவை. சிக்கனமாக இருங்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**கன்னி:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். சகோதரர் பாசமழை பொழிவர். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**நாளை**

கார்த்திகை -21 வியாழக்கிழமை 06.12.2012
திதி: அ'ட்டமி பி.இ. 04.11 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ 03.37வரை
சுபநேரம்: 07.47- 09.17 வரை
ராகுகாலம்: 01.47- 03.17 வரை

**துலாம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உடல் நலம் பாதிக்கும். வியாபாரத்தில் தர்மசங்கடமான சூழல்களுக்கு ஆளாவீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. தாயின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. சகோதர வகையில் நன்மை கிட்டும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும்.

**மீனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் சந்திப்பு நிகழும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | 7 | 2 | 1 | | |
| | 2 | | | 1 | | | 3 | 9 |
| | | 4 | | | | | 5 | 8 |
| | 5 | | 1 | | 6 | 8 | 2 | 3 |
| | 3 | | | | | | 1 | |
| 9 | 6 | 1 | 3 | | 8 | | 7 | |
| 7 | 1 | | | | | 5 | | |
| 5 | 4 | | | 6 | | | 8 | |
| | | 3 | 7 | .5 | | | | 1 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 9 | 6 | 1 | 7 | 8 | 3 |
| 6 | 3 | 9 | 2 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 1 | 7 | 8 | 3 | 5 | 4 | 9 | 6 | 2 |
| 7 | 1 | 2 | 6 | 4 | 9 | 5 | 3 | 8 |
| 4 | 6 | 5 | 1 | 3 | 8 | 2 | 7 | 9 |
| 9 | 8 | 3 | 5 | 7 | 2 | 6 | 1 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 1 | 6 | 3 | 2 | 5 |
| 5 | 4 | 6 | 8 | 2 | 3 | 1 | 9 | 7 |
| 3 | 2 | 1 | 7 | 9 | 5 | 8 | 4 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை விரிவுரையாளர் சேவை விசேட சேவையாகப் பிரகடனம்?

## பரிந்துரைகளை முன்வைக்க குழு நியமனம்

கொழும்பு,டிசெ.5

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சேவையை விசேட சேவையாகப் பிரகடனப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கான குழு அடுத்தவாரம் நியமிக்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.


பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று அவர் கூறினார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலின் போது குறித்த குழுவுக்கான தமது பிரதிநிதிகளின் பெயர்களை அமைச்சிடம் கையளித்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பல்கலைக்கழகத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் பணி பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



சிகரெட் பெட்டிகளில் அதன் பாதிப்புக்கள் தொடர்பாகப் படங்கள் அச்சிடப்பட வேண்டும் என்ற புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மீது வழக்குத் தொடர்ந்துள்ள வெளிநாட்டு புகைத்தல் நிறுவனத்துக்கு எதிராக 10 லட்சம் கையொப்பம் சேகரிக்கும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# விசாரணைகள் பக்கச்சார்பின்றி இருக்க வேண்டும்

## நீதிவான்கள் வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.5

குற்றப் பிரேரணை தொடர்பில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் என்று நீதிவான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரதம நீதியரசருடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பின் பின்னர் நீதிவான்கள் கூட்டாகவிடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடனும், பக்கச்சார்பற்ற முறையிலும் நடத்தப்படவேண்டும். குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர், குற்ற விசாரணைகளை மேற்கொள்கின்றமை ஏற்புடையதல்ல.

இந்த நடவடிக்கை நீதியின் அடிப்படை பண்புகளை மீறும் வகையில் அமைந்துள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# எந்தக் குற்றமும் செய்யவில்லை நிரூபித்தால் பதவி விலகுவேன்

## பிரதம நீதியரசர் சொல்கிறார்

கொழும்பு,டிசெ.5

ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாலும் பதவி விலகுவேன் என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.



மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிவான்களுக்கான விசேட கூட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு குற்றச் செயலிலும் நான் ஈடுபடவில்லை.

நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்த விசாரணைகளில் முன்னிலையாகின்றேன்.

அனைவரையும் தனித்தனியாக சந்திக்க முடியாத காரணத்தினால் இவ்வாறு கூட்டமொன்றை ஏற்பாடு செய்தேன்.- என்றார்.

கூட்டத்தில் பங்கேற்ற நீதிவான்களில் சிலர் அரசுக்கு எதிராகவும், சிலர் பிரதம நீதியரசருக்கு எதிராகவும் கருத்துக்களை வெளியிட்டனர் என்று சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சூழ்ச்சித் திட்டங்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை

## எந்தத் தடை வந்தாலும் திவிநெகும நிறைவேற்றப்படும் என்கிறார் பஸில்

கொழும்பு,டிசெ.5

உள்நாட்டு, வெளி நாட்டு சக்திகளின் சூழ்ச்சித் திட்டங்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



**மூன்று தசாப்த காலம் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்ததனைப் போன்றே திவிநெகும சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

யக்கல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் திவிநெகும சட்டம் நிறைவேற்றப்படும் .

மூன்று தசாப்த காலம் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்ததைப் போன்றே திவிநெகும சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நாட்டில் குறைந்த வருமானம் ஈட்டுவோரின் எண்ணிக்கை கிரமமான முறையில் வீழ்ச்சி யடைந்து வருகின்றது. எந்தவொரு முற்போக்கான தீர்மானத் துக்கும் தடை கள் ஏற்படுத்தப்படுவது வழமையானதாகும்.

இதேவேளை திவிநெகும சட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

கடந்த 30 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.- என்றார். (ச)

# 24 மனித மண்டையோடுகள் இதுவரை மீட்பு

கொழும்பு,டிசெ.5

மாத்தளை வைத்திய சாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித புதை குழியில் இருந்து இதுவரை 24 மண்டை ஓடுகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 23 ஆம் திகதி மாத்தளை வைத்திய சாலையில் புதிய கட்டட மொன்றை அமைப்பதற்காக நிலம் தயார்படுத்தப்பட்ட போது எச்சங்கள் சில கண்டெடுக்கப்பட்டன.

இந்த எச்சங்கள் மனிதர்களுடையவை என்று மாத் தளை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியதையடுத்து அது தொடர்பாக மாத்தளை பொலிஸ் நிலையத்தில்முறையிடப்பட்டது.

நீதிமன்றத்தின் அனு மதியுடன் குறித்த பகுதியில் அகழ்வு நடவடிக்கை ஆரம் பிக்கப் பட்டதுடன், இதுவரை 24 மண்டை ஓடுகளும் எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊட கப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# உணவுப் பொருள்களின் தரத்தை அறிய தினமும் விசேட சுற்றிவளைப்புக்கள்

## 50 பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ.5

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வரும் உணவுப் பொருள்களின் தரம் மற்றும் விலைகுறித்து ஆராய்வதற்கு தினமும் விசேட சுற்றிவளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் செயற்பாட்டை துரிதப்படுத்தும் நோக்கில் 50 பட்டதாரிகள் நுகர்வோர் அதிகார சபையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் 50 பட்டதாரிகளும் நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்பு அதிகாரிகளாக உள்வாங்கப்படவுள்ளனர்.

நாடு முழுவதிலும் நடத்தப்படும் சுற்றி வளைப்புக்களில் பட்டதாரிகளை இணைத்துச் செயற்படுவதன் மூலம் பணிகளை துரிதப்படுத்த முடியும். அத்துடன் நுகர்வோர் பாதிப்படைவதைத் தவிர்க்கவும் முடியும்.

இதேவேளை நுகர்வோரிடமிருந்து உடனுக்குடன் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கென புதிதாக நான்கு இலக்கங்களுடன் கூடிய அவசர தொலைபேசி இலக்கமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி கிடைத்துள்ளது.

காலாவதியான உணவுப் பொருள்கள், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுபவை, கட்டுப்பாட்டு விலையை மீறியவை, மனிதப் பாவனைக்கு ஏற்ற தரத்தில் இல்லாதவை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை ஆகியன குறித்து நுகர்வோர் சட்ட விதிமுறைகளுக்கு அமைய சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக தற்போது அரிசி விற்பனை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

தற்போது பண்டிகைக் காலமாகையால் அரிசி தட்டுப்பாட்டை ஏற்படுத்த பல வர்த்தகர்கள் திட்டம் தீட்டி செயற்பட்டு வருகின்றனர்.

எனவே இவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக தடும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உத்தர விட்டுள்ளார்.- என்றார். (ச)

# அகதிகள் வருகை அதிகரிப்பு

ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கையர்கள் பலர் தொடர்ந்தும் வெளியேற்றப்படுகின்ற போதும், அங்கு அகதி அந்தஸ்து கோருவோரின் எண்ணிக்கை குறையவில்லை என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து இதுவரை ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட 700 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

எனினும், இந்த ஆண்டு 6000 இலங்கையர்கள் அங்கு அகதி அந்தஸ்து கோரி சென்றிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமது அரசு, இலங்கை அகதிகளை நாடுகடத்தும் செயற்பாடுகளைக் கைவிடப் போவதில்லை என்று ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்தார்.

# நாடுகடத்தப்பட இருந்த 56 இலங்கையர் தப்பினர்

## ஆஸி. அரசுக்கு சட்டச் சிக்கல்

கொழும்பு,டிசெ.5

ஆஸ்திரேலிய அரசுக்கு சட்டச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை நாடு கடத்தப்படவிருந்த 56 இலங்கையர்கள் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் சிட்னி நீதிமன்றம் குறித்த இலங்கையர்களின் நாடு கடத்தலுக்கு இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்தத் தடையுத்தரவு நாளை வியாழக்கிழமை வரை நடைமுறையில் இருக்கும். இதன் பின்னர் மீண்டும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான நடவடிக்கைக் குழு என்ற அமைப்பு அகதிகள் சார்பில் இந்த இடைக்கால தடை உத்தரவு மனுவை தாக்கல் செய்தது. இதேவேளை குறித்த இலங்கையர்கள் நாடுகடத்தப் படுவதற்கான எவ்வித ஆயத்தங்களும் செய்யப்படவில்லை என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவன் குறிப்பிட்டார்.

இந்நிலையில் ஆஸ்திரேலிய சட்டத்தின்படி குறித்த அகதிகள் பாதுகாப்புக் கருதி தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் காரணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் சிட்னி நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் இருந்து கடந்த வெள்ளிக் கிழமை 35 இலங்கை புகலிடக் கோரிக் கையாளர்கள் நாடு கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதாம் அகவை நிறைவில் பிறந்தநாள் வாழ்த்து

## கொக்குவில் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த கணிதப் பேராசானாக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக இக் கல்லூரியில் 30 வருட சேவை நிறைவில் ஓய்வினைப் பெறும்

# திரு.கந்தப்பிள்ளை வேலாயுதம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு – 05.12.2012



B.Sc.,Dip.in Edu., SLTS - I

பிரதி அதிபர்

பிறந்த திகதி:- 1952.12.05

ஆரம்பக் கல்வி:-

யா/பெரியபுலம் ம.வி

இடைநிலைக் கல்வி:-

யா/ யாழ்.இந்துக்கல்லூரி.

பட்டப்படிப்பு:-

பேராதனைப் பல்கலைக்கழகம்.

பட்டப்பின் படிப்பு:- யாழ்.பல்கலைக்கழகம்

நியமனம்:- 1973.06.01

யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில்

01.09.1982 - 04.12.2012

### நல்லாசி

க. வேலாயுதம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் முப்பது வருடங்களாக ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறுகிறார். ஓய்வு பெறும் அவர் சகல செல்வங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீகிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானுடைய திருவருளை வேண்டி நல்லாசிகள் கூறுகிறேன்.

பிரதமகுரு,சிவஸ்ரீ க.சிவதாசக் குருக்கள், புதுக்கோயில்.

### கல்லூரியின் வாசனைக்குச் சொந்தக்காரன்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 'மணி' என்று போற்றப்படுபவர் க. வேலாயுதம் அவர்களாவார். கல்லூரியின் வாசனைக்குச் சொந்தக்காரன் அவர். கணித, விஞ்ஞானத் துறையின் எழுச்சிக்கு விடி வெள்ளியாகத் திகழ்பவர். 30 ஆண்டு கால நீள் சேவையில் சிறப்பார்ந்த கணித ஆசானாகத் தொழிற் பட்ட அதேவேளையில், கல்லூரியின் நிர்வாகத்துறையில் பகுதித் தலைவர், பிரதி அதிபர் என்ற பல படி நிலைகளில் நின்று தோள் கொடுத்து நிலை நிறுத்தியவர். பல புகழ்பூத்த அதிபர்களின் கீழ் ஆளுமை மிக்க புடம் போடலில் வளர்க்கப்பட்டமையால் கல்லூரியின் பல பரிமாண நோக்கக் கூற்றுகளுக்கு உள்ளே நின்று, சிறப்பார்ந்த கலாசார விழுமியங்களை வளர்த்தெடுக்க நீடு உழைத்தவர். அன்பும், கனிவும் இரக்க சுபாவமும் கொண்டவர். மாணவர் மத்தியில் சில வேளைகளில் கடுந்தொனியில் கண்டித்தாலும் கூட, சில வினாடிகளில் மாறுபாடாக அரவணைத்து ஆற்றுப்படுத்தும் திறன் அற்புதமானது. அவரது கணீர் என்ற குரல் அசைவால் மூன்று மாடிகளையும் கீழ் நின்று கட்டுப்படுத்தும் திறனை வேறு எவரிடமும் காணமுடியாது. தூய பண்புகளாலும் கல்வி, நிர்வாகச் செயல் முறைகளாலும் கல்லூரிக்கிருந்த பலமான தூண் ஒன்று தனது சேவை நிறைவில் ஓய்வு பெறுவது என்பது புதிதாகக் கடமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எனது நிர்வாகக் கட்டமைப்பிற்குப் பேரிழப்பாகும். எவ்வாறிருப்பினும் என்றும் அவரது சேவைகள் கல்லூரிக்கு தொடர்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது என்ற நம்பிக்கையில் சேவையில் உயர்ந்து நிற்கும் பிரதி அதிபர் அவர்கள் என்றும் குடும்ப நலத்துடன் உயர் நிலைச் சிறப்புகளைப் பெற்று வாழ மனம் கனிந்து வாழ்த்துகின்றேன்.

வே.ஞான காந்தன், அதிபர்.

### கணிதத்துறையின் கலங்கரை விளக்கு

1982ஆம் ஆண்டு கணித ஆசிரியராக இணைந்து மூன்று தசாப்தகாலம் பணியாற்றிய இவர் இக்கல்லூரியின் முகாமைத்துவத்தின் உயிர் நாடியாகவும் கணிதத்துறையின் இதயமாகவும் விளங்கியவர். உயர் வகுப்பிற்கு கற்பித்தலில் பல்வேறு நுட்பங்களைக் கையாண்டு மீத்திறன், மெல்லக்கற்கும் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். பல நூற்றுக்கணக்கான பொறியியலாளர்கள், விஞ்ஞானப் பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக் குரியவர். க்ல்லூரியில் மேற்பார்வையாளராகவும், பிரதி அதிபராகவும், பதில் அதிபராகவும், பரீட்சைக் குழுத் தலைவராகவும், ஒழுங்கு, ஒழுக்கத்தை கட்டிக்காத்தவராகவும், நல்ல ஆலோசகராகவும் சிறந்த வழிகாட்டியாகவும், சமாதான தூதராகவும் விளங்கியவர். தன்னுடைய 'குரல்' ஆளுமை மூலம் மாணவர்களின் இதயத்தைக் கவர்ந்தவர். விஞ்ஞான மன்றத்தின் சாரதி இதழின் தந்தையாகவும் விளங்கியதுடன் தொடர்ச்சியாக வெளிவர காரண கர்த்தாவாக விளங்கியவர். யாழ்ப்பாணத்தின் தனித்துவமாக விளம்பரம் இல்லாமல் 'மணி கல்வி' நிலையத்தின் பணிப்பாள ராக பல ஆயிரம் மாணவர்களின் இதயத்தைதக் கவர்ந்த பெருமைக்குரியவர். இவரின் சேவையைப் பாராட்டி மணிவிழாவும், நூல் வெளியீடும் நடத்த இவரது மாணவர்கள் முன் வந்தமை கல்வியின் தரக்காட்டியாக கொள்ளமுடியும். இவரது ஓய்வுக் காலத்திலும் கல்விச் சேவையும் கற்பித்தல் பணியும் தொடர வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ், பிரதிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம் 4)

### கருணைக்கும் மரியாதைக்கும் உரியவர்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நீண்ட காலம் தொடர்ச்சியாக ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் என்ற வரிசையில் க. வேலாயுதம் அவர்களும் பெருமை பெறுகின்றார். இவர் தன்னுடைய சேவைக் காலத்திலே தனித்து ஆசிரியராக மட்டுமன்றி கல்லூரி நிர் வாகத்திலும் பங்கேற்க வேண்டும் என்ற மன ஆதங்கம் இவரது உள்ளத்தில் பதிந்திருந்ததை நான் அறிவேன். அவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமன்றி, இவர் மீது அவர்கள் வைத் திருக்கும் கருணைக்கும், மரியாதைக்கும் எடுத்துக்காட்டாக நான் லண்டன் சென்றிருந்த வேளை வேலாயுதம் ஆசிரியரின் சுகநலத்தையும் கேட்டறிந்ததுடன் அவரிடம் கையளிக்கும் படி அன்பளிப்புப் பொருள்களை என்னிடம் வழங்கியிருந்தமை இவரது சேவைக்குச் சான்றாகக் குறிப்பிடலாம். நற்பணியாற்றிய மனநிறைவோடு சேவையிலிருந்து இளைப்பாறும் இவரது ஓய்வுக்காலம் நலமாகவும், மகிழ்வாகவும் அமைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பொ. காலநாதன், இளைப்பாறிய அதிபர்.

### மணிக்கு மணி விழா

கொக்குவில் இந்துவின் தலை சிறந்த கணித ஆசான் க. வேலாயுதம் அவர்கள் தனது கணீர் என்ற குரலால் வகுப்பறையை மட்டுமன்றி கல்லூரி முழுமையையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பெருமைக்குரியவர். மூன்று தசாப்தங்களாக பல பொறியியலாளர்களையும், கணித விற்பன்னர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். கல்லூரியின் பல்வேறு பொறுப்புக்களை யும் ஏற்று தனக்கே உரித்தான பாணியில் நிறைவு செய்பவர். கல்லூரியின் பிரதியதிபராகத் தனது பொறுப்புக்களைச் செய்த போது கூட கணித பாடத்தைத் தொடர்ந்தும் மாணவர்களுக்குக் கற்பித்து வந்த ஆசான் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றமை கொக்குவில் இந்துவின் கணிதத் துறைக்கு ஒரு பேரிழப்பு அது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. அவருடன் இணைந்து இக் கல்லூரியில் பணி யாற்றிய காலத்தில் அவரிடமிருந்து பெற்ற நல்ல அனுபவங்கள் என்றும் மறக்க முடியாத பசுமையான நினைவுகள். அவரது ஓய்வுக் காலம் மகிழ்வுடன் அமைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

S.V. மகேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்), கல்விவலயம், யாழ்ப்பாணம்.

### நீடூழி வாழ்க

எமது கல்லூரியில் 1970களில் மாணவர் தொகை 2000 இற்கும் மேல் சென்றுகொண்டிருந்தது. இருந்தபோதிலும் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு செல்லும் மாணவர் தொகை திருப்திகரமாக இருக்கவில்லை. இந்த அனுமதிகளைக் கொண்டே மக்கள் கல்லூரிகளை எடை போட்டனர். எனவே க.பொ.த (உ.த) கணித, விஞ்ஞானத்துறைகளை பலப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. அந்த முயற்சியின் பலனாக பல பிரபல்யமான ஆசிரியர்கள் இணைக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் தான் வேலாயுதம் அவர்கள். அவர் ஒரு சிறந்த கணித ஆசிரியர் என்று பலராலும் சிபார்சு செய்யப்பட்டவர். இவரில் எனக்கும் ஒரு விருப்பு ஏற்பட்டு விட்டது. ஆனாலும் அவரைப் பிடிக்கப் பிடிக்க அவர் வழுக்கிக் கொண்டு தான் கற்ற பாடசாலையான யாழ். இந்துக்கல்லூரிப் பக்கமே சென்றார். இருந்தபோதிலும் அவரை ஒருவாறு எமது கல்லூரிக்கு இழுத்து விட்டோம். அவர் கணிதம் கற்பித்த முதல் வகுப்பில் 30 மாணவர்கள் வரை இருந்தனர். அத்தனை பேரையும் பல்கலைக் கழகம் அனுப்பி சாதனை படைத்துள்ளார். தனது அயராத முயற்சியினால் கணிதத்துறையினைப் பலப்படுத்தியுள்ளார். வேலாயுதம் அவர்கள் நீடூழி வாழ்ந்து தனது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் கல்விக்கும் சேவை செய்ய ஆண்டவன் கருணை புரிய பிரார்த் திக்கின்றேன்.

அ. பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர்.

### மாணவரின் உயர்கல்வி மேம்பாட்டில் வரலாறு படைத்தவர்

கடந்த மூன்று தசாப்தங்களாகக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கணித ஆசானாகத் தடம் பதித்த இவரின் சேவை நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. கணித பாடம் என்பது சுமையானது என்று நினைக்கையில் மாணவர்களுக்குச் சுவையானது என மாற்றியமைத்து உற்சாகப்படுத்தியதன் மூலம் இன்று பல பொறியியலாளர்கள் உருவாகுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் இவர் என்றால் அது மிகையாகாது. அன்பு என்ற ஆளுமைத் திறத்தால் அகிலத்தை ஆளுகைப்படுத்தியவர். தனது கணீர் என்ற குரல் மூலம், கட்டுப்பாடுகளையும் ஒழுங்கமைப்புக்களையும் மேற்கொண்டவர். தவறுவிடும் மாணவர்களிடையே கடுமையாக நடந்துகொண்டாலும், அடுத்த வினாடியில் குணம் நாடி குற்றங்களையும், நல்லிரக்க சுபாவம் கொண்டவர். எனது வதிவிடத்திற்கு அயலில் வசித்து வந்தமையாலும் பிரத்தியேக கல்வி நிறுவனத்தை செழுமையாக நடத்திவந்தமையாலும் சமூக நோக்கில் மிக உயர்ந்த பண்புகளையும், அரவணைக்கும் மனப்பாங்குகளையும் கண்டு வியந்துள்ளேன். க.பொ.த (உ/த)க் கல்வியைத் தொடர மாணவர்களுக்குக் கணித பாடம் ஒரு தடையாக இருந்த வேளையில் அத்தகைய மாணவர்களில் விசேடகவனம் எடுத்து அனைவரையும் உயர்கல்வி வாய்ப்பைப் பெற்று உயர வழிவகுத்த நிலைகளைக் கண்ணாரக் கண்டு பெருமைப்பட்டுள்ளேன். எமது புகழ் பூத்த கல்லூரியில் உயர்கல்வி மேம்பாட்டில் தடம் பதித்து வரலாறு படைத்த பெரும் ஆசானின் சேவை நிறைவு ஓய்வுக் காலம் என்றும் கல்விப்பணியுடன் தொடரவும், குடும்ப மேன்மைச் சிறப்புக்கள் பெருகவும் வாழ்த்துகின்றேன்.

திருமதி தி. குணபாலசிங்கம்
தலைவர், பழையமாணவர்கள் சங்கம்.

### மனிதருள் மாணிக்கமே! வளர்கநின்சேவை!

கொக்குவில் இந்துவில் உரத்த குரலில் உயர் பதவி வகித்த நல்லோய்
வயதில் மூத்தோனாய் வடிவில் இளையோனாய் வார்த்தையில்
பெரியோனாய் கணிதத்தின் கலங்கரை விளக்காய், மணியாய்
ஒலித்தே மாணவரைக் கவர்ந்த மாசில்லா மாமணியே! மனிதருள்
[illegible]
[illegible]

திருமதி [illegible], செயலாளர் யா. அபிவிருத்திக்குழு, யா/கொ.இ.கல்லூரி.

### கற்பித்தலில் ஒரு கலை

கற்பித்தல் செயல் முறை என்பது ஒரு கலையாகும். அத்தகைய கலைத்துவம் எல்லோருக்கும் கிடைத்திருப்பதில்லை. மாணவர்களை அறிந்து அவர்களது உள்ளத்திற்குள் பிரவேசிக்கும் போதுதான் கற்றல் செயற்பாடு வினைத்திறனுடையதாகின்றது. அந்த வகையில் கணித ஆசானாகவும், பிரதி அதிபராகவும் முப்பது ஆண்டுகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அரிய பணியை ஆற்றி சேவை நிறைவில் ஓய்வு பெற்றுக் கொள்ளும் க.வேலாயுதம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதிலே பெரு மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாண கல்வி வலயத்தில் சிறப்புறு கல்லூரியாக விளங்கும் இக் கல்லூரியில் உ/த இல் கணித பாடத்தில் உயர் நிலை வெளியீடுகளை வெளிப்படுத்தி புதிய மாற்றத்தை உருவாக்கிய ஆசிரியர் அவர்கள் குடும்ப் சுகநலத்துடன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

எஸ்.உதயகுமார்
யாழ் .வலயக் கல்விப் பணிப்பாளர்.

### கணித மாமேதை

யாழ். மாவட்ட கல்விப் புலத்தில், கடமை, நேர்மை, கண்ணியம் தவறாத விரல் விட்டு எண்ணக் கூடிய கல்வியியலாளர் வரிசையில் போற்றப்படுபவராக விளங்குபவர் தான் உயர் கணித ஆசான் க. வேலாயுதம் அவர்கள்.

அவரது தன்னல மற்ற சேவையால் உயர்ந்தவர்கள் இன்று மிகச் சிறந்த பொறியியலாளராக விளங்குவதுடன் இவரிடம் தரம்6-11வரை கற்ற பலர் புகழ் பூத்த வைத்தியர்களாகவும் உயர் ஆசான்களாகவும் சமுதாயம் விரும்பும் நல் மனிதர்களாகவும் வாழ்ந்து வருவது தான் எவருக்கும் இல்லாத சிறப்பாகும். மிகப் பெரிய கொக்குவில் இந்து வளாகத்திலே இவரது குரல் கேட்டால் குறும்புக்கார மாணவர்கள் எல்லோரும் பெட்டிப் பாம்பாக அடங்கி தம் வேலைகளைச் சிறப்புடன் செய்வதை நான் அவதானித்து பெருமைப்பட்டி ருக்கின்றேன். கணித வள்ளலின் ஓய்வு, காலம் கட்டாயம் ஆயினும் அவர் வாழும் காலம் முழுவதும் கொக்குவில் இந்துவின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்பதே எனது அவா. மதிப்பு மிகு ஆசானின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

சி.மாணிக்கராசா கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

### கல்வியின் கலங்கரை விளக்கு

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பிரதியதிபர் க.வேலாயுதம் அவர்களின் அகவை அறுபது நிறைவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கொக்குவில் இந்துக்கல்லூரியில் நீண்டநாள்கள் ஆசிரியராகவும், பிரதியதிபராகவும் பணியாற்றிய காரணத்தால் கல்லூரியின் வளர்ச்சி யில் இவர் கொண்டிருந்த பங்கும் பணியும் அளப்பரியதாகும். மாணவர்களைக் கட்டுப்படுத்துவதில் அவரது குரல்வளம் பெரும் பங்கு கொண்டிருந்த அதேவேளை கணித பாடத்தில் அவர் கொண்டிருந்த ஆளுமை மாணவர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. காலை வேளையில் மாணவர்கள் கட்டுப்பாட்டு டனும் ஒழுக்கத்துடனும், கல்லூரிக்குள் பிரவேசிக்கின்றனர் என உறுதிசெய்ய பிரதியதிபர் வேலாயுதம் அவர்களின் பிரசன் னம் அவசியமானதை கண்டு நான் வியந்திருக்கின்றேன்.

வேலாயுதம் அவர்கள் கற்பித்தலில் ஆளுமைமிக்க ஓர் ஆசிரியராவார். இதன்காரணமாகவே கணித பாடத்துக்கு தோற்றும் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் அவரது பாடத்துக்கு அதிவிசேட சித்தியைப் பெற முடிவதுடன் அதன் தொடர்ச்சியாக பல்கலைக்கழகத்து பொறியியல் பீடத்தில் அனுமதியையும் பெற்றுக் கொள்கின்றார்கள். அவர்மீது மாணவர்கள் கொண்டிருக்கும் அபிமானத்தின் எடுத்துக்காட்டாகவே அவரது பெயரில் நூலொன்று வெளியிடப்படுவதும் பெருமைக் குரியதாகும். இத்தகைய சிறப்புக்களுக்குப் பாத்திரமான பிரதி அதிபர் வேலாயுதம் அவர்கள் இளைப்பாறிய பின்னரும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வளமுடன் என்று வாழ்த்தும்

பேராசிரியர் க. தேவராஜா, செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம். (SDS)

### புரட்சியை ஏற்படுத்திய மாமனிதர்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதன் பண்பாடு பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டு மிகச் சிறந்த கணித ஆசானாக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக மூன்று தசாப்தங்கள் பல துறைகளிலும் உயர்ந்து நின்றவர் எமது அன்பிற்குரிய வேலாயுதம் சேர். ஒரு மூத்த ஆசிரியராக இருந்து எமது ஆசிரியர் கழகத்துக்கு பல வழிகளி லும் ஆலோசனை கூறி வழிப்படுத்தி வந்திருக்கின்றார். இவரது ஆளுமை மிக்க கணிதத் துறையைச் சேர்ந்த இளம் ஆசிரியன் யான் என்ற வகையில் இவரது ஆட்சிப்படுத்தும் நல்ல பண்புகளையும் ஆற்றுப்படுத்தும் கற்பித்தல் நுட்பங்களையும் அறிவியல் ரீதியாகப் பெற்றுக் கொண்டவன்என்ற வகையில் பெரும் பாக்கியம் செய்தவனாகி விட்டேன்.

ஒரு தந்தை போல இருந்து அரவணைத்து ஊக்கப்படுத்திய அந்த நாள்கள் என்றும் மனதில் மறக்க முடியாதவை. .கல்லூரி வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய மாமனிதன் என்றால் மிகையாகாது. சக ஆசிரியர்களையும் மனம் கோணாது நல் வழிப் படுத்தியவர். மாணவர்கள் மத்தியில் கண்டிப்பும் கனிவும் மிக்கவராகத் திகழ்ந்தவர். கல்லூரிச் சமூகத்தவராலும் என்றென்றும் போற்றப்படுபவர். கல்லூரிக்கெனத் தன்னை அர்ப் பணித்து உழைத்த இவர் சேவை நிறைவில் ஓய்வு பெறு வதென்பது கல்லூரிக்குப் பேரிழப் பாகும் .இருந்த போதும் ஓய்வுக் காலத்தில் அவரது சேவை கல்லூரியில் தொடர்ந்து மிளிரும் என்ற நம் பிக்கையுடன் அவரை மணிவிழா நாயகராக கண்டு சகல ஆசிரியர்களின் மனமொத்த நிலையில் குடும்ப மேன்மையும் சிறப்புக் களும் பெருக என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

ரி. சிவராம், தலைவர், ஆசிரியர் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## வள்ளி திருமணமும் கந்தபுராணம் பூர்த்தியும்

செல்வச் சந்நிதி ஆலயத்தில் வள்ளியம்மன் திருக்கல்யாணத் திருவிழாவும் கந்த புராண பூர்த்தியும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி நவராத்திரி ஆரம்பம் முதல் கந்தபுராணப்படலம் ஓதப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (3)

### ஐம்பதுக்கும் மேற்பட்ட

## இலங்கைப் பணிப்பெண்கள் அவதியுறுகின்றனர் சவூதியில்

சவூதி அரேபியாவில் 500க்கும் மேற்பட்ட இலங்கைப் பணிப் பெண்கள் அவதியுறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் இரண்டு முகாம்களில் இவ்வாறு இலங்கைப் பணிப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த முகாம்களில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முகாம்களில் வாழும் இலங்கைப் பணிப்பெண்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக, அங்கிருந்து நாடு திரும்பிய பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உணவு, தங்குமிட, அடிப்படை சுகாதார வசதிகளின்றி வீட்டுப் பணிப்பெண்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

## உழவு இயந்திரம் மோதியதில் சிறுமி தலையில் படுகாயம்

பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமி மீது உழவு இயந்திரப் பெட்டி மோதி தலையில் காயமேற்பட்டு மயக்கமடைந்த அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஏழாலை மேற்கு ஏழு கோயிலடிப் பகுதியில் உள்ள தேவலாயத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

பாலதாஸன் ஐஸ்வரியா (வயது 9) என்ற சிறுமியே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3-36)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## முதியோர் போட்டிக்கு விடைகள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி பிறந்த முதியவர்களிடையே நடத்தப்படும் போட்டிக்கான விடைகளை அனுப்பும் திகதி டிசெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கைதடி அரச முதியோர் இல்லத்தால் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதியில் பிறந்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி அரச முதியோர் இல்லத்தில் இடம்பெறும்.

இதனை முன்னிட்டு12ஆம் திகதி பிறந்த முதியோர்களுக்கிடையே சில பொதுக் கேள்விகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான விடையை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் இல்லத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு இல்ல நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3-17)

## கிணறு புனரமைக்க நிதி ஒதுக்கீடு

சங்கானை பிரதேச சபைக்குட்பட்ட அராலி மேற்கு செந்தமிழ் சனசமூக நிலையக் கிணற்றைத் துப்புரவு செய்யவும் திருத்தப் பணிகளை மேற்கொள்ளவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சனசமூக நிலைய நிர்வாகத்தினர் சனசமூக நிலைய வளாகத்தில் உள்ள கிணறு பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் 25 ஆயிரம் ரூபா நிதி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கிணறு சுத்தம் செய்யப்பட்டுத் திருத்தப்படுவதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள மக்களும் நன்மை அடைவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-86)

## வீதி விபத்தில் முதியவர் காயம்

தென்மராட்சி,டிசெ.5

மிருசுவில் உசன் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் ஒருவருக்குத் தோள் எலும்பு முறிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. ஏ-9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் சமிக்ஞை இன்றி, குறுக்கு வீதியில் திரும்பிய போது அதே திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்டதால் அதில் பயணம் செய்தவருக்குக் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் உசனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை செல்வவிநாயகம் (வயது-62) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (3-9)

## மின்தடை பற்றிய அறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதால் நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை வியாழக்கிழமை காலை 8.30 இலிருந்து மாலை 5.30 மணிவரை மருதனார் மடம், இணுவில், கோண்டாவில், தாவடி, குளப்பிட்டிப் பிரதேசம், கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, கோம்பயன்மணல் பிரதேசம் மற்றும் குஞ்சர் கடையில் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நல்லூரில் இருந்து ஆனைப்பந்தி வரையான பிரதேசத்தில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (3)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் கல்வி பயிலும் சக மாணவன் செல்வன் சாந்தசீலன்
சிறீதரனின் அன்புத் தாயார்
திருமதி சாந்தசீலன் செல்லம்மா
(உடுவில், லவ் லேன்)
கடந்த 01.12.2012 அன்று காலமாகிவிட்டார். அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
B.A.பேராதனை இறுதியாண்டு அரசியல் மாணவர்கள்.
(26366)(5-6-7)

## உமாதவா கல்வி நிலையம்

அல்லாரை வீதி, மீசாலை.
கல்வியாண்டு-2013
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
தரம்-3,தரம்-4
ஆசிரியர்: திரு.க.தவயோகராசா
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
(26352)(6.7.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
26.02.1924
இறப்பு
05.11.2012
திருமதி அலெக்சாந்திரா அமிர்தநாயகம்
(இளைப்பாறிய, ஆசிரியை,
திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்)
'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'
எம் இனிய தாயே! பிறப்பாலும், வாழ்வாலும்,
எம் துன்பம் துடைத்து, அரவணைக்கும்
அன்னையாய், ஆண்டவன் சித்தமாய் வாழ்ந்தீர்கள்!
ஆசானாய், எம் அன்புத்தாயாய் இறப்பினும்
எம்முடன் வாழ்வீர்கள்
எம் அன்னையின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி யாழ். தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் எதிர் வரும் 7ஆம் திகதி காலை 6 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.
128, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
பிள்ளைகள்.
(26038(9) 5.6.7)

## உடனடி வேலைவாய்ப்பு

**AL MUTAWA CATERING COMPANY K.S.A**(அல்முதாவ்வா கேட்டரின் கம்பனி சவுதி அரேபியா)

| S/N | CATEGORY | NOS | SALARY (SR) | SALARY (SL) |
|---|---|---|---|---|
| 01 | CATERING HELPER - கேட்டரின் உதவியாளர் | 50 | 500+200 | 18500+7400 |
| 02 | ELECTRICIAN - மின் இணைப்பாளர் | 05 | 1000+200 | 37000+7400 |
| 03 | PLUMBER - குழாய் திருத்துநர் | 04 | 1000+200 | 37000+7400 |
| 04 | ASST. COOK - உதவி சமையற்காரர் | 04 | 1000-1500 | 37000-55500 |
| 05 | SALAD MAKER - செலட்வகை தயாரிப்பாளர் | 03 | 1000-1500 | 37000-55500 |
| 06 | BANQUET WAITER - பெங்கட் உணவு பரிமாறுபவர் | 03 | 1000-1200 | 37000-44400 |
| 07 | BUILDING PAINTER - கட்டட பெயின்டர் | 45 | 1100- 1500 | 40700- 55500 |

**COMPANY VACANCIES IN** சவுதி அரேபியா/கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| S/N | CATEGORY | NOS | SALARY (SR) | SALARY (SL) |
|---|---|---|---|---|
| 01 | TINKER / WELDER - டின்கர் / வெல்டர் | 09 | 1500-1800 | 54000-64800 |
| 02 | ALMINIUM WORKER(CURTAIN)- அலுமினியம் பொருத்துநர் | 18 | 1250-1500 | 46250-54000 |
| 03 | ELECTRICIAN - மின் இணைப்பாளர் | 03 | 1300-1500 | 46800-54000 |
| 04 | STEEL FIXER - கம்பி கட்டுவோர் | 10 | 1000-1200 | 37000-43200 |
| 05 | SAND BLASTER/AIRLESS PAINTER- மண்தகர்ப்பு பெயின்டர் | 10 | 1400-1700 | 51800-62900 |
| 06 | MASON - மேசன்வேலை | 07 | 1200-1400 | 43200-50400 |
| 07 | A/C TECHNICIAN - ஏசி டெக்னீசியன் | 03 | 1300-1500 | 46800-54000 |
| 08 | MECHANICAL HELPERS - மெக்கானிக்கல் உதவியாளர் | 07 | 800-1000 | 28800-36000 |
| 09 | CARPENTER - தச்சுவேலை | 10 | 1200-1400 | 43200-50400 |

நிபந்தனைகள்
**இலவச தங்குமிடவசதி, வைத்திய வசதி, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள், இரண்டு வருட ஒப்பந்தகாலம்.**
**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :**
**சுதாகரன்:-0779580588**
Mantek Enterpries
Labour LIC No: 1449
No:535/2/1, Galle Road, Wellawatte,Colombo-06
T.P No:011-2363193/011-4375911 Fax:011-4510549
E-Mail: mantek.enterprises@yahoo.com

## காணி விற்பனைக்குண்டு

இளவாலைச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இளவாலை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக் உண்டு.
தொடர்பு:
077 3151 723
(26557) (45,6,7)

## கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

DMI COMPUTER EDUCATION

- Diploma in Microsoft Office
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Tally Financial Accounting Training
- Master Dip. in Multimedia & Animation

#AutoCAD # Maya #JAVA

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing வெளிப்பாடுகளையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான முழுமையான Video Editing கற்கை நெறி.



Video Production & Multimedia
Int. to Digital Video, Adobe Premiere CS 5, ParticleIllusion, Photoshop CS6 Pinnacle Studio HD 16, COOL 3D Studio, Adobe After Effects, & Nuendo,

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு
DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி. | சாவகச்சேரி. | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-227 0243 | KKS வீதி. NSB வங்கி அருகில். Tel.:021-224 1970 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்புகள்

குழு வகுப்புகள்

கல்வியாண்டு - 2013

Grade - 4 - 11

Maths - Science

Grade - 10 - 11

Special Classes

ஆரம்பம் : 05.12.2012 (Today)

Evenig 4.00 pm.

தொடர்புகளுக்கு: 077 0200 807

நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

(26017) (4.5.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111

## சுஜித் என்ரபிறைசஸ்

டச்சு வீதி, சாவகச்சேரி

விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மாதாந்தம்

ரூபா 30,000/= தொடக்கம்

ரூபா 35,000/= வரை சம்பாதிக்கலாம்.

தொடர்பு: 021 227 0586

## உணவகம் வாடகைக்கு

ஆறுகால் மடம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண முகவரியில் வைத்தியசாலையுடன் இணைந்த 45 அடி நீள பிரபல அசைவ உணவகம் பைப், குளிர் சாதன வசதி, தளபாட, காஸ் வசதிகளுடன் உடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: நேரில் அல்லது தொலைபேசி எண்

021 222 3175

(26034)(26) உரிமையாளர்.

## COMPUTER FOR SALE

Tel : 021-222 4459, 0772533390

Intel Processor 3.00 GHz
Intel LGA Mother Board
1GB DDR II Kingstan Ram
80 GB Hitachi Sata Hard Disk
Samsung DVD Multy Recorder
ATX Casing with Power Supply
15" HP / Compaq LCD Monitor
Keyboard, Optical Mouse & Pad,
2.1 Laptop Woofer இவை அனைத்தும்:
Rs-19500 (Six Month Warranty)

North Lead Computer Sales & Services

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)


MINISTRY OF HIGHER EDUCATION

## UNIVERSITY OF JAFFNA

INVITATION FOR BIDS

IMPROVEMENTS OF PLAY GROUND AT VAVUNIYA CAMPUSUNIVERSITY OF JAFFNA, PAMBAIMADU.

1. **The Chairman, Department Procurement Committee, University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "Improvements of Play Ground at Vavuniya Campus University of Jaffna, Pambaimadu." as described below and estimated to cost of **Rs.42.60 million.**

   The construction period is **180 days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C5** or above with the Institute for Construction Training and Development (ICTAD),valid until the date of closing of the bids. Further the registration should be valid at he date of award.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna,** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**

   Contact numbers are: Phone Tel: 021 221 9201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application **to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, from 03.12.2012until 14.12.2012** from **9:00hrs to 15:00hrs** upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred **(Rs.2,500/-).**
6. Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57,** to reach **on or before 14.00hrs on 21.12.2012.** Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be Valid for a period of **91 Days** from the date fixed for closing of Bids or any extend period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor, Chairman, Procurement Committee University of Jaffna.**
   - for an amount of **Rs. 426,000.00.**
   - Validup to119 days from the closing date of Bid.
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
9. Pre bid meeting will be held at the Vavuniya Campus, University of Jaffna, Pampaimadu, Vavuniya at 10.30 am on 13.12.2012

**Vice Chancellor,**
**Chairman, Procurement Committee,**
**University of Jaffna,**
**P.O Box 57, Thirunelvely,Jaffna.**

(சி/3135)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்
## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

2013ஆம் ஆண்டுக்கான சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேசசபை கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க, 168 ஆம் பிரிவுக்கமைய தயாரிக்கப்பட்டு 05.12.2012 தொடக்கம் ஏழு(07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**மு.ஆ.வே.ஆனைமுகன்**
**தலைவர்,**
**காரைநகர் பிரதேச சபை.**

(சி/3186) (6.7.4)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை சின்னம்மா

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை சின்னம்மா 03.12.2012 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லோகநாதன்,சண்முகநாதன் (யாழ். மாநகரசபை ஊழியர்) நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் எம்.ரி. எஸ். இராமச்சந்திரன் (ஜேர்மனிய சட்ட ஆலோசகரும் மாண்புமிகு ஜனாதிபதியின் ஆலோசகரும் இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளரும் ), இராசையா, சந்திரகுமார் (ஜேர்மனி), கமலசாந்தினி (இந்திரா-லண்டன்), ஜெயமலினி ஆகியோரின் மாமியாரும் அனங்கன், சாரங்கன் ,யாதவன்,விதுசா , அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசடி வீதி ,திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (05.12.2012) புதன்கிழமை பி.ப 2மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(26050) (6.7.4)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20.04.1963

உதிர்வு
17.11.2011

ஆண்டு ஒன்று கடந்தாலும்
எம் உயிரோடும் உணர்வோடும்
கலந்துவிட்ட உங்கள் நினைவு
என்றென்றும் எம்முடன்
நிலைத்திருக்கும்.



அமரர் இராசரத்தினம் ஸ்ரீகலாதர்

திதி:05.12.2012

குரும்பசிட்டி கிழக்கு,
தெல்லிப்பழை.

(26353)(5.6.7)

உங்கள் நினைவுடன்
மனைவி,பிள்ளைகள்

## முகவரி தொலைத்த 7/ ஆம் ஆண்டு நினைவாராதனையும் 26 ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவலைகளும்



தாயின் மடியில்
1986.02.01

தண்ணீர் அடியில்
2005.12.05

அமரர்
**விஜேந்திரன் பிரதீபன்**

(யா/மத்திய
கல்லூரி மாணவன்)

தாயின் தலை மகனாய்
தரணியில் உதித்தவனே
காலன் தான் தன் கணக்கை
கணப்பொழுதில் முடித்தானோ
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டீரோ
நிலைகுலைந்து நிற்கின்றோம் இன்றும்
நினைவிழக்க முடியாமல்
விதி என்ற பெயரால் சதிசெய்தார்களோ
உன் ஆத்ம சாந்திக்காக
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.

(3945) (2-6-7)

வவுனியா.

அன்ரி.

# மரண அறிவித்தல்

## செல்லையா தனபாலசிங்கம்

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தனபாலசிங்கம் நேற்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவயோகநாதன் (வட்டக்கச்சி), யோகேஸ்வரன் (மந்துவில்), யோகராசா (இடைக்குறிச்சி இ.போ.ச -பருத்தித்துறை), யோககுமார் (டென்மார்க்), சிறீகருணாகரன் (பிரான்ஸ்), சிறீகலியுகவரதராசன் (லண்டன்), நவரத்தினராசா (ஜேர்மனி), பத்மராசா (பிரான்ஸ்), யீவா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வரணியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (05.12.2012) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று தகனத்துக்காக பூதவுடல் முள்ளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வரணி வடக்கு. (சி/2487)(9.14) குடும்பத்தினர்.

# ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
14.06.1955

இறப்பு
18.11.2011

திதி: அபரபக்க ஸப்தமி
05.12.2012

## அமரர் சபாபதி தனபாலசிங்கம்

(பிரபல பத்திரிகை முகவர் - இணுவில்)

அன்புடன் அனைவரையும் அரவணைத்து பாசத்துடனும் பண்புடனும் வாழ்ந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே ஆல விருட்சமாய் ஆயிரம் வருடங்கள் வாழ்வீர்கள் எனக்காத்திருந்தோம் காலன் கணக்கு இதுவென அறியாது தவிக்கின்றோம். ஓராண்டு சென்றாலும் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்களை நாம் மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்

இல. 61,பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சன்சமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வளர்மதிக்காய்
துளிராக
16.07.1936



வான்மதிக்காய்
உதிர்வாக
05.12.1996

## அமரர் பொன் நாகமணி

தொடரும் நினைவுகளில்...............
காலவெள்ளத்தில் கரைந்து போனது -உனது முகம்
கரையவில்லை உனது நினைவுகள்
உன்னால் செதுக்கப்பட்ட -சமூகம்
மலர்ந்து கொண்டே இருக்கிறது
காலச்சுவடுகளில்- நீ
நடந்த பாதைகளில் -இன்று நாங்கள் நடக்கின்றோம்
உன் நினைவுகளை சுமந்து செல்லும்-தென்றல்
உன் உயிர் மூச்சு பட்டதால் தூய்மையாகிவிட்டது
தூயவனே -நீ காலமெல்லாம் எம்முடன் வாழ்வது
தொடராக...........தொடராக .......முடிவு பெறாத
தொடராக சாந்தி பெறுக.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையம்

(26033ஜ 9.6.14)

# கல்முனையில் வேலைவாய்ப்பு

அம்பாறை, டிசெ.5

கல்முனை மாநகர சபையில் 25 முஸ் லிம், தமிழ் இளைஞர்களுக்கு ஒரேநாளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப்பின் செயற்றிட்டங்களின் கீழ் மாநகர சபையில் இவ்வாறு ஒரே தடவையில்வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.இதற்கமைய 20 இளை ஞர்கள் நடுக்கட்டு உத்தியோகத்தர்களாகவும்,5 இளைஞர்கள் பாவனையா ளர் சேவைக் கட்டணம் அறவீடு செய்யும் உத்தியோ கத்தர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 25 முஸ்லிம், தமிழ் இளைஞர்களுக்கும் ஒரே தடவையில், மாநகரசபையின் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை மாநகரசபை வளாக அரங்கில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் முஹம் மட் சிராஸ் மீராசாகிப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தப் பெருவிழா வில், காரைதீவு பிரதேச சபைத் தலைவர் செல்லையா இராசையா, சம்மாந்துறை பிரதேச சபைத் தலைவர் ஏ.எம் நௌசாத் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மாநகரசபையில் ஒரே தட வையில் 25 முஸ்லிம், தமிழ் இளைஞர்களுக்குவேலை வாய்ப்பளித்த முதல்வருக்கு விழா வில் கலந்து கொண்ட பல ரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

குறித்த நியமனத்தில் நடுக்கட்டு உத்தியோகத்தர் களாக நியமனம் பெற்றுள்ள 20 பேரும், மாநகர சபைக்கு மக்களிடமிருந்து செலுத்தப் பட வேண்டிய சோலை வரியை மக்கள் காலடிக்குச் சென்று அறவீடு செய்தல் மற்றும் சோலை வரி தொடர் பான விழிப்பூட்டலை மக்கள் மத்தியில் முன்னெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஏனைய பாவனையாளர் சேவைக் கட்டணங்களை அற வீடு செய்யும் ஐந்து உத்தியோகத்தர்களும், திண்மக் கழிவகற்றுவதற்கென மாநகர சபையால் அறவீடு செய்யப் படவிருக்கும் கட்டண அறவீடுகளை முக்கிய பணியாக மேற்கொள்ளவுள்ளனர்.(ச-30)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## செல்லப்பா இராசதுரை (சின்னக்கிளி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசதுரை (சின்னக்கிளி) நேற்று (04.12. 2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

k.k.s றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
இ.தயாபரன் (மகன்)

# பெயர் மாற்றம்

அச்சுவேலி வடக்கை முகவரியாகக் கொண்ட கந்தசாமி கலா ஆகிய நான் எனது பெயரை கந்தசாமி கீதா என மாற்றுகின்றேன்

# தவறி விட்டது

கைத்தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்சார சிட்டை அடங்கிய கொப்பி கொடிகாமத்திற்கும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் இடையில் தொலைந்துவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:0772209499,0776189881

(18069)(14)

# வாகனம் விற்பனைக்கு

41 Sri XXXX இலக்கமுடைய 4J B1 வகை என்ஜினையும் முழு [illegible] வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0776099071

(26375)(14)

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை சின்னம்மா

விளானை களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சின்னம்மா நேற்று (04.12.2012) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்செனறவர்களான ஆறுமுகம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிதம்பரப்பிள்ளையின் பாசமிகு தாயாரும், சாரதாதேவியின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், ஆறுமுகம், வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம், மற்றும் K.R.கந்தசாமி, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசங்கர், சயந்தினி, யசிந்தா, சோபிகா, தவறஞ்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (05.12.2012) புதன்கிழமை காலை 8.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

திக்கரை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
கா. சிதம்பரப்பிள்ளை
(மகன்)

## திருமதி சின்னர் சின்னப்பிள்ளை



வரணி இயற்றாலையைச் சேர்ந்த திருமதி சின்னர் சின்னப்பிள்ளை நேற்று (04.12.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னரின் (வெங்கலம்) அன்பு மனைவியும், கந்தசாமி, காலஞ்சென்ற பாக்கியம்மற்றும் செல்லம்மா, கனகலிங்கம் (வரணிச் சின்னவர்), மனோன்மணி, அருளாம்பிகை, கனகராசா ஆகியோரின் பாசமிகு தாயும், குஞ்சுப்பிள்ளை, கதிர்காமு, மகேஸ்வரி, கந்தசாமி, கந்தசாமி, அனோஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (05.12.2012) புதன் கிழமை பி.ப. 1.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வரணி-இயற்றாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வரணி இயற்றாலை,
வரணி.

c/3008

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தங்கலட்சுமி கணபதிப்பிள்ளை



நயினாதீவினைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வருமான திருமதி கணபதிப்பிள்ளை தங்கலட்சுமி நேற்று முன்தினம் (03.12. 2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தாந்த சரபம் கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிரபலவர்த்தகர் நல்லதம்பி (செ.ந) - சொர்ணம்மாவின் அன்பு மகளும், கந்தசாமி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, பரராஜசிங்கம், ஓங்காரலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, நவரட்ணசிங்கம், துரைராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகுமாரன் (லண்டன்), ரஜனி (யாழ்ப்பாணம்), சூரியகலா (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), சிவகலா (கனடா), குகஸ்ரீ (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், உமாஸ்ரீ (லண்டன்), கணேசராஜா (அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி), நித்தியானந்தன் (மஸ்கன் பிறைவெற் லிமிட்டட்), தவராஜா (கனடா), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், லக்சிகா (பல்கலைக்கழகம் - லண்டன்), லக்சாயினி, லக்கனா, லக்சனன், டாக்டர் திரிலோசனன் (யாழ்ப்பாணம்), திவாகரன் (பொறியியலாளர்), லிங்கேசன் (மருத்துவபீடம்), அங்கஜன், பூரணி, தர்ஷிகா (பல்கலைக்கழகம் - கனடா), கிருஷ்ணி, திவாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2012) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/2498)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை


யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978 ஆம் ஆண்டு பிறந்த மூலம் 4 ஆம் பாதம், செவ்வாய் குற்றம் இல்லாத, கிரக பாவம் 42 உடைய, ஜேர்மனி பிரஜாவுரிமையுடைய, உயரம் 5 அடி 11 அங்குலம் உடைய மணமகனிற்கு மணமகள் தேவை.

தொடர்பு:077 44 14 615

(25277) (6.7.4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி உமாதேவி பதீபன்

அவர்களின் பாசமிகு தந்தையார்

**காசி ஆறுமுகம்**

அவர்கள் 03.12.2012 அன்று அமரத்துவம் அடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,

யா/ காரை ஊரி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், காரைநகர்.

(26374)(2-6-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர்

திரு.ஐயாத்துரை தேவராஜன்

(Sc.Tr,B.A,PGDE,MED (Merit) அவர்கள் 02.10.2012 அன்று அலரிமாளிகையில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் இலங்கை அதிபர் சேவை வகுப்பு - 2, தரம் II இற்குப் பதவி உயர்வு வழங்கப்பெற்று, யா/இயற்றாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டதையிட்டு நாம் உளமார வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,

யா/வரணி மகா வித்தியாலயம்.

வரணி.

(18008)(2.8.7)

# அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு பசுமை விருது

மட்டக்களப்பு,டிசெ.5

திண்மக்கழிவு அகற்றும் நடவடிக்கையில் சிறப்பான சேவையை ஆற்றியமைக்காக தேசிய பசுமை விருதை அட்டாளைச்சேனை பிரதேச சபை பெற்றுக் கொண்டது.

மத்திய சூழல் அதிகார சபையின் ஏற்பாட்டில், தேசிய பசுமை விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில், அம்பாறை மாவட்டத்துக்கு 3 விருதுகள் வழங்கப்பட்டன.

திண்மக் கழிவு அகற்றும் நடவடிக்கையில் சிறப்பான சேவையை ஆற்றியமைக்காக அட்டாளைச்சேனை பிரதேச சபையும் சிறந்த முறையிலான செயற்பாட்டை வெளிப்படுத்தியமைக்காக அம்பாறை ஆதார வைத்திய சாலையும் சிறந்த கல்விக் கூடம் என்ற வகையில் மாவடிப்பள்ளி, அஸ்ரப் மகா வித்தியாலயமும் குறித்த விருதுகளைப் பெற்றுக் கொண்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜே.எம்.இர்ஷாத் மத்திய சூழல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ.சி.நஜீப், அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தலைவர் எம்.ஏ.அன்சில் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நாவற்குழியில் பழைய கண்டி வீதி முகப்புடன் கூடிய காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு:021 3211220

Email: jaffnalands@gmail.com

(26367) (6.7.4)

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்தியில் கண்டி வீதி(A9) முகப்புடன் அமைந்துள்ள காணி உடனடி விற்பனைக்குண்டு.

(தரகர்கள் தேவை இல்லை)

தொடர்பு:021 3211220

Email: jaffnalands@gmail.com

(26368) (6.7.4)

## 6 ஆம் ஆண்டு நினைவுகளுடன்....



அகம் மகிழ 10.08.1946

மனம் நெகிழ 27.11.2006

திதி: ஸப்தமி

**அமரர் பவானந்தம் இராசம்**

ஆறு ஆண்டு ஆனது அம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆறுதல் தந்திட மீண்டும் வந்திடு அம்மா...

என்றும் ஆறாத் துயருடன்

குமரகோட்டம், கோண்டாவில்.

கணவர், மகள், மருமகன்.

(26372)(2.6.7)

## நல்லூர் சரவணா ரெக்ஸ்

புதுவருடத்தை முன்னிட்டும்

2012 ஆம் ஆண்டு நிறைவில்

மாபெரும் பிரமாண்டமான

**மலிவு விற்பனை**



இடம் -சரவணா ரெக்ஸ் களஞ்சியசாலை
01, சிவப்பிரகாசம் வீதி,
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)
யாழ்ப்பாணம்

நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை

காலம்:- 05.12.2012 முதல்
கையிருப்பு உள்ளவரை.......

(கி/3193) (2-6-7)

## கனடாவில் இருந்து கொண்டுவரப்பட்ட பாவித்த நல்ல நிலையில் உள்ள மெசினறிகள் விற்பனைக்கு உண்டு

- லேத் (Lathe) Model Student 1800 Colchester England, Lathe

மற்றும்

- Fimar Ailla Machine Lathe. TP.22
- AFM - Metalex Port Warszawa - T.UG - 40
- Schaerer M.N. UD 500 SN 32 452

மற்றும்

- அலுமினிய வேலைக்கான - DEWALT Cutter
- இரும்பு வேலைக்கான -VERTI Cutter
- வெல்டிங் வேலைக்குரிய -LINCOLN Electric - 250 Ac/Dc ARC Welder
- DIESEL WELDER

RED - D ARC
D 300 K 3 + 3 வெல்டிங் பிளாண்ட் மற்றும் கல் உடைக்கும் கொம்பிறசர்களும் (Model) Sullivan Palatek D 185

மற்றும்

மில்லிங் மெசின்கள்
Model - Bridge Port Machines (U.S.A) Stand நில்லர்கள்

மற்றும்

Ex - CELLO மில்லிங் மெசின்கள்
First (Taiwan)

மற்றும்

Modular Lube - Lubrication Systems
Power - Cycle timer Mortor

மற்றும்

384 K.V.A 3 Phase ஜெனறேற்ரர்கள்
.JOHN DEERE ·

மற்றும்

கூப்பயன் தகடுகள் (ப) பட்டங்கள், சிறிய, பெரிய கொம்பிறசர்கள் மற்றும்

Single Phase, 3 Phase மோட்டர்கள் ½ Hp, 1 Hp, 1½ Hp, 2 Hp, 3 Hp,5 Hp, 7.5 Hp,10 Hp,15 Hp, 20 Hp, 25 Hp, 30 Hp, 60 Hp, 75 Hp,

மோட்டர்களும் விற்பனைக்கு உண்டு.

பொன்னையா லேன் (Post Office)
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
T. Vimal- 075 7616 758
077 7295 446

(26373) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் எங்களை நாங்களே ஆளவேண்டும் இராணுவம் இங்கிருந்து வெளியேற வேண்டும்

## ஆர்ப்பாட்டத்தில் மாவை முழக்கம்



யாழ்ப்பாணம், டிசெ.5
எங்கள் மண்ணில் எங்களை நாங்களே ஆளும் நிலை உருவாக வேண்டும். எமது தாயக மண்ணிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும். இதனைச் சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ். நகரில் நேற்று இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது உணர்வுகளை ஜனநாயக ரீதியில் தமது வளாகத்துக்குள் வெளிக்காட்ட முன்வந்தனர். இதனைத் தடுத்த இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாக உள்ளே புகுந்து பல்கலைக்கழக மாணர்களைத் தாக்கினர்.

இராணுவம் பல்கலைக் கழகத்துக்குள் நுழைய வேண்டிய தேவை இல்லை. இவர்கள் அழைக்கப்படவுமில்லை.

இராணுவத்தினரின் இந்த அடாவடிகளை படம் பிடித்துக் கொண்டிருந்த உதயன் ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கின்றார். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கேள்வியுற்று சம்பவ இடத்துக்குச் சென்ற எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தடுக்கப்பட்டதுடன் அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து 3 ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் பல கடத்தல்கள், கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் ஆதாரங்களுடன் அடையாளப்படுத்தப்பட்ட போதும் அவர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை. ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அதுவரையில் எங்களது போராட்டங்கள் ஓயாது தொடரும். நாம் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்த நடவடிக்கைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும் - என்றார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவத்தின் 75 சத வீதத்தினர் தமிழர் தாயகப் பகுதியான வடக்கில் நிலை கொண்டுள்ளனர். போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்தும் இங்கு இராணுவத்தினருக்கு என்ன வேலையிருக்கின்றது. இராணுவம் வடக்கில் இருக்கும் வரையில் இங்கு ஜனநாயகம் இருக்காது.

சர்வதேசத்துக்கு இந்த விடயம் சரியாக எடுத்துச் செல்லப்பட்டு இங்கிருந்து இராணுவம் வெளியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது மக்களுக்கு ஜனநாயகம் கிடைக்க வேண்டுமாக இருந்தால், ஊடக சுதந்திரம் கிடைக்க வேண்டுமாக இருந்தால், இங்கிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் - என்றார்.

பின்னர் உரை நிகழ்த்திய சிரேஷ்ட சட்டத்தரணி ஐ.பாலகிருஸ்ணன் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாட்டின் எந்தப் பகுதியிலுமே தற்போது ஜனநாயகம் இல்லை. ஜனநாயகம் எனும் போர்வையில் இன அழிப்பும், அடக்குமுறையும் தான் நடக்கிறது. வடக்கு, கிழக்கில் மக்களைக் கூண்டோடு அழித்து அங்கு தமிழர்கள் வாழ்ந்தார்களா என்று கேள்வி எழுப்பும் அளவுக்கு நிலைமை உருவாகிக்கொண்டிருக்கிறது

பொதுமக்களை அடக்கிவிட்டால் உரிமை பற்றிக் கேட்கமாட்டார்கள் என்று அரசு நினைக்கிறது. அந்த நிலைமை மெல்ல மாறுபடுகிறது. போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு அரசு தான் காரணம்.

எம்மை நாம்தான் காப்பாற்ற வேண்டும். எமது சொந்தப் பிரச்சினைகளை மட்டும் கவனிக்காது எதிர்காலச் சந்ததிக்காக எதிர்கால விடிவுக்காக ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். அதனைச் செய்ய முடியாதவர்கள் ஏனையவர்களுக்கு உபத்திரம் கொடுக்காமல் இருங்கள் -என்றார்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது;

யாழ். நூலகத்தை எரிப்பதில் ஆரம்பித்து இன்று மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை முடங்க வைப்பது வரை அரச வன்முறை தொடர்கிறது. மாணவர்கள் அமைதியான முறையில் எதிர்ப்புக் காட்டினார்கள். மாணவர் கல்வி திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. அதன் உச்சக்கட்டமாகவே நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுவது போன்று உள்ளது. எங்கேயோ நடந்த ஏதோ ஒரு பிரச்சினைக்காக எமது மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

எமது கட்சிகள் ஒன்று சேர்ந்து போராடுவது மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது - என்றார்.

நவசமசமாஜக் கட்சியின் வடமாகாண இணைப்பாளர் ஜெனகன் உரையாற்றுகையில்;

அரசியல் கைதிகள் விடயம், காணாமற்போனவர்களது துயரம், நில ஆக்கிரமிப்புப் போன்று மாணவர் கைதும் மிக முக்கியமான பிரச்சினை. முன்னர் ஒரு காலத்தில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த தென்னிலங்கையில் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் தமிழர்கள் என்ற காரணத்துக்காக எமக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ந-4-5-13-14)

# 'உதயன்' ஆசிரியர் தாக்கப்பட்டமைக்கு நீதி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## காரைதீவு பிரதேச சபைத் தலைவர் கண்டனம்

அம்பாறை,டிசெ.5
யாழ்.பல்கலைக் கழகச் சூழலில் வைத்து 'உதயன்' ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபைத் தலைவர் செல்லையா இராசையா, விடுத்துள்ள கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊடக சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையிலான சம்பவங்கள் நாட்டில் குறிப்பாக வடக்கில் தொடராக இடம்பெற்று வருவது கவலைதரும் விடயமாகும்.

மக்களுக்குத் தகவலறியும் உரிமை உள்ளதுபோல், அத்தகைய தகவல்களை உண்மை, நேர்மையுடனும், பத்திரிகை தர்மத்துடனும் வழங்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.

இந்த வகையில் யாழ்.பல்கலைக்கழக வளாக சம்பவங்களை நேரில் அவதானித்து, தகவல் திரட்ட பொறுப்புடன்சென்ற 'உதயன்' ஆசிரியர் படைத்தரப்பினரால் தாக்கப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அதேவேளை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களின் சாத்வீகப் போராட்டம் ஒன்று நடைபெறவிருந்ததை அழைப்பின் பேரில் அங்கு சென்று பார்வையிடப்போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுடன் படைத்தரப்பினர் நடந்து கொண்ட முறையும், அவரது வாகனம் சேதமாக்கப்பட்டமையும் மிலேச்சத்தனமான செயற்பாடுகளாகும்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் பார்த்திருக்க புலனாய்வுப் பிரிவினரே வாகனத்தை நொருக்கியதாக சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் மீதே இத்தகைய அடாவடித்தனம், அராஜகம் பிரயோகிக்கப்படும் நிலையில் சாதாரண மக்களின் கதி என்னவாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும், காரைநகர் பிரதேச சபைத் தலைவருமான வே.ஆனைமுகனின் காரைநகர் வீட்டுக்கு தீவைப்புச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளமை கவலை தரும் விடயமாகும்.

எனவே, இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டோர் இனம் காணப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவதோடு, இத்தகைய சம்பவங்கள் தொடர் கதையாக மாறாமல் வடக்கில் அதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.-என்றுள்ளது. (ம-30)

# கிழக்கு அம்பனில் மணல் ஏற்றுவது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 05
வடமராட்சி கிழக்கு அம்பனில் மணல் அகழ்வதற்கு ஏற்ற இடத்தை கனியவள புவிச்சரிதவியல் திணைக்களம் தீர்மானிக்கும் வரை அங்கு மணல் அகழ்வதற்கு அனுமதிப்பதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மணல் ஏற்றும் பணியில் ஈடுபட்டுவரும் உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த சில தினங்களாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்களின் கோரிக்கைகளின் உள்ளடக்கப்பட்டிருக்கும் சம்பளக் கொடுப்பனவுக்கான காசோலை மட்டும் மகேஸ்வரி நிதியத்தினரால் வழங்கப்பட்டுள்ளது. தமது ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தமது புறக்கணிப்புத் தொடரும் எனப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இணங்க புவிச்சரிதவியல் திணைக்களத்தினர் உரிய சோதனைகளை நடத்தி மணல் அகழ்வதற்கு ஏற்ற இடங்களை அடையாளப் படுத்தும்வரை மணல் அகழ்வை நிறுத்துவது என அந்தப் பகுதிப் பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

(உ-16)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது விவகாரம் ! இளையவர்களின் ஜனநாயக சிந்தனையை ஒடுக்கும் செயல்

## தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட இளைஞர் அணி கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பரமலிங்கம் தர்சானத் மற்றும் ஏனைய மாணவர்களின் கைதானது இளைய சமுதாயத்தின் ஜனநாயக சிந்தனையை ஒடுக்கும் செயல் என்றும் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் வி.எஸ்சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எமது வாழ்வியல் இருப்புக்கான கருத்துரிமைச் சுதந்திரம் அடியோடு நசுக்கப்படுகின்றது. ஜனநாயக நாடு எனும் பெயர் கொண்ட நிர்வாகத்தில் அராஜக ஆட்சியே கோலோச்சுகின்றது.

வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் இராணுவ மேலாதிக்கத்தை சிவில் நிர்வாக அலகில் தக்க வைத்துக் கொள்ளுவதற்கு அவர்களுக்கு அவ்வப்போது புலிக்கொடி ஏற்றல்களையும் இயல்பு நிலை பாதிப்புக்கேற்ற செயல்களை அரங்கேற்ற வேண்டியது இன்றைய சர்வதேச நெருக்கடிகளைச் சமாளிக்கும் தந்திரோபாய யுக்தியாகும்.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலும், கைதுகளும்,தமிழ் மக்களின் மனங்களில் மேலும் மேலும் காயங்களை ஏற்படுத்துகின்றதாகவே அமைந்துள்ளது.

இளைய சமுதாயத்தின் தேசிய ஜனநாயகப் பண்புகளை மதிக்கின்றதாகவே அமைய வேண்டும். மாறாக மிதிக்கின்ற செயல்கள் அரசை அவமதிக்கின்றதாகவே அமையும்.


மிக நீண்ட காலமாகவே இலங்கை அரசு தமிழர்களின் விடயங்களில் கற்றுக் கொண்ட பாடங்களை நிவர்த்தி செய்ய மறந்து போவதனாலேயே மீண்டும், மீண்டும் தமிழர்களை வன்முறையாளராக்கி அடக்கி ஒடுக்குகின்றனர்.

இவ்வாறான செயல்கள் மூலம் எதிர்காலத்திலும், இளைய சமூதாயத்தின் மீது வன்முறையைப் பிரயோகிக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

(வ-12)

# கைதுசெய்த பல்கலை மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்

## இந்திய கம்யூ.கட்சி வலியுறுத்து



இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தா.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 20 இற்கு மேற்பட்டவர்கள் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். நான்கு மாணவர்கள் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பின்னர், மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன என்பதை மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் மிகவும் கடுமையாக கண்டனம் தெரிவித்து வரும் இன்றைய சூழலில் தான் குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு, இந்தச் செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய நியூஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக வீரன் ஏ.ஜெயரூபனுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார். (23)

# கிளிநொச்சியை வீழ்த்தியது யாழ்.அணி

யாழ்ப்பாணம்,டிசெ.5

பிறீமா வெற்றிக் கிண்ணத்துக்கான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுத் தொடர் ஆட்டமொன்றில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணி வெற்றி பெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடியது கிளிநொச்சி மாவட்ட அணி. எனினும் அந்த அணியால் திட்டமிட்டபடி ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. எந்தப் பக்கம் பந்தை அடித்தாலும் அவற்றை அபாரமாகத் தடுத்து கிளிநொச்சி அணியின் ஓட்ட வேகத்துக்கு முட்டுக் கட்டை போட்டனர் யாழ்.அணியின் களத்தடுப்பாளர்கள்.

இதேவேளை பந்து வீச்சிலும் சிறப்பான பெறுபேற்றை யாழ். வீரர்கள் வெளிப்படுத்தினர். இதனால் கிளிநொச்சி அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப இலக்க ஓட்டங்களுடன் மைதானத்தில் இருந்து நடையைக்கட்டினர்.

முதலில் அதிரடியாக ஆட முற்பட்டு இலக்குகளைப் பறிகொடுத்ததால் கிளிநொச்சி அணியின் பின்வரிசை வீரர்கள் ஓட்டம் எடுப்பதை விடவும் களத்தில் நிலைத்து நிற்பதையே நோக்கமாகக் கொண்டு துடுப்பெடுத்தாடினர். கிளிநொச்சி அணி 46.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதில் கஜீபன் 19 ஓட்டங்களையும், ஜெ. கஜீபன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மாவட்ட அணி சார்பில் பானுகோபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குளையும், கிரிசாந்தன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குக்ளையும் வீழ்த்தினர்.

105 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்கைத் துரத்தத் தொடங்கியது யாழ்.மாவட்ட அணி.

கிளிநொச்சி அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தினர். ஆயினும் அதனையும் தாண்டி யாழ். அணி வீரர்கள் ஓட்டங்களை குவித்து வெற்றி இல்க்கை நோக்கி முன்னேறிக் கொண்டே இருந்தனர். போதியளவு ஓட்டங்களைக் குவித்து சவால்தரக்கூடிய வெற்றி இலக்கை கிளிநொச்சி அணி வீரர்கள் நிர்ணயிக்கத் தவறியதால், பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டும் அந்த அணியால் தோல்வியைத் தடுக்க முடியவில்லை. 22 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்று கிளிநொச்சியை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது யாழ்.மாவட்ட அணி.

இதில் அலன்ராஜ், ஜெகசர்மா ஆகியோர் ஆட்டமிழக்காது தலா 26 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி மாவட்ட அணி சார்பில் வினோசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (ஙு-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.5

பிறீமா வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான லீக் முறையிலான மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானம்**

முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

**மாங்குளம் மகாவித்தியாலய மைதானம்**

யாழ்.மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி (ஙு-23)

# சென்.ஜோன்ஸ்–ஹாட்லி நாளை கிரிக்கெட் மோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.5

சென்.ஜோன்ஸ் கல்லூரி ''ஏ'' அணிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையே 13 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3 இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டமொன்று நாளை வியாழக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஙு-23)

# திருகோணமலை லீக் உதைபந்து சனி,ஞாயிறு போட்டி விவரங்கள்



திருகோணமலை,டிசெ.5

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஒன்றை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நடத்திவருகின்றது.

எதிர்வரும் சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**சனிக்கிழமை பி.ப. 3 மணி**

பற்றிமா விளையாட்டுக் கழக அணி எதிர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி

**ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி**

ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழகம் எதிர் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம்

**பி.ப. 3 மணி**

பற்றிமா விளையாட்டுக்கழகம் எதிர் யமாலியா விளையாட்டுக்கழகம். (ஙு-23)

# வடமாகாண வீர, வீராங்கனைகளுக்கு வர்ண விருது வழங்கல் டிசெம்பரில்

யாழ்ப்பாணம்,டிசெ.5

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வருடாந் தோறும் நடத்தப்படும் வர்ண இரவு நிகழ்வு இந்த மாதம் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத் துறையில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களை தெரிவு செய்து கௌரவிக்கும் வகையிலேயே இந்த நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

'வர்ண இரவுக்கான' விருதுகளைப் பெறுவதற்கு தகுதிவாய்ந்த விளையாட்டு வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வீரர்களுக்குரிய தகுதிகள் வருமாறு-

★ இலங்கைத் தேசிய அணியினை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையில் நடைபெறும் சர்வதேச போட்டியொன்றில் வட மாகாண வீரர் பங்குபற்றியிருத்தல்.

★ இலங்கை தேசிய அணியினை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேச போட்டியொன்றில் வட மாகாண வீரர் பங்குபற்றி இருத்தல்.

★ இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேசப்போட்டியொன்றில் அல்லது இலங்கையில் நடைபெறும் தேசிய சிரேஷ்ட , கனிஷ்ட போட்டியொன்றில் வட மாகாண வீரர் பங்குபற்றி பதக்கம் பெற்றிருத்தல்.

★ வட மாகாண மட்டத்தில் நடைபெற்ற மாவட்டங்களுக்கிடையிலான போட்டியொன்றில் பங்குபற்றி புதிய சாதனையொன்றினை நிலைநாட்டியிருத்தல்.

மேற்படி தகுதிகளைக் கொண்ட வீரர்களும், வீராங்கனைகளும்

வடமாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஙு-23)

# அருளானந்தம் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்டுக்கு விண்ணப்பிக்குக

வடமராட்சி,டிசெ.5

மூத்த பத்திரிகையாளரும் ஆசிரியருமான அமரர் க. அருளானந்தம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது. குறித்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி புற்றளை மகாவித்தியாலய மைானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டி தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பங்களையும் புலோலி நண்பர்கள் விளையாட்டுக்கழக செயலாளர் அ.பிரதாப்பிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஙு-8)


# தேசிய மட்ட கயிறிழுத்தல் போட்டி



திருகோணமலை,டிசெ.5

இலங்கை கயிறிழுத்தல் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான விலகல் முறையிலான கயிறிழுத்தல் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வெலிசறை நவலோகா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக திருகோணமலை மாவட்ட கயிறிழுத்தல் ஆண்கள் அணியினர் கொழும்பு செல்லவுள்ளனர். (ஙு-23)



ஜப்பான் கராத்தே கிஸ்தோ சுக்காய் அமைப்பினால் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ஜெயகாந்தன் அகல்யா காட்டா மற்றும் சண்டையில் 3 ஆம் இடத்தையும், மானிப்பாய் சோதி வேம்படி ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த ஜெயகாந்தன் அஸ்வின் காட்டாப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், சண்டையில் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் கராத்தே பயிற்றுநர் சென்சேய் ப.ஜெயந்தனின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஙு-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திணறுமா இங்கிலாந்து

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் கொல்கத்தாவில் இன்று ஆரம்பமாகின்றது. ஆடுகளம் குறித்து சர்ச்சைகள் ஏற்பட்ட நிலையில், இந்த ஆட்டம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் இரண்டு டெஸ்ட் முடிந்த நிலையில், தொடர் 1-1 என்று சமமாக உள்ளது. இரு அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட், கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் பங்கேற்கும் 100 ஆவது டெஸ்ட், விமர்சனத்துக்கு இடையே களமிறங்கும் சச்சின், தொடரில் வெற்றி பெற இந்த ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் டோனி, என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் உள்ளன.

**ஆடுகள சர்ச்சை**

முதல் நாளில் இருந்தே சுழலும் வகையில் ஆடுகளம் தேவை என்று, இந்திய அணித் தலைவர் டோனி கேட்டார். எதிர்ப்பு தெரிவித்த ஈடன் கார்டன் ஆடுகள தயாரிப்பாளர் பிரபிர் முகர்ஜிக்குப் பதில், கிழக்கு மண்டல ஆடுகள தயாரிப்பாளர் ஆஷிஸ் பவுமிக்கை நியமிக்க, பி.சி.சி.ஐ. வற்புறுத்தியது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மருத்துவ விடுப்பில் செல்ல இருந்த பிரபிர் முகர்ஜியை, பெங்கால் கிரிக்கெட் சங்கம் (சி.ஏ.பி.,), சமாதானம் செய்தது. இதனிடையே மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆடுகளம், டோனி கேட்டுக்கொண்டது போல அமைக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

நவம்பர் 2-5 இல் நடந்த பெங்கால் - ராஜஸ்தான் அணிகள் மோதிய ஆடுகளத்தை, இந்தியா-இங்கிலாந்து ஆட்டத்துக்கு வேண்டும் என்று கேட்கப்பட்டது. இதை ஏற்க மறுத்த பிரபிர் முகர்ஜி, பெங்கால்-குஜராத் அணிகள் மோதிய (நவம்பர் 17-20) ஆட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஆடுகளத்தையே, மீண்டும் தயார் செய்துள்ளதாக தெரிகிறது.

**சாதகமாக இருக்குமா**

இந்த ஆட்டத்தில் குஜராத் அணி 18 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் என்ற நிலையில் இருந்து மீண்டு, ஆட்டத்தை சமநிலையில் நிறைவு செய்தது. பிரபிர் முகர்ஜி கூறுகையில், இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர்கள் சுவான், பனேஷர் இங்கு சிறப்பாக செயல்படலாம், என்றார்.

**தவறான செயல்**

சுழலுக்கு சாதகமாக ஆடுகளம் வேண்டும் என்ற டோனியின் வேண்டுகோள் குறித்து, இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் நாரி கான்டிராக்டர் (வயது-78), கூறுகையில், எங்களது காலத்தில் ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக மாறும் என்று நம்புவோம். இப்படித்தான் வேண்டும் என்று, வெளிப்படையாக ஒருபோதும் கூறியது இல்லை. டோனியின் செயல் தவறானது, என்றார்.

**ஸ்டீவன் பின் 'ரெடி'**

தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, இந்தியாவுக்கு எதிரான முதலிரண்டு டெஸ்டில் இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஸ்டீவன் பின் பங்கேற்கவில்லை. தற்போது காயம் குணமடைந்த நிலையில், கொல்கத்தாவில் இன்று தொடங்கவுள்ள மூன்றாவது டெஸ்டில், விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஸ்டீவன் பின் கூறுகையில், காயம் காரணமாக முதலிரண்டு டெஸ்டில் விளையாட முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. காயம் குணமடைந்திருப்பதால், டெஸ்ட் போட்டியில் விளையாடக் கூடிய உடற்தகுதியை பெற்றுள்ளேன். எனது பங்களிப்பு தேவைப்படும் பட்சத்தில், மூன்றாவது டெஸ்டில் விளையாட தயாராக இருக்கிறேன், என்றார்.

**கோபத்தில் டோனி**

இந்திய அணி கொல்கத்தா மைதானத்தில் நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்டது. அப்போது இந்திய அணித் தலைவர் டோனி, ஆடுகள தயாரிப்பாளர் பிரபிர் முகர்ஜி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதை தவிர்த்தனர். பயிற்சியாளர் பிளட்சருடன் ஆடுகளத்தை பார்வையிட்ட டோனி, பின்னர் 70 மீற்றர், தூரத்தில் அமைதியாக அமர்ந்திருந்த, முகர்ஜியை, கோபத்துடன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். (5)

# மத்தியூஸ் முக்கியமானவர்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியின் தொடர் முழுவதிலும் இலங்கை டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டியின் உப தலைவர் அன்ஜலோ மத்தியூஸ் முக்கியமானவர் என்று இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை 'ரி-20' சர்வதேச அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட அன்ஜலோ மத்தியூஸ், அண்மையில் இடம்பெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி சார்பாகத் துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார். இலங்கையின் முன்னணி வீரர்கள் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்த போதிலும் ஆறாம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடிய அன்ஜலோ மத்தியூஸ், 2 போட்டியிலும் சிறப்பாக ஆடியிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்தன, அந்தத் தொடர் முழுவதும் அன்ஜலோ மத்தியூஸ் சிறப்பாக ஆடியிருந்ததாகவும், கொழும்பில் மாத்திரமன்றி காலியிலும் அவரது சிறப்பான ஆட்டம் காணப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

காலியில் அவர் கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் துடுப்பெடுத்தாட வேண்டியிருந்ததாக மஹேல தெரிவித்தார்.

அழுத்தமான சூழ்நிலைகளில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கும்போது அந்தச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு தன்னை மாற்றியமைத்து அன்ஜலோ மத்தியூஸ் ஆடினார் எனக் குறிப்பிட்ட மஹேல ஜெயவர்தன, ஆறாம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடுவது இலகுவானதல்ல எனவும், ஆனால் அந்த இடத்தில் துடுப்பெடுத்தாடுவதற்குரிய மேலதிக மன உறுதி அன்ஜலோ மத்தியூஸிடம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

அன்ஜலோ மத்தியூஸின் மேலதிக மன உறுதி காரணமாகவே இலங்கையின் எதிர்கால அணித்தலைவராக அவரை அடையாளம் கண்டுள்ளதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, சிறந்த அணித்தலைவருக்குரிய தகுதிகளை அவர் வெளிப்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)




## கிரிக்கெட் சபைத் தலைவராக முதல் பெண்

உலகளவில் கிரிக்கெட் சபை ஒன்றின் தலைவராக முதன் முறையாக பெண்மணி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கென்ய நாட்டு கிரிக்கெட் சபையின் தலைவராக ஜெஹ்ரா ஜன் மொஹமத் என்ற பெண் போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.

49 வயதாகும் அவர், முன்னர் கென்ய கிரிக்கெட் அணியின் பயணங்களை திட்டமிடும் குழுவின் துணைச் செயலராக இருந்தார். மேலும் கென்யாவிலிருந்து கிரிக்கெட் நடுவராக தெரிவாகியிருக்கும் முதல் பெண்மணியும் ஜெஹ்ரா தான்.

அடுத்து நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு கென்ய அணியை தகுதி பெற வைப்பதே தனது உடனடி இலக்கு என்று தெரிவித்துள்ளார்.

கென்ய கிரிக்கெட் சபை பல [illegible]லமாக முடங்கிக் கிடந்தது [illegible]றிப்பிடத்தக்கது.

(5)

# முறுகல்

இலங்கைக் கிரிக்கெட் சபையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து ஹரூன் லோகார்ட் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபை இதுவரை நடவடிக்கையேதும் எடுத்திருக்காமை குறித்து இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனது விமர்சனங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பதவி வகித்த ஹரூன் லோகார்ட், அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் இலங்கையின் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களைப் பிரேரிப்பதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபையால் பணிக்கமர்த்தப்பட்டதோ, அவர் தனது இறுதி அறிக்கையில் இலங்கைக் கிரிக்கெட் சபை மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைப் பரிந்துரைத்திருந்தார்.

அவர் வழங்கியிருந்த பிரேரிப்புக்களில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வில் விளையாட்டுத்துறை அமைச்சரின் தலையீடு, இலங்கைக் கிரிக்கெட் சபையின் மோசமான பெயர், இலங்கைக் கிரிக்கெட் சபையின் நெருக்கடியான நிதி நிலை, நிர்வாகத்தில் காணப்படும் தொழில்முறையற்ற நடவடிக்கைகள், வெளிப்படையற்ற தன்மை ஆகியன இல்லாது செய்யப்பட வேண்டும் எனவும், முறையான நிறுவன அடிப்படையொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர், ஹரூன் லோகார்ட்டின் அறிக்கை தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபை இதுவரை கூட்டங்களெவற்றையும் நடத்த முயற்சிக்காமை குறித்து அதிர்ச்சியும், அதிருப்தியும் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUBRA
2013 - புலமைப் பரிசில்
சித்தன்கேணி || கைலைநாதன்
ஆரம்பம்05.12.2012 - 4.30 மணி (புதன்)
வாரம் தோறும்:- புலமைச்சுடர் வெற்றித் தேர்வு பரீட்சைகள்
வட்டுக்கோட்டை || பிரதீபன்
ஒரு பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே.
SUBRA கல்வி நிறுவனம்
சித்தன்கேணி கிளை: வட்டுக்கோட்டை
ஆண்டு 01 முதல் O/L வரையான
வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
ENGLISH MEDIUM CLASSES FROM Grade 06 to 11
ஆரம்பம்: டிசெம்பர் 05 மாலை 4.30 மணி
(அமிர்த சித்த யோகத்தில்)
புதிய கல்வியாண்டு 2013
வலி. மேற்கில் தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்
SUBRA மட்டுமே.
(C/3165)(3.6)

# புத்திசாதுர்யமான நடவடிக்கை

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸை இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின்போது விசேட பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராகப் பயன்படுத்தியமை ஒரு புத்திசாதுர்யமான நடவடிக்கை என்று இலங்கை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரசல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை, நியூஸிலாந்து அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடருக்கான நியூஸிலாந்து அணியின் விசேட பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டிருந்தார். நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் ஷேன் பொன்ட்டிற்கு மேலதிகமாகவே அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தத் தொடரில் நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி நியூசிலாந்து அணி 1-1 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரைச் சமப்படுத்த உதவியிருந்ததோடு, இந்தத் தொடரின் நிறைவில் நியூசிலாந்து அணியின் தலைவர் ரோஸ் ரெய்லர், அவ்வணியின் வேகப்பந்து வீச்சாளர்கள், சமிந்த வாஸ் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ரசல் ஆர்னல்ட், இலங்கையின் முதல் நிலை வேகப்பந்து வீச்சாளராக சமிந்த வாஸே காணப்பட்டார் எனவும், நியூஸிலாந்து அணியுடன் பணிபுரியக் கிடைத்த வாய்ப்பு அவருக்குச் சிறப்பானது எனவும் தெரிவித்தார். அத்தோடு சமிந்த வாஸின் அனுபவத்தையும், அவரது அறிவையும் பயன்படுத்த நியூஸிலாந்து அணி எடுத்துக் கொண்ட முடிவு மிகவும் புத்திசாதுர்யமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமிந்த வாஸை பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராகப் பயன்படுத்தும் தெரிவு இலங்கை அணிக்குக் காணப்படுவதாகத் தெரிவித்த ரசல் ஆர்னல்ட், ஆனால் திடீரென பயிற்றுவிப்பாளர்களை மாற்ற வேண்டிய தேவை கிடையாது எனவும், தற்போதைய பயிற்றுவிப்பாளர்களின் பதவிக் காலம் நிறைவடையும் போது சமிந்த வாஸ் குறித்தும் கவனம் செலுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (5)

அகரம் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டு 2013
தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும்
மல்லாகத்தில் மாலை 4.30 மணிக்கும் (தமிழ்மொழிமூல வகுப்புக்கள்)
கொக்குவிலில் மாலை 3.30 மணிக்கும் (தமிழ், ஆங்கிலமொழிமூல வகுப்புக்கள்)
சித்தாமிர்தயோக நன்நாளாம் இன்று (05.12.2012)
ஆரம்பமாகின்றன.
"பொன்கிடைத்தாலும் புதன்கிடையாது"
"அகரம் குணதிசையின் ஒளிக்கீற்று"

COMPUTER SALE
HP Computer 24,750/= INTEL 3.0 GHZ, 1GB Ram, 80GB HDD, LCD Monitor, DVD Rom, 3L Key, Mouse & PAD, Speaker.
FREE
ஒரு வருட உத்தரவாதம்
WEB Cam / Head Phone / Cover / 8GB Pen
St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
0212224865 / 0750698608
(6/18804)(3.14)

25வது வருட கல்விச் சேவையில்....
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
புதிய கல்வியாண்டு - 2013
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி
அனுமதிகள் இன்று முதல்...

வேலையாள்கள் தேவை
வீதி திருத்த வேலைகள் செய்வதற்கு வேலையாள்கள் தேவை. குறிப்பாக பலாலி, காங்கேசன்துறை, புத்தூர், மீசாலை போன்ற இடங்களில் வீதி திருத்தம் செய்ய இருப்பதனால் அந்தந்த இடத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:திட்ட முகாமையாளர்
S.Thayaparan -0777711449

## மரண அறிவித்தல்

### குமாரவேலு வேலுப்பிள்ளை



காரைநகர், பாலாவோடை, களபூமியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (03.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், அன்னம்மா ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும், தனபாலசுந்தரம் மோகனாம்பிகை, லோகநாதன், பேரின்பநாயகம், குமாரலிங்கம், இராசேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதசுந்தரம், சரோஜினிதேவி, தவமலர், சிவசோதி, சிவஅம்பிகை, இராசலட்சுமி, தவநிதி ஆகியோரின் அன்பு மாமனும், தவராசா, தினேஸ்குமார், யோகேஸ்வரன், அனுசா, கோகுலன், செந்தில்குமரன், தவக்குமரன், தீபிகா, சிவசங்கர், கஜமுகன், மீனரஞ்சினி, திருக்குமரன், திருச்செந்தூரன், பிரணவன், ரஞ்சினி, நேசினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2012) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் கரைநகர் களபூமி தில்லை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.527, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0773903255, 0213006733
(28359)(3.14)

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் சரஸ்வதி



நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சரஸ்வதி நேற்று முன்தினம் 03.12.2012 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் இரண்டாவது மகளும், உமாதேவி (ஆசிரியை வவுனியா கரும்பணிச்சங்குளம், அ.த.க. பாடசாலை), காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பாமதேவன், மகேஸ்வரன் (லண்டன்), காலஞ் சென்ற லதீஸ்வரன் மற்றும் சுசிலாதேவி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், வலி.கிழக்கு பிரதேச சபை) ஆகியோரின் தாயும், தவலிங்கரத்தினம் (தபாலதிபர், வவுனியா), வளர்மதி, செல்வக்குமார் (உதவி ஆசிரியர், உதயன் பத்திரிகை) ஆகியோரின் பாசமிகு மாமியும், பௌசிகா, மயூரிக்கா, பிறைவாணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2012) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்வட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
இராசபாதை வீதி, கோப்பாய்.

தகவல்:
பாமதேவன் (மகன்)

Ranjanas CERAMIC
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
X-MAS
வருட இறுதி விற்பனைத் தள்ளுபடி
Sale
Don't think just buy
SPECIAL OFFER
metro engineering (pvt) ltd
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05,Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

வங்கியியல் கற்கை நெறி
CBF,DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்
மேலும் ஓர் புதிய பிரிவு
ஆரம்பம்: 08 .12.2012
தொடர்புகளுக்கு:
க.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

நாளை
நீங்கள் ஓர் பொறியியலாளர்
edexcel

HND IN CIVIL ENGINEERING
Leading to B.E. / B.Sc.(Civil Eng.) from UK
HND IN QUANTITY SURVEYING
Leading to B.Sc.(Q.S) from UK
New Batch Starts on 23.01.2013
மாணவர்களே!!
மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளில் ஒன்றில் இணைந்து Toshiba i3 Laptop ஒன்றினை பரிசாக தட்டிச் செல்லுங்கள்.
கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்
மேலதிக விபரங்களுக்கு 021 4 900 900
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உறுதியைப் போல
உழைப்பும் இருந்தால்
வெற்றியை
காண்பாய்.
-ஜெஸ்வி-

# புதன் பொய்கை

A

உதயன் 05 நவம்பர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

துன்னாலைச் செல்வம்



> "ஈழத்தில் மூன்று தசாப்த காலம் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்தது. ஆனால் போரினால் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், இழந்தவைகள் எத்தனை என்ற முழுமையான விவரம் இன்னமும் சர்வதேசத்திடம் கிடைக்க வில்லை. இறுதிப் போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் சர்வதேசப் போர் விதிமுறைகள் மீறப்பட்டதாகவும் இலங்கை அரசு மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

# ஈழத்தமிழர்களை கைவிட்டது ஐ.நா.

இன்று நிலைமை மாறி இலங்கை அரச படைகளின் காலடிப்பட்டு சிதைந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும். தமிழர்களுக்கு ஒரு விடிவு கிடைக்க வேண்டும். மீண்டும் தமிழர்களுடைய பிரதேசம் கட்டி எழுப்பப்பட வேண்டும். தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டு போராட வேண்டும். இந்த மாவீரர் நாளில் உறுதி கொள்வோம்.

ஈழத்தில் மூன்று தசாப்த காலம் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்தது. ஆனால் போரினால் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், இழந்தவைகள் எத்தனை என்ற முழுமையான விடயம் இன்னமும் சர்வதேசத்திடம் கிடைக்கவில்லை. இறுதிப்போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் சர்வதேசப்போர் விதிமுறைகள் மீறப்பட்டதாகவும் இலங்கை அரசு மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. இதுபற்றி ஆராய இந்தோனேஷியாவின் மர்சுகி தருஷ்மனைத் தலைவராகவும், தென்னாபிரிக்காவில் யாஸ்மீன் சூகா மற்றும் அமெரிக்காவின் ஸ்டீவன் ராட்னர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஐ.நா. சிறப்புக் குழுவை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்தார். அந்தக் குழு கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் கட்ட அறிக்கையை அளித்தது.

அந்த அறிக்கையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இறுதிப் போரின்போது ஐ.நா. தனது கடமையைச் சரியாகச் செய்வதற்குத் தவறியிருந்தது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஐ.நா. எவ்வாறு தவறிழைத்தது என்பதை ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் இறுதி அறிக்கை ஐ.நாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதிலேயே 128 பக்கத் தகவல்கள் அகற்றப்பட்டதாகக் கூறி பி.பி.சி. செய்தி சேவை கசியவிட்டது. இதனைத் தொடர்ந்து ஐ.நாவை நோக்கி சர்வதேச சமூகத்தின் பார்வை திரும்பியது. இறுதிப் போரின் போது ஐ.நா. கடமை தவறியதாகக் கூறும் அந்த அறிக்கையை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனும் பின்னர் பகிரங்கமாக வெளியிட்டார்.



ஆனாலும் அந்த அறிக்கையில் பல சரத்துக்கள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளதாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கிடையில் இலங்கை விவகாரத்தில் ஐ.நா. கடமை தவறியதை ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனும் ஒப்புக் கொண்டுள்ளார். இதனையடுத்து பான் கீ மூனையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையில் இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டமை சரியானதே என ஐ.நா. தெரிவித்துள்ளது. ஐ.நா. அமைப்பின் பணியாளர்களை பாதுகாக்கவும் சில இரகசிய ஆவணங்களைப் பாதுகாக்கவும் மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகளைத் தணிக்கை செய்ததாக ஐ.நா. அமைப்பின் உயர் அதிகாரி சுகனா மெல்கொரா தெரிவித்துள்ளார்.

சில தகவல்கள் உள்ளகத் தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. சபை விட்ட தவறுகளை எதிர்வரும் காலங்களில் மீண்டும் விடக்கூடாது என்ற உறுதியை வழங்கி ... இலங்கை அரசு திட்டமிட்டு போரை நடத்தியது. இதனால் போர் வலயத்தில் இடம்பெற்ற துன்பியல் சம்பவங்கள் வெளிவராது போயின என்று சனல்- 4 தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை இலங்கை அரசு தொடங்கும்போது சாட்சியங்களை இல்லாமல் செய்யும் பணிகளையும் திட்டமிட்டு நடத்தியது.

ஆனால் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர்களை அரச படைகள் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றது தொடக்கம் இசைப்பிரியா உட்பட பெண் போராளிகளை மானபங்கப்படுத்திய பின் சுட்டுக் கொன்றது வரை வெளிச்சத்துக்கு வந்தன. முள்ளிவாய்க்காலில் அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் வெளிச்சத்துக்கு வந்தும் என்ன பயன் ஏற்பட்டது. போரை எதிர் கொண்ட நாடுகளில் இப்படியான துன்பியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆகவே அதேபோல் தான் முள்ளிவாய்க்காலிலும் இடம்பெற்றது என்று சொல்லிவிடலாம். ஆனால் போரை எதிர் கொண்ட நாடுகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டன. இலங்கையில் மட்டும் தான் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மீண்டும் இன்னுமொரு போராட்டத்துக்கான வழியினை ஏற்படுத்தி விடுவதற்கான செயற்பாடுகளிலேயே இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.



இறுதிப்போர் இடம்பெற்றிருந்த போது வடக்கிலிருந்து ஊடகங்கள் முதல் கட்டமாக வெளியேற்றப்பட்டன. சர்வதேச ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன. அதன்பின்னர் சர்வதேச அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் வெளியேற்றப்பட்டன. இந்த நிலையிலேயே ஐ.நா. சபையும் அங்கிருந்து விலகிக்கொண்டது. இதன்போதே வன்னியில் இறுதிப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் வெளிவராது போயின. வன்னியில் இறுதிப்போரில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை என்றுமே மறக்க முடியாது. வன்னியில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இலங்கை அரசு எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ள புள்ளி விவரத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வன்னியில் 4 லட்சத்து 29 ஆயிரத்து 59 தமிழர்கள் வசித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் போரின்போது வன்னியிலிருந்து வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து வந்தவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டனர். அவர்களுடன் ஒப்பிடும்போது ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேரைக் காணவில்லை. அவர்களின் கதி என்ன? ஒருவேளை அவர்கள் கொல்லப்பட்டோ அல்லது பலவயமாகியோ இருக்கலாம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் சர்வதேசமும் தமிழர்களுடைய பிரச்சினையில் கையாண்ட விதம் தமிழர்களுடைய வரலாற்றில் என்றுமே மறக்க முடியாதவை. முள்ளிவாய்க்கால் போர் முடிவடைந்த இறுதி இடமாக இருந்தால் தமிழர்களின் தீர்வு விடயத்தில் அக்கறை கொண்டு அதனைச் செயற்படுத்த முன்வர வேண்டும். இல்லாது போயின் முள்ளிவாய்க்கால் இன்னுமொரு போருக்கான ஆரம்ப இடமாக இருக்கும் என்பது வெளிப்படையாகும். இதனை எவராலும் தடுக்க முடியாது போய்விடும் என்பதை உணர்வார்களா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் நண்பர்களே



இந்தோனேசியா வாசியான அப்துல்லா சோலே என்ற 31 வயது டைய நபர் புலி ஒன்றினை உயிர் நண்பனாக்கிக் கொண்டுள்ளார்.

நான்கு வருடங்களாக இடைவிடாது தொடர்ந்து வரும் இவர்களின் நட்பு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

உணவு நேரத்தின்போதும், விளையாடும் போதும் ஒன்றாக இருக்கும் இவர்கள் இடையிடையே சண்டைபோட்டும் கொள்வார்களாம்.

சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தில் உள்ள வென்லிங் என்ற நகரில் வயதான சீனத் தம்பதிகள் வசித்து வருகின்றனர்.

இந்தத் தம்பதிகளின் வீடு அமைந்துள்ள பகுதியில் பிரமாண்டமான சாலை அமைக்க அந்தநாட்டு அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதையடுத்து நிலத்தை கையகப்படுத்தும் பணிகள் நடந்தன. ஆனால் அரசு கொடுக்கும் இழப்பீட்டுத் தொகை மிகக் குறைவாக இருப்பதாகக் கூறி வீட்டைத் கொடுக்க அவர்கள் மறுத்துவிட்டனர்.இதனால் அதிகாரிகள் வேறு வழியின்றி அவர்களது வீட்டை மட்டும் விட்டுவிட்டு, அந்த வீட்டைச் சுற்றி வீதியை அமைத்துள்ளார்கள்.


வீதிக்கு மத்தியில் தனியாக அந்த வீடு மட்டும் வித்தியாசமாக காட்சி அளிக்கிறது.

சீன நாட்டுச் சட்டப்படி எந்த ஒரு தனி மனிதரையும் அவரது வீட்டிலிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்ற முடியாது என்பதால், அவர்களது வீட்டை அரசால் கையகப்படுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதிக்கு நடுவில் வீடு



# இலத்திரனியல் சாதனத்தைப் பயன்படுத்தி பூச்சிகள்



அமெரிக்காவின் சிக்காகோவில் உள்ள ஒருவர் பழைய ஆபரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பல்வேறு பூச்சிகளின் வடிவங்களை உருவாக்கியுள்ளார்.

தாய்லாந்தில் குரங்குகளுக்கான திருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவதுண்டு. இதில் கலந்துகொள்ளும் குரங்குகளுக்காக பலவகையான பழவகைகள் உணவாக வழங்கப்படும்.

இந்த ஆண்டு இடம்பெற்ற இந்த வினோத திருவிழாவுக்காக சுமார் 4000 கிலோ கிராம் எடை கொண்ட பழ வகைகளைக் கொள்வனவு செய்துள்ளனர்.






# குரங்குகளுக்குத் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வலையவன்

# மீன்களின் உலகம்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)



வேட்டையாடும் விலங்குகளைப் பொறுத்தவரை தாடைகள் என்பவை அசையும் சொத்து. சுறா, திருக்கை இனங்கள் குருத்தெலும்புகள். சில மீன்கள் செதிலற்றவை. உலகில் 29,400 மீனினங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏராளம் மீன்களை இனி மேல்தான் அடையாளப்படுத்த வேண்டும். உலகின் மொத்த நீர்ப்பரப்பில் 0.01 விழுக்காடுதான் (ஆயிரத்தில் ஒரு பகுதி) நன்னீர். ஆனால் மீனினங்களில் 40 விழுக்காடு மீன்கள் இங்குதான் வாழ்கின்றன.



இந்தியாவில் வாழும் 2500 மீனினங்களில் 930 இனங்கள் நதிகள், ஏரி, குளங்களில் வாழ்பவை. இவற்றில் 350 இனங்கள் வணிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

மீன் ஒரு குளிர் இரத்தப் பிராணி. சில விதிவிலக்குகளும் உண்டு. சில சூரை இனங்கள், சில ''சுறா'' இனங்கள், பட்டாம்பூச்சி, அயிலை போன்ற மீன்கள் நீர்வாழ்வன. நீண்ட நேரம் நீருக்கு வெளியே உயிருடனிருக்கும் சில மீன்களும் உண்டு. மரமேறும் பெர்ச் மீன் ஓர் உதாரணம். இவை தரைக்கு வருகையில் தவளையைப் போன்று தோலால் மூச்சுவிடும், உணவுப்பாதையுடன் இணைந்திருக்கும் சவ்வுப் பைகளில் காற்றை இழுத்தும் மூச்சு விடும்.

> “சாதாரண மீன்கள் ஒலி எழுப்புவதில்லை. சையானிடே குடும்பத்தைச் சார்ந்த மத்தள மீன் ஒலி எழுப்பும். மீன்களின் கேள்வித் திறன் இனத்திற்கு இனம் மாறுபடுகிறது.

சாதாரண மீன்கள் ஒலி எழுப்புவதில்லை. சையானிடே குடும்பத்தைச் சேர்ந்த மத்தள மீன் ஒலி எழுப்பும். மீன்களின் கேள்வித்திறன் இனத்திற்கு இனம் மாறுபடுகிறது. நீச்சல் பைகள் (காற்றுப் பைகள்) சில இனங்களின் கேள்விப் புலனுக்கு உதவுகின்றன. கடலின் ஆழத்தில் 700 மீற்றருக்கு கீழே வெளிச்சம் துப்புரவாக இராது. இங்கு வாழும் பெருமளவு மீன்களும் ஒலி உமிழ்பவை. ஒளி உமிழும் செல்களினால் தம்மை அடையாளம் காட்டிக் கொள்கின்றன. எதிரிகளிடமிருந்து தப்பிக்க, இரைகளைக் கவர்ந்திழுக்க, இணைகளை அழைக்க... இவ்வாறு அதிகமான நோக்கங்களை இந்த ஒளிரும் செல்கள் நிறைவேற்றுகின்றன.

மீன்களால் ஒலி, ஒளி மட்டுமே உற்பத்தி செய்யமுடியும் என்பதல்ல. தென் அமெரிக்காவில் கத்தி மீன்களும் ஆபிரிக்காவில் யானை மீன்களும் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. 20 முதல் 600 வோல்ற் மின்னழுத்தம் வரை நான் அடிச்சா தாங்க மாட்ட, வீடு போயி சேர மாட்டே என்று எதிரிகளை எச்சரிப்பதற்கும் இரைகளை இமைப்பொழுதில் லபக்கென்று விழுங்குவதற்கும் தான் இந்த அதிர்ச்சி வைத்தியம்!

இனப்பெருக்கம் செய்வதில் கில்லாடி மீன் ஹில்ஷா. இருபது சென்டிமீற்றர் நீளம் கொண்ட ஹில்ஷா மீன் பதினாறு இலட்சம் முட்டைகளை ஏக காலத்தில் இடும். குஞ்சுகளைப் பேணுவதில் 25 விழுக்காடு மீன் இனங்கள் பொறுப்புடன் நடந்துகொள்கின்றன. குஞ்சு மீன்களைப் பேணுவதில் தந்தை மீன்கள்தான் பெரும் பொறுப்பை எடுத்துக் கொள்கின்றன.

பூக்களும் பட்டாம்பூச்சிகளும் நிலத்தில் அழகு சேர்ப்பதுபோல் கடலில் மீன்கள் அழகு கூட்டுகின்றன. பவளப் புற்றுகள் இயல்பான நிறம். சாந்தெல்லே என்னும் பாசிகளால் உருவாகின்றன. இங்குள் கார்டினால் மீன், தூண்டில் மீன், பட்டாம்பூச்சி மீன், கிளிமீன், டாம்செல், ராஸ் மீன்கள் எல்லாமே பிரகாசமான நிறங்கள் கொண்டவை. பாதுகாப்பு மற்றும் இரைதேடும் காரணங்களுக்காக மீன்களின் முதுகுப் பகுதியில் பிரகாசமான நிறமும் அடிப்பகுதியில் வெளிறிய நிறமும் கொண்டிருக்கும். மீனை மேலிருந்து பார்த்தால் ஆழக்கடலின் இருண்ட நிறத்தோடு பொருந்தும், கீழிருந்து பார்த்தால் மேற்கடலின் வெளிறிய நிறத்தோடு பொருந்தும்.

கிரேட் பாரியர் ரீஃப் பகுதியில் வாழும் குண்டுப் பாப்பா மீன்தான் (ஷிண்ட் லேரியா ப்ரெவிபங்குயிஸ்) உலகிலேயே மிகச்சிறிய மீன்வகை. பருவ வயதில் இதன் அதிகபட்ச நீளம் ஏழே மில்லி மீற்றர். மிகக்குறைந்த ஆயுளுள்ள மீன் பவளப் புற்றுகளில் வாழும் மிக்மி கோபி. இதன்ஆயுள் 59 நாள் தான். இந்தோனேசிய பகுபிக் பாய்மீன் (இஸ்டியோஃபோரஸ் ப்ளாடிடீரஸ்) நீச்சலில் அதிவேகம் காட்டுகிறது. மணிக்கு 110 கிலோ மீட்டர்! ரிங்கோ போன் டைபஸ் என்னும் திமிங்கில சுறாக்கள் குருத் தெலும்பு வகையில் நீளமானவை. 18 மீற்றர் நீளம் வரை வளர் கின்றன. முதுகுநாண் உள்ளவற்றில் நீளமான இனம் துடுப்பு மீன் (ரெகாலிகஸ் க்ளெனே) 17 மீற்றர் நீளம் வரை வளர்கின்றன. எடை அடிப்படையில் சூரிய மீனுக்கு தான் (மோலா மோலா) முதலிடம். 2300 கிலோ!


(தொடரும்)

# யாருக்காகச் சேவை?

சிறுவர்களுக்கு ஒன்றைச் சொன்னால் அதே எதிர்பார்ப்பில் இருப்பார்கள். அவர்களுக்கு எதையாவது தருவதாகச் சொல்லி விட்டுக் கொடுக்காமல் விட்டால் தாங்கமாட்டார்கள். வடமாகாணச் சிறுவர்களை ஒன்றிணைத்து விழா ஒன்று அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. இந்த நிகழ்வுக்கு வடமாகாண அமைச்சின் செயலாளர் ஒருவரே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுப் பெரியளவில் விளம்பரப்படுத்தப்பட்டது.

குறித்த அமைச்சின் செயலாளர் - யாழ்ப்பாணத்தில் மத்திய அரசிலிருந்து கடந்த வருடமே மாகாண அமைச்சுக்கு சென்றிருந்தார். வழமையாக வடமாகாண நிகழ்வுகளுக்கு எல்லாம் தப்பாமல் தலை நீட்டும் நாட்டாமைக்கு இந்த நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

விழா ஆரம்பமாவதற்குரிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருந்த நிலையில் பிரதம விருந்தினராகப் பெயர் போடப் பட்டிருந்த குறித்த செயலாளரோ அல்லது மாகாண சபையின் உயர் அதிகாரிகளோ எவரும் வரவில்லை. நிகழ்வை நிறுத்தும் கட்டத்துக்குச் சென்ற நிலையில், முன்னைய மாகாணப் பணிப்பாளராக இருந்த ஒருவர், பிள்ளைகள் பாவம். அதுகளுக்காக நிகழ்வை நடத்த வேண்டும் என்று சொல்லி நிகழ்வை நடத்தி முடித்துள்ளார்.




குறித்த பணிப்பாளர் - தேர்தல் தோல்வியுடன் நாட்டாமையால் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தவர்.

இதேவேளை யாழ். நகரில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு நாட்டாமை பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டதால், வடமாகாணத்தில் நாட்டாமைக்கு கீழே பணிபுரியும் அத்தனை திணைக்களத் தலைவர்களும் தங்களின் திருமுகங்களைக் காட்டிக் கொண்டனர்.

ஆனால் நாட்டாமை வராத நிகழ்வுகளுக்கு யாரும் எட்டிப் பார்ப்பதில்லை. அதனால் குறித்த நிகழ்வுகள் பாதிக்கப்படுவது பற்றியும் கவலையுமில்லை. மொத்தத்தில் பலரும் மக்களுக்காகச் சேவைசெய்யாமல் நாட்டாமைக்காகவே இவர்கள் ஓடிப்போடிச் சேவை செய்வதாகத் தோன்றுகிறது. வடமாகாண தலை அலுவலகங்கள் எப்போது நல்லா வரும்?

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

கடந்த 27 வருடங்களாக எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் உதயன் பத்திரிகை வீறுநடை போட்டு வருகின்றது.

ஏனைய பத்திரிகைகளோடு ஒப்பிடும் போது படிக்க வேண்டிய பல விடயங்களை உள்ளடக்குவதில் இன்னமும் உதயனுக்குத்தான் முதலிடம்.

சில விடயங்களைச் சீர் செய்தால் உதயனின் பெருமை மேலும் உயரும். சில நாள்களில் வழமையாகப் பிரசுரமாகும் விடயங்கள் சில அரைத்த மாவையே அரைத்து வழங்குவது போன்று அமைந்து விடுகின்றன. இதனை ஆசிரியர் கவனித்து சீர் செய்ய வேண்டும்.

எழுத்துப் பிழைகளும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சமீப நாள்களில் இது அவதானிக்கப்பட்டுள்ளது. கட்டுரைகள் அவசர கோலத்தில் அமையாது தர்க்க ரீதியாகச் சிந்தித்து எழுதப்பட்டால் அவற்றின் பெறுமதி மேலும் உயரும்.

**சு.கணபதிப்பிள்ளை,**
**துன்னாலை, கரவெட்டி.**

★ ★ ★

28 ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயன் நாளேடு இன்னும் பல்லாண்டு காலம் உன் பணி தொடர முதலில் என் நல்வாழ்த்துக்கள்.

'காய்க்கின்ற மரத்துக்குக் கல்லெறிகள் விழும்'. அதுபோல் எல்லோரும் பார்க்கின்ற நேசிக்கின்ற உனக்கும் அடிக்கடி சொல்லடிகள், மறுப்புக்கள் வரும். இதையெல்லாம் கண்டு நீ ஒரு போதும் பயம் கொள்ளாதே! உண்மைக்கும் நீதிக்குமாக நீ போராடு. எங்கு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதோ, அங்கு மக்களுக்காக உன் குரலை ஓங்கி ஒலிக்கச் செய். நீ மக்களின் பிள்ளை. இள இரத்தம் கொதிக்கும் 28 அகவை உனக்கு. துடிப்போடு உன் பணியைத் தொடர். எப்போதும் உனக்கு மக்கள் சக்தி பலமாக இருக்கும்.

ஒரு வேண்டுகை..? எப்போது நீ கலர்ப் படங்கள் போட்டு அசத்தப் போகின்றாய். அந்த நாளை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றேன்.

**பிறேமா, அராலி**

★ ★ ★

உதயன் வாசகனாகிய நான் நினைப்பதற்கேற்ப பல சுவாரஸ்யமான விடயங்களை வெளியிடுகிறாய். அந்த வகையில் இலக்கிய ஆக்கங்களில் உதயனின் தரம் குறைவாகவே இருப்பதாக உணர்கிறேன். இலக்கியத்தில் சிறுகதை, கவிதை, கட்டுரைகள் நிறைய இன்றைய காலத்தை ஒட்டியதாக வெளி வரவேண்டும்.

**மானியூரான்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு மாற்றும் வண்ணத்துப் பூச்சிகள்

■ ஜீவானந்தம்



நாம் முன்னர் சொன்ன நான்கு இன வண்ணத்துப்பூச்சிகளும் ஒன்றாகவே இடம்பெயர்வதாக நினைத்தோம். ஆனால் பின்னர் தான் மூன்று வகைகள் மட்டும் ஒன்றாக இடம்பெயர, நீலப் புள்ளி வண்ணத்துப் பூச்சி அவ்வப்போது பிரிந்தும் கூடியும் பறக்கின்றன. இந்த காக்கை வகைப் வண்ணத்துப்பூச்சிகள் இடப்பெயர்ச்சி காலத்தில் சமவெளிகளில் பங்கேற்க வில்லை என்பதை பின்னர் அறிந்தோம்.

வண்ணத்துப்பூச்சிகளைப் பின் தொடர்ந்து செல்வதில் இயற்கை ஆர்வலர்கள் ஆர்வம் காட்டினால் பல அரிய தகவல்கள் கிடைக்கும். சில நிமிடங்களே தென்படும் அந்த அழகிய அணிவகுப்பைக் காண நாம் காத்திருக்க வேண்டும். லட்சக்கணக்கான வண்ணத் துப்பூச்சிகளின் அழகு அணிவகுப்பு, ஒவ்வோர் ஆண்டும் நடக்கத்தான் செய்கிறது. வலிமையற்ற அந்த மெல்லிய வண்ணத்துப்பூச்சிகளின் நீண்ட நெடும் பயணம் அணுவின் வலிமையை நினைவூட்டுகிறது. பறப்பதற்கான ஆற்றலை



அவை எங்கிருந்து பெறுகின்றன. எப்படி அதைத் தம் உடலில் சேமித்து வைத்துக் கொள்கின்றன? லட்சக்கணக்கான மலர்களின் தேனை உண்ணும் வண்ணத் துப்பூச்சிகள் தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கும், இனப்பெருக்கத்துக்கும் செய்யும் ஒப்பற்ற சேவை கண்ணுக்குத் தெரியாத மகத்தான சேவை.

உணவுச் சங்கிலி அறுபடாமல், இயற்கையின் பயணம் தொடர வண்ணத்துப் பூச்சிகளின் பங்களிப்பு ஒப்பற்றது. எண்ணற்ற பறவைகள், சிலந்திகள், மீன் இனங்கள், சிறு பூச்சிகளின் பசி தீர தம்மை உணவாகத் தருகின்றன. இடம் பெயரும் வண்ணத்துப்பூச்சிகள், மண்ணைக் குழைத்து இனப்பெருக்கம் செய்ய முயற்சிக்கும்போது, நீரில் வாழும் மீன்களுக்கும் தவளைகளுக்கும் உணவா கின்றன. வானத்துப் பறவைகளுக்கு விதைக்காமல், அறுக்காமல் உண்ணக் கிடைப்பவை இந்த வண்ணத்துப்பூச்சி களே.


லட்சக்கணக்கான ஆண்டுகளாக இயற்கையின் அத்தனை சீற்றங்களையும் தாக்குதல்களையும் தாங்கி வாழ்ந்து வரும் வண்ணத்துப்பூச்சிகளுக்கு நவீன உலகமும், நாகரிக வேதி மனிதனும் சாவு மணியடிக்கின்றனர். இயற்கையை அழித்து, வேதி நஞ்சைத் தூவி, உலகையே அழித்து வருகிறான் மனிதன். நாற்புறச் சாலைகளிலும், பறந்து செல்லும் வாகனங்களிலும் அடிபட்டு நசுங்கிச் சாகும் வண்ணத்துப் பூச்சிகளுக்காக கண்ணீர் விடுபவர் இருக்கிறார்கள்? யானைகளுக்கும் புலிகளுக்கும் சிறப்புப் பூங்காக்கள் அமைக்க நினைப்பவர்களை வண்ணத்துப்பூச்சிகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை.

வண்ணத்துப்பூச்சிகளைக் காப்பது என்பது வண்ணத்துப்பூச்சிகளுக்காக மட்டும் அல்ல. மலர்கள் கனிகளாகவும், பறவைகள், பூச்சிகள் வாழவும், நமது உணவை சுவையாக்கும் தேனுக் காகவும், இயற்கையின் வளமான எதிர் காலத்துக்காக மனிதகுலத்தின் எதிர் காலத்துக்காக வண்ணத்துப் பூச்சிகள் மீது நாம் அக்கறை செலுத்தியாக வேண்டும்.

வண்ணத்துப் பூச்சிகளின் அணிவகுப்பை நமது ராஜபாட்டை யென பாதுகாப்போம். வேதிநஞ்சு விவசாயத்தை விட்டு இயற்கை வேளாண்மைக்கு மாறினால் வண்ணத் துப் பூச்சிகள் வாழும். நாம் வளர்க்கும் ஒவ்வொரு மரமும், மலரும், ஒவ்வொரு பூவும் வண்ணத்துப்பூச்சி களின் வாழ்வின் ஆதாரமாகும். மனிதர்களையே மதிக்காமல் பறக்கும் அதிவேக வாகனங்கள் வண்ணத்துப் பூச்சிகளுக்கு கருணை காட்டி மெல்லக் கடக்கட்டும் என்று வலியுறுத்துவோம்.

அதிகமான வண்ணத்துப்பூச்சிகளை எங்கு கண்டாலும் அவை எப்போது வந்தன, என்ன வகையென்று குறித்து வையுங்கள். அடுத்த ஆண்டும் அவற்றைக் காண நேர்ந்தால், உலகம் சுகமாக உள்ளதென மகிழுங்கள். கால் மணி நேரத்தில் 25 கிலோ மீற்றரில் எத்தனை வண்ணத்துப்பூச்சிகளைக் காண்கிறீர்கள் என்பது அவற்றை கணக்கெடுக்கும் முறை. நம் வாழ்விடத்தைச் சுற்றி வண்ணத்துப் பூச்சிகள் பாதுகாப்பாக பறந்து கடக்க ஏதாவது செய்ய முயற்சிப்போம். டோக்கியோவில் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தால் டெட்ராய்ட் நகரம் குலுங்குமாம், கேயாஸ் தியரி சொல்கிறது. சிறியது என்பது அழகு மட்டுமல்ல, [illegible]. வண்ணத் துப்பூச்சிகள் பாதுகாப்பாக [illegible]டும்.

# பணிவான பண்பே உயர்வான வாழ்வு



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

■ இணையவன்

புகழ் வரும்போது தன்னடக்கத்தைப் பேண வேண்டும். புகழ் மமதையைத் தருமானால் மமதை விரைவில் அந்தப் புகழை அழித்து விடும்.

கல்வியும் சிந்தனையும் ஒருவனுக்கு சாபக்கேடாகக் கூட மாறலாம். கல்வியும் சிந்தனையும் ஒருவனை, அவனது உலகத்தை விரிவு படுத்துகிறது. அதோடு சேர்ந்து அவனது ஈகோவும் அதாவது தான் என்ற அகந்தையும் வளர்கிறது. பிறருக்கும் அவனுக்கும் இடையே முதலாளி தொழிலாளி போன்ற இடைவெளி அதிகரிக்கிறது. தனித்தனி தீவுகளாக மாறுகிறார்கள். இதனால் தான் கற்றவர்கள் ஒத்துப்போவதில்லை. படித்தவர்கள் தான் அதிகம் விவாகரத்துச் செய்கிறார்கள். கற்றவர்கள் தான் அதிகம் குழம்புகிறார்கள். உதாரணமாக நாட்டு வைத்தியத்தில் எல்லா நோயும் வாதம், பித்தம், கபம் என்பதில் அடங்குகின்றன. ஆங்கில மருத்துவத்தில் இதற்கு எத்தனை பிரிவுகள் தேவைப்படுகிறன. ஒரு கணினியியல் இன்று எத்தனை பிரிவுகளில் அறியப்படுகின்றன. எத்தனை வித ஒப்பிரேட்டிங் சிஸ்டங்கள் உள்ளன.

பிறர் பேச்சைக் காது கொடுத்து கேட்பதும் பணிவு தான். தன்னடக்கம் உடையவனது அதிகாரம் மந்திரக்கோல் போன்றது. பணிவுள்ளவன் தான் சிறந்த தலைவனாக முடியும். பலருக்கும் பதவி மட்டும் தான் அடையாளம். அதிகார போதையில் பொதுமக்களிடம் பணிவின்றி நடந்து கொண்டவர் பலரும் பதவி போன பின் கிழிந்த துணி தரை துடைக்கப் போவது போல் ஆகிவிடுகிறார்கள். ரவுடிகள் வாழ்வின் பிற்பகுதியில் அனாதைப் பிணமாகிறார்கள்.

சில பெரிய வியாபார ஸ்தாபனங்களில் முதலாளியே வாடிக்கையாளர் களைக் கும்பிட்டு வரவேற்பார். அல்லது அதற்கென்றே தனி ஆள் நியமித்திருப்பார்கள். அவர்கள் போடும் கும்பிடுகள் தான் அந்நிறு வனத்தின் மூலதனம். வாடிக்கையாளர்களை மதிக்காத எந்த நிறுவனமும் உருப்பட்டதில்லை. Customer is always right என்பதும் இது தான்.

தன்னைச் சுற்றித்தான் உலகம் எனும் மாயையை ஒழித்து, உலகத்தில் தான் ஒரு பாகம் எனும் அகந்தையற்ற நிலை மிக உயர்வான நிலை. எதையும் நாம் கொண்டுவரவில்லை, எதையும் எடுத்துச் செல்லப்போவதுமில்லை. எதையும் புதிதாகஅறிகிறோம்; அன்றி எதையும் நாம் உருவாக்கி விடவும் இல்லை. நம் உலகத்தில் தான் மாற்றங்களை ஏற்படுத்து கிறோம். பூமி சுழல்வதை நிறுத்தும் சக்தி நமக்கில்லை பின்பு ஏன் அகந்தை?

இறைவன் இருக்கிறான் என நம்புவது அவரவர் நம்பிக்கை. அவரவர் நிலைப்பாடு. இரண்டுமே சரிதான். அது இறைவன் என்று கொண்டாலும் சரி நம்மைச் சுற்றியுள்ள உலகம் என்று கொண்டாலும் அந்த மாபெரும் சக்திக்கு நம் வாழ்வின் போக்கை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு உண்டு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அந்த சக்தியிடம் பணிவு காண்பிக்க வேண்டும். இந்த செல்வமும் புகழும் இறைவன் தந்தது ;அது இறைவனுக்கே சொந்தம் என்பது பணிவின் சின்னம். சந்தோசத்தை, வெற்றியை உலகத்தோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். இதில் இறைவன் என்பது நான் நீங்கலாக உள்ள உலகம் எனவும் பொருள் கொள்ளலாம். இப்படி தன்னை சுற்றியுள்ளதைப் பெருமைப் படுத்தும் தன்னடக்கமான உள்ளம் ஜொலிக்கும். காரணம் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் பிரதிபலிப்பு தான் என்பது.



எல்லா மதங்களும் முதலில் பணிவை, கீழ்ப்படி தலை அல்லது அகந்தையை அறுக்கத்தான் போதிக்கின்றன. குழந்தைப் பருவத்திலிருந்தே கடைப் பிடிக்க வேண்டிய முதன்மை பண்புகள் இவை. இந்த ரகசியத்தைப் புரிந்து கொள்ளாதவர் வாழ்க்கைப் பயணம் மிககஸ்டமான பாதையில். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org